திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"



கருடாழ்வார்—திருக்கண்ணங்குடி

CONNEMARA PUBLIC LIBRARY
5 - SEP 1961
MADRAS

மாலை 3] பிலவ, ஆவணி
செப்டம்பர் 1961 [மணி 12

ரதி

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு

பொருளடக்கம்

1. திருநாகைக்காரோணம்
2. திருக்கண்ணங்குடி
3. திருநாவுக்கரசு நாயனார்
4. பிள்ளைத்தமிழில் முத்து
5. நவதிருப்பதி அநுபவம்
6. திருப்பாச்சிலாச்சிராமக் கல்வெட்டு வரலாறு
7. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
8 சிவஞான போதம்
9. நாகை சௌந்தரியராஜப்பெருமாள் கோயில்
10. நால்வர் நான்மணி மாலை

திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து.

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்
நுங்கம்பாக்கம் ஹைரோடு,
சென்னை - 34

சென்னை-நுங்கம்பாக்கம் புதிய அஞ்சல் அலுவலகம் (New Delivery Post Office) துவக்கப்பட்டு அதற்கு அஞ்சல் பிரிவு எண் 34 எனக் குறிக்கப்பட்டு இருப்பதால் சென்னை இந்துசமய அறநிலைய (ஆட்சி)த் துறை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர், அணிகலன் ஆய்வு அலுவலர் (Verification Officer) அலுவலகங்களுக்கு அனுப்பும் கடிதங்களில் "சென்னை-34" என்று குறிப்பிடவும். அஞ்சல் பெட்டி எண் 3304.

ஆசிரியர்.

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 3] பிலவ ஆவணி - செப்டம்பர் 1961 [மணி 12

திருநாகைக்காரோணம்

நல்லா ரறஞ்சொல்லப் பொல்லார் புறங்கூற
அல்லா ரலர்தூற்ற அடியார்க் கருள்செய்வான்
பல்லார் தலைமாலை யணிவான் பணிந்தேத்தக்
கல்லார் கடல்நாகைக் காரோ ணத்தானே.

—திருஞானசம்பந்தர்.

மனைவிதாய் தந்தை மக்கள்
மற்றுள சுற்ற மென்னும்
வினையுளே விழுந்த ழுந்தி
வேதனைக் கிடமா காதே
கனையுமா கடல்சூழ் நாகை
மன்னுகா ரோணத் தானை
நினையுமா வல்லீ ராகி
லுய்யலாம் நெஞ்சி னீரே.

—திருநாவுக்கரசர்.

பத்தூர்புக் கிரந்துண்டு
பலபதிகம் பாடிப்
பாவையரைக் கிறிபேசிப்
படிறாடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பணிந்து
சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்துவைத்தீ
ரெனக்கொருநா ளிரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர்
மணிவயிரக் கோவை
யவைபூணத் தந்தருளி
மெய்க்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்து
பணித்தருள வேண்டுங்
கடல்நாகைக் காரோணம்
மேவியிருந் தீரே.

—சுந்தரர்.

கடல் கரையோரமாக இருக்கும் நகரங்களைப் பட்டினம் என்பர். சென்னைப்பட்டினம், காவிரிப்பூம்பட்டினம், நாகப்பட்டினம் என்பவை அத்தகையன. நாகப்பட்டினம் என்னும் திருவூர் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ளது; வரலாற்றுப் புகழ்பெற்றது. "திரை தரும் மரபின் பல்வேல் திரையன்" என்று வரும் பெரும்பாணாற்றுப்படைக் கூற்றுக்கு, 'நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகஞ் சென்று நாக கன்னியை மணந்து அவள் பெற்ற மகனைத் தொண்டைக் கொடியை அடையாளமாகக் கட்டிக் கடலில்விட அவன் கரையேறி அரசாட்சியுரிமை பெற்றதால் தொண்டைமான் இளந்திரையன் எனப்பெற்றான்' என்று உரைகூறப் பெற்றிருக்கிறது. மணிமேகலையிலும் கிள்ளிவளவன் என்ற சோழனுக்கும் பீலிவளை என்னும் நாக கன்னிக்குப் பிறந்தவனே தொண்டைமான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் நாகப்பட்டினத்துச் சோழனே தொண்டை நாட்டிற்குக் காரணமாயிருந்தான் என்று தெரிகிறது.

நாகப்பட்டினம் சோழநாட்டில் சிறந்த சிவத்தலமாவதுடன் வைணவத் திருப்பதியுமாகும். சிவபெருமான் கோயிலுக்கே காரோணம் என்ற பெயர். புண்டரீக முனிவரை இறைவன் காயத்துடன் ஆரோகணம் செய்ததால் காயாரோகணம் என்ற பெயருண்டாகிப் பின்னர், காரோணம் என்று மருவி வழங்கலாயிற்றென்பர். தேவாரம் முதலிய நூல்

களில் காரோணம் என்றே சொல்லப்படு கிறது. சிவராஜதானி, ஆதிபுராணம், பார்ப்பதீச்சரம், அரவநகரம் என்ற பெயர்களும் இவ் வூருக்குண்டு. இது சப்தவிடங்கத்தலங் களுள் ஒன்று. இங்குள்ள தியாகர் சுந்தர விடங்கர்; பாரவார தரங்க நடனம் அல்லது அலை நடனம். நாகை அறுபத்துநாலு சத்தி பீடத் தலங்களில் ஒன்ருகவும் சொல்லப்படு கிறது.

நகரின் நடுநாயகமாய் விளங்கும் கோயில் கிழக்குநோக்கி யிருக்கிறது. நான்கு புறங்களிலும் வாயில்களுண்டு. கிழக்கு வாயிலில் மொட்டைக் கோபுரம்தானிருக் கிறது. கிழக்கு உள்வாயிலில் ஐந்து நிலை களையுடைய கோபுரம் ஒன்றிருக்கிறது. கோயிலில் இரண்டு பிரகாரங்கள் இருக்கின் றன. முன்னல் காட்சியளிக்கும் தலவிநாய கர் நாகாபரணப் பிள்ளையார் எனப்படுவர். பெரியநந்தி யொன்று சுதையினலானது இருக்கிறது. வெளிப்பிரகாரத்தின் தென் மேற்கு மூலையில் வல்லபை கணபதி சந்நிதி யும், தலவிருட்சமான மாமரமும் இருக்கின் றன. உட்பிரகாரங்களில் சிவன் கோயிலுக் குள் இருக்கவேண்டிய எல்லா சந்நிதிகளும் இருக்கின்றன. மேற்கு உட்பிரகாரத்தி லுள்ள முருகப்பெருமானுக்கு நான்கு கைகள் இருக்கின்றன. இரண்டாவது வாயிலின் தென்புறமுள்ள ஓரே கல்லினல் செய்யப்பெற்ற ஆறுமுகக் கடவுள் திருவுரு வம் மிகவும் அழகானது. சிம்மவாகனத்தி லுள்ள ஐந்து முகங்களையுடைய பஞ்சமுக விநாயகர் திருவுருவமும் இக்கோயிலிலிருக் கின்றது. (படங்கள் காண்க.) புண்டரீகர், அகத்தியர், சாலிசுகமன்னன் இவர்களுடைய திருவுருவங்களும் உள்ளன.

மூல மூர்த்தியின் திருப்பெயர் **காயா ரோகணர்** என்பது. இலிங்கத்தின் பின்புறம் இறைவன் தேவியுடன் சோமாஸ்கந்தமூர்த்த மாய் எழுந்தருளியுள்ளார். இவரை ஆதி புராணர் என்று கூறுகின்றனர். மூலவருக்குத் தென்புறம் தியாகராஜர் சந்நிதி கிழக்கு நோக்கியிருக்கின்றது. இங்குள்ள **விடங்க லிங்கம்** கோமேதக வடிவம், தேன்நிறம் போன்றது. கோயிலின் வடகிழக்குப் பக்



நாகை காயாரோகணர் கோயில்—சோழ கோபுரமும் நாகாபரணப் பிள்ளையார் மண்டபமும்

நாகை ஆறுமுகப் பெருமான்

விழாக்களுண்டு. பிரம்மோற்சவம் வைகாசியில் 18 நாடகளும், அம்பாளுக்கு ஆடிமாதம் ஆடிப்பூர விழாவும், ஆனி மாதத்தில் பஞ்சக்குரோச விழாவும் நடைபெறுகின்றன. பஞ்சக்குரோச விழாவில் காரோணப் பெருமானும், சாலீசுர மகாராஜனும் பல்லக்கில் எழுந்தருளி பொய்யூர், பாப்பாகோயில், சிக்கல், பாலூர், வடகுடி, தெத்தி, நாகூர் என்ற ஏழு ஊர்களுக்கும் போய் மீளுவர்.

உமையவள் முதலிய பதின்மூன்று தேவர்களும், புண்டரீகர் முதல் பதினான்கு முனிவர்களும், மன்னர்கள் பதிமூவரும், அந்தணர் எழுவரும், வணிகர் முதலியோர் ஐவரும், நாயன்மார்களில் நால்வரும் இத்தலத்துப் பெருமானை வழிபட்டுப் பேறுபெற்றனர் என்று தலபுராணம் கூறுகிறது. நாகைக் கடற்கரையோரமாயுள்ள நம்பியார் நகரில் பரதவர் குலத்தில் அதிபத்தநாயனர் அவதரித்தார். நாள்தோறும் தன் வலைக்கண்படும் முதல் மீனைச் சிவபெருமானுக் கென்று விட்டு விடுவது வழக்கம். சிலநாட்களில் ஒரு மீன் தான் கிடைக்கும். அதையும் அப்படியே விட்டு வரலானர். ஒருநாள் பொன் மீன்

கத்தில் தேவியின் சந்நிதியிருக்கிறது. இறைவியின் திருநாமங்கள் நீலாயதாட்சி, கருந்தடங் கண்ணி என்பன. "காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி, மதுரை மீனுட்சி, நாகை நீலாயதாட்சி" என்ற பழமொழியே அம்பிகையின் பெருமைக்குச் சான்ருகும். அம்பிகை சந்நிதியிலிருக்கும் நந்தி மிகவும் அழகானது. (படம் பார்க்க).

இத்தலத்திற்குப் பல தீர்த்தங்கள் உண்டென்று தலபுராணம் கூறுகிறது. கோயிலுக்கு வெளியே மேற்கிலிருக்கும் புண்டரீக தீர்த்தமும், தெற்கிலுள்ள தேவ (சிவகங்கை) தீர்த்தமும் முக்கியமானவை. தேவதீர்த்தக் கரையில் முத்திமண்டபம் என்ற ஒன்றிருக்கிறது. காசியிலும் நாகையிலும் தான் முத்தி மண்டபம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கோயிலில் ஆறுகால பூசை செவ்வனே நடைபெறுகிறது. எல்லா மாதங்களிலும்



நாகை பஞ்சமுக விநாயகர்

ன்று கிடைத்தது. அதையும் பெருமானுக்கென்று விட்டார். இறைவன் தோன்றிக் காட்சியளித்து, சிவலோகத்தில் அடியார்களுடன் இருக்கும்படி அருள் புரிந்தார்.

சங்க நூல்களில் காணப்படும் குறிப்புக்களையன்றி இத்தலத்தைப் பற்றிய இலக்கியங்கள் பல உள்ளன. திருஞானசம்பந்தர் இரண்டு பதிகங்களும், அப்பர் நான்கு பதிகங்களும், சுந்தரர் ஒரு பதிகமும் ஆக மூவரும் ஏழு பதிகங்கள் ஓதியிருக்கின்றனர். பதினொராந் திருமுறையில் கபிலதேவர்,

எனக்குவளை நில்லா எழில்
இழந்தேன் என்னும்
எனக்குவளை நில்லா நோய்
செய்தான்—இனக்குவளைக்
கண்டத்தான் நால்வேதன்
காரோணத் தெம்மானைக்
கண்டத்தான் நெஞ்சேகாக் கை

என்று பாடியருளியுள்ளார். சேக்கிழார் பெரியபுராணத்திலும் இத்தலத்தைப்பற்றிக் கூறியிருக்கிறார். அதிபத்த நாயனார் புராணத்தில்,

மன்னி நீடிய செங்கதி
ரவன்வழி மரபின்
தொன்மையா முதற்
சோழர்தந் திருக்குலத்துரிமைப்
பொன்னி நாடெனும் கற்பகப்
பூங்கொடி மலர்போல்
நன்மை சான்றது
நாகப்பட்டினத்திரு நகரம்

என்று அழகுபட எழுதிக் காட்டுகிறார். அருணகிரிநாதர் இத்தலத்தை நான்கு திருப்புகழ்ப் பாடல்களில் குறிப்பிடுகிறார். "நாலு திக்கும் வெற்றிகொண்ட சூரபத்மனைக் களைந்த நாகப்பட்டினத்தமர்ந்த பெருமாளே" என்பர் ஒரு பாடலில். சிவநாமப் பல்தொடை வெண்பாவில்,

நீணாகைக் காரோண நீலாயதாட்சியையே
காணுங்கா யாரோ கணேசனே

என்று கூறப்பட்டிருக்கிறது. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் எழுதியுள்ள திருநாகைக் காரோணப் புராணம் சிறந்த இலக்கிய நூல். "பல புலவர்களின் வாக்குகளை ஒருங்கே மகிழ வேண்டுபவர் இந்நூலைப் படித்தாற்போதும்" என்று டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இன்னும் கருந்திட்டைக்குடி வி. சாமிநாதப்பிள்ளை யென்பவரியற்றிய திருநாகை நான்மணி மாலை, அழகுமுத்துப் புலவர் பாடிய மெய்கண்ட வேலவர் திருப்புகழ், மற்றையோர் இயற்றிய காயாரோகணர்

நந்தி

உலா, பிள்ளைத் தமிழ், குறவஞ்சி முதலிய பிரபந்தங்களும் உள்ளனவாகச் சொல்லப்படுகிறது.

கர்ணபரம்பரைக் கதையொன்றுண்டு. காளமேகப் புலவர் இங்கே வந்தபோது கொட்டைப் பாக்குகளை வைத்து விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களிடம் 'சோறு எங்கே விக்கும் (விற்கும்)' என்று கேட்டாராம். அவர்கள் தொண்டையில் விக்கும் என்று பதில் சொன்னார்களாம். சினம்கொண்ட புலவர் கரித்துண்டு ஒன்றை எடுத்துச் சுவரில்

"பாக்குத் தெறித்து விளையாடும் பாலகர்க்கு
நாக்கு"

என்றெழுதி முடிக்காமல் சென்றுவிட்டாராம். உடனே பையன்கள் "தமிழ் மணக்கும் நன்னகை" என்று முடித்துவிட்டார்களாம்." பாலகர்க்கு நாக்குத் தமிழ் மணக்கும்" என்று கூறியிருப்பது, "கற்றவர் பயிலும் நாகைக்காரோணம்" என்று அப்பரும், "கற்றவர்வாழ் கடல்நாகைக் காரோணம்" என்று சேக்கிழாரும் அருளியுள்ள வாக்குகளை நினைவூட்டுகின்றது.

இத்தலத்திலேயே ஏறக்குறைய அறுபது கோயில்கள் இருப்பனவாகச் சொல்லப்படுகிறது. அவைகளுள் முக்கியமானவை சௌந்தரியராஜப் பெருமான், மேலக்காயாரோகணர், நாகநாதர், சட்டையப்பர், கட்டியப்பர், நடுவணநாதர், குமரர், மலேசுவரர், அழகியநாதர், கோதண்ட ஐயனர், அகத்தீசுவரர், கிருஷ்ணன், தேசிகர், அமரநந்தீசர் முதலியோர் கோயில்களாம். மலேசுவரர் கோயில் 30 அடி உயரமுள்ள கட்டுமலைமே லிருக்கிறது. கைலாசநாதர் கோயில் என்றும் சொல்வர். மூலலிங்கத்தின் பின்புறம் ஒரு சிங்கத்தின் வயிற்றில் சுவாமியும் அம்பிகையும் காட்சியளிக்கின்றனர். கி. பி. 1777-ல் கவர்னர் ரெயினியர் வான் விளிச்சிங்கன் பிரபு காலத்தில் புதுப்பிக்கப்பட்டதாக அக் கோயில் கல்வெட்டு அறிவிக்கிறது. நாகநாதர் கோயில் அர்த்த மண்டபத்திலுள்ள ஒரு துவாரத்தில் மக்கள் பால் கொண்டுவந்து விடுகின்றனர். அதையொரு பாம்பு வந்து குடித்துச் செல்கிறதாம். சட்டையப்பர் கோயிலில் தட்சிணாமூர்த்திக்கு விமானத்துடன் கூடிய தனிக்கோயில் இருக்கிறது.

புனையும் மாமலர் கொண்டு புரிசடை
நனையும் மாமலர் சூடிய நம்பனைக்
கனையும் வார்கடல் நாகைக்கா ரோணனை
நினைய வேவினை யாயின நீங்குமே.

—திருநாவுக்கரசர்.

ஆணையர் அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

10—8—61 நாகர்கோயில்-சித்திரா இந்துமத பிரசார நூல் நிலையத்தில் சித்தாந்த சைவ மாநாட்டு விழாவைத் தொடங்கி வைத்தார்கள்.

14—8—61 செங்கோட்டை - திருவாவடுதுறை ஆதீனம் திருமுறை மாநாட்டைத் துவக்கி வைத்துச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

திருச்சாய்க்காடு—திருச்சாய்க்காட்டு தேவஸ்தானத்தில் 11-8-61ல் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் நிறுவிய அன்னம்பாலிப்பு நிதியிலிருந்து அந்தணர் அருந்தவர் ஏழைகளுக்கு அன்னம் பாலிப்பு நடைபெற்றது.

மேலும் 21-8-61ல் சிதம்பரம், திருச்செந்தூர், மதுரை, பழனி, காஞ்சிபுரம், திருநள்ளாறு முதலிய இடங்களிலும் அன்னம்பாலிப்பு நடைபெற்றது.

திருச்சிராப்பள்ளி:—தாயுமானசுவாமி கோயிலில் இன்னிசைத் திருமுறை விழா 10-9-61ல் நடைபெறும். இது காசிமடத்து ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளால் நிறுவப்பெற்ற நிதியிலிருந்து நடைபெறுகிறது.

தூத்துக்குடி, மேலூர்:—பத்திரகாளியம்மன் கோயிலில் 15-8-61ல் பகல் 12 மணிக்கு கும்பாபிஷேகமும் இரவு முளைக்கொட்டுத் திருவிழாவும் நடைபெற்றன.

திருக்கண்ணங்குடி

வங்கமா முந்நீர் வரிநிறப் பெரிய
வாளரவி னணைமேவி
சங்கமா ரங்கைத் தடமலருந்திச்
சாமமா மேனியென் தலைவன்
அங்கமா றைந்து வேள்விநால்வேத
மருங்கலை பயின்று எரிமூன்றும்
செங்கையால் வளர்க்கும் துளக்கமில்
மனத்தோர் திருக்கண்ணங்குடியுள்
நின்றானே.

—திருமங்கையாழ்வார்.

வைணவத் திருப்பதிகளுள் பஞ்ச கிருஷ்ண க்ஷேத்திரங்கள் உண்டென்பர். அவை திருக்கண்ணங்குடி, திருக்கண்ணபுரம், திருக்கண்ணமங்கை, திருக்கவித்தலம் (கபிஸ்தலம்), திருக்கோவலூர் என்பனவாகும். அவற்றிலொன்றான திருக்கண்ணங்குடி என்ற திவ்விய தேசம் தஞ்சாவூர் மாவட்டத்தில் நாகப்பட்டினம் பகுதியிலிருக்கிறது. திருவாரூர்-நாகப்பட்டினம் இருப்புப் பாதையில் கீழ்வேளூர் என்ற நிலையத்திலிறங்கி, இருப்புப் பாதை ஓரமாகவே கிழக்கே செல்லும் சாலையில் $1\frac{1}{2}$ கல் தொலைவு சென்றால் இப்பதியை யடையலாம். அல்லது நாகையிலிருந்து திருவாரூர் செல்லும் பேருந்தூர்தியில் 5 கல் சென்று ஆழியூர் என்ற இடத்தில் இறங்கித் தெற்கே $\frac{3}{4}$ கல் நடந்து சென்றும் இவ்வூரைச் சேரலாம்.

சோழநாட்டிலுள்ள மங்களசாசனம் பெற்ற 40 திருப்பதிகளுள் ஒன்று திருக்கண்ணங்குடி. அது ஒரு அழகிய சிற்றூர். கோயில் கிழக்கு நோக்கி யிருக்கிறது. அதன் வாயிலைக் கோபுரம் ஒன்று அணி செய்கிறது. கோயிலுக்குள் இரண்டு பிரகாரங்கள் இருக்கின்றன பெருமான் எழுந்தருளி யிருப்பது உத்பல விமானம். கிழக்கே திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலமாகச் சேவை சாதிக்கிறார். பிருகு, சைத்தியர், கௌதமர் முதலியோருக்குப் பிரத்தியட்சம். சியாமள மேனிப்பெருமான், லோகநாதன், தாமோதர நாராயணப்பெருமாள் இவை எம்பெருமானின் திருநாமங்கள். நாச்சியாரின் திருப்பெயர்கள் அரவிந்தவல்லி, லோகநாயகி என்பன. இத்தலத் தீர்த்தம் இராவண புஷ்கரிணி.

இவ்வூரைப்பற்றிய பழமொழி ஒன்றுண்டு. உறங்காப்புளி, ஊறாக்கிணறு, காயா வகுளம், தோரா வழக்கு திருக்கண்ணங்குடி. உறங்காப்புளி என்றால் இரவில் மூடாத இலைகளையுடைய புளியமரம். வகுளமரம் பூத்துக்காய்த்தாலும் அதன் விதையை நட்டால் முளைப்பதில்லை. திருமங்கை மன்னன் ஒரு தலையாரியின் விருப்பத்திற்கிணங்க ஒரு கல் எறிந்தார். அந்த கல் விழுந்த இடத்தில் தோண்டப் பெற்ற கிணற்றில் எப்போதும் நல்ல தண்ணீர் கிடைக்கிறது. வேறு எங்கும் நல்ல நீர் கிடைக்கவில்லை. திருமங்கையாழ்வார் திருநாகையிலிருந்து பொன்னாலான புத்த விக்கிரகத்தைக் கவர்ந்து வருகையில் இத்தலத்தில் ஒரு வயலில் புதைத்து வைத்து பகல் முழுவதும் அந்த வயலின் சொந்தக்காரனுடன் வழக்காடியதனால் தோரா வழக்குத் திருக்கண்ணங்குடி என்று சொல்லப்படுகிறது.

பெரிய திருமொழி, ஒன்பதாம் பத்து, முதல் திருமொழியில் பத்து பாசுரங்களால் இத்தலத்தெம்பெருமானைத் திருமங்கையாழ்வார் பாடியருளியுள்ளார். முதல் பாசுரத்திலேயே இறைவனை "சாமமாமேனியென் தலைவன்" என்று கூறுகிறார். "அங்கம் ஆறைந்து வேள்வி நால்வேதம் அருங்கலை பயின்று எரி மூன்றும் செங்கையால் வளர்க்கும் துளக்கமில் மனத்தோர்" வாழும் திருக்கண்ணங்குடி என்கிறார். "திவளும் மாளிகை சூழ் செழுமணிப் புரிசைத் திருக்கண்ணங்குடி", "கானுலா மயிலின் கணங்கள் நின்றாடக் கணமுகில் முரசநின்றதிர தேனுலா வரி வண்டு இன்னிசை முரலும் திருக்கண்ணங்குடி," "அன்னமென் கமலத்தணி மலர்ப் பீடத்தலை புனலிலைக்குடை நீழல் செந்நெ

லொண் கவரியசைய வீற்றிருக்கும் திருக் கண்ணங்குடி" என்றெல்லாம் போற்றிப் புகழ்ந்து பேசுகிருர். கஜேந்திரனை முதலையி னின்றும் காப்பாற்றியது, மச்சம், வராகம், வாமனம், இராமன், கண்ணன் முதலிய திரு அவதாரங்கள் எடுத்தது முதலியவற்றை வெகு அழகாக எடுத்தியம்புகின்ருர். "பன் னிய பாரம் பார்மகட் கொழியப் பாரத மாபெரும் போரில் மன்னர்கள் மடிய மணி நெடும் திண்தேர் மைத்துனர்க்குய்த்த மாமாயன்" என்கிருர்.

இக்கோயிலில் கருடாழ்வார் திருவுருவம் ஒன்று பஞ்சலோகத்தினுல் செய்யப்பட்டது இருக்கிறது. மிகவும் அழகாக இருக்கிறது; எல்லா வைணவக் கோயில்களிலும் கருடாழ் வார் கூப்பிய திருக்கரங்களுடன் காட்சி யளிப்பர். ஆனுல் இங்குள்ளவர் கைகளை ஒன்றன் மேலொன்ருகக் குறுக்கே மடக்கி வைத்துக்கொண்டு மிகவும் கம்பீரமாக நிற் கிருர். (இந்த உருவத்தை முகப்பு அட்டைப் படத்தில் காணலாம்).

இந்த கோயிலுக்கும் தெற்கே ஒரு அழ கிய சிவன் கோயில் இருக்கிறது. கோபுரத் துடன் காட்சி அளிக்கிறது. இறைவன் திரு நாமம் காளகத்தீசுவரர்; தேவியாரின் திருப் பெயர் ஞானும்பிகை. கோயில் அண்மையில் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

கூறுபுகழ்த் தன் அடிக்கே கூட்டுவனே
இன்னம் எனை
வேறுபடு பல்பிறப்பில்
வீழ்த்துவனே—தேறுகிலேன்
எண்ணம் குடியாய் இருந்தான்
நின்ருன் கிடந்தான்
கண்ணங் குடியான்
கருத்து

—பிள்ளைப் பெருமாளையங்கார்.

சென்னை:—வடபழனி ஆண்டவர் கோயிலின் முன்புறத்தில் புதிதாகக் கட்டப் பட்டிருக்கும் 16 கால் மண்டபத்தின் மேல்புறம் பழனி ஆண்டவர் மூலவ சுவாமியின் பிம்பமும் இருபுறங்களிலும் விநாயகர், சண்முகர் பிம்பங்களும் ஏற்படுத்த ஊர்க்காடு சமஸ்தான இராணி அம்மையார் அவர்கள் ரூ. 3000க்குள் செய்ய முன் வந்து முன்பணமாக ரூபாய் 1000ம் நிர்வாக தர்மகர்த்தர்களிடம் கொடுத்துள்ளார்கள். வேலையும் நடைபெற்று வருகிறது.

தஞ்சாவூர், புன்னை நல்லூர்:—மாரியம்மன் கோயிலில் ஆவணி பிரம்மோற்சவம் 7-9-61 முதல் 24-9-61 வரை நடைபெறும்.

நன்னிமங்கலம்:—சுந்தரேசுவரசுவாமி, இலக்குமிநாராயணப்பெருமாள் கோயிலில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 24-8-61ல் நடைபெற்றது.

சத்தியமங்கலம்:—வேணுகோபாலசுவாமி கல்யாண மண்டபத்தில் 20-8-61ல் சென்னை இந்துசமய அறநிலைய ஆட்சித்துறைத் துணை ஆணையர் திரு. டி. இராமலிங்க ரெட்டியார், எம்.ஏ.,பி.எல். அவர்கள் தலைமையில் திரு. க. கு. கோதண்டராமன் அவர்கள் 'விபீஷண அடைக்கலம்' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினுர்கள்.

சின்னமனூர்: பூலாநந்தீசுவரர் கோயிலில் 22-8-61ல் பிட்டுத் திருவிழாவும் 23-8-61ல் விறகு விற்ற திருவிழாவும் நடைபெற்றன.

செங்குளம்: துர்க்கை அம்மன் கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 23-8-61ல் நடைபெற்றது.

அம்பாசமுத்திரம்: கிருஷ்ணசுவாமி கோயிலில் நம்மாழ்வார் கும்பாபிஷேகம் 6-9-61ல் நடைபெறும்.

திருநாராயணபுரம்: வேதநாராயணப் பெருமாள் கோயிலில் ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவைப் பாசுரங்கள் பொறித்த கல்வெட்டை சென்னை இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் 13-7-61ல் திறந்துவைத்து, ஆலய அலுவலகக் கட்டிடத்திற்கு அடிக்கல்லும் நாட்டினுர்கள். முசிறிவட்டம் எம்.எல்.ஏ., திரு. வி. ஏ., முத்தையா அவர்கள் தலைமை தாங்கினுர்கள். இவ்விழாவில் தஞ்சாவூர் அற நிலையத்துறை, துணை ஆணையர், திரு. கே. சோமசுந்தரம், எம்.ஏ., திருச்சி அறநிலையத் துறை உதவி ஆணையர் திரு. என். சி. நாராயணசாமி, மற்றும் பலரும் கலந்துகொண் டார்கள்.

சென்னை மயிலாப்பூர் திருவள்ளுவ நாயனார் கோயில் திருப்பணி

இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் தொண்டை நாட்டிலுள்ள திருமயிலாப்பூரில் திருவள்ளுவர் அவதரித்தார், அவர் பிறந்த இடத்தில் ஒரு திருக்கோயில் இன்றும் திகழ்கிறது. அவர் இயற்றிய திருக்குறள் உலகப் பொது நூல். சாதி, மதம், நாடு முதலிய பேதமின்றி யாவரும் ஒப்புக்கொண்டிருக்கும் பெருமையுடையது. இத்தகைய பொதுமறையை உலகுக் களித்த திருவள்ளுவர் கோயிலின் முன் மண்டபம், மதில்சுவர்கள் முதலியவற்றைத் திருப்பணி செய்யவும், கல்யாண மண்டபம் ஒன்று கட்டவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்திருப்பணிகட்கு இரண்டு இலட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டு இருக்கிறது. இதற்காக ஒரு திருப்பணிக்குழுவும் அமைக்கப்பெற்றிருக்கிறது. அருள் உள்ளம் கொண்ட அன்பர்கள் தாராளமாகப் பொருள் உதவி புரியுமாறு திருவள்ளுவர் கோயில் தருமகர்த்தர்களும் திருப்பணிக் குழுவினரும் வேண்டிக்கொள்கின்றனர். நன்கொடை அனுப்புவோர், "பி. ஜி. நடராஜன், பொருளாளர்-தர்மகர்த்தர், திருவள்ளுவர் கோயில், மயிலாப்பூர் சென்னை-4" என்ற முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நன்கொடைக்கு வாக்களித்தவர்கள்		தொகை
திரு. டி. மாணிக்க செட்டியார், மயிலை.	ரூ	1,330
,, பி. ஜி. நடராஜன், மயிலை.	ரூ.	1.330
,, மணலி இராமகிருஷ்ண முதலியார், சென்னை.	ரூ.	5,301
,, ஐயா சுப்பிரமணிய முதலியார், சென்னை.	ரூ.	530
,, எம். பி. கிருஷ்ணசாமி பிள்ளை, முசிரி.	ரூ.	200
,, திருக்குறள்வேள் ஜி. வரதராஜன், லால்குடி.	ரூ.	500
மொத்தம்	ரூ	9,191

வேண்டுகோள்

திருநாளைப் போவார் ஆலய அமைப்பு நிதி

பகர்ந்துலகு சீர்போற்றும் பழையவளம் பதியாகும்
திகழ்ந்தபுனல் கொள்ளிடம்பொன் செழுமணிக டிரைக்கரத்தான்
முகந்துதர விருமருங்கு முளரிமலர்க் கையேற்கும்
அகன்பணைநீர் நன்னாட்டு மேற்கானாட் டாதனூர்.

—பெரியபுராணம்

மேற்கானாட்டு ஆதனூர் சேரியில் ஆதிதிராவிடர் குலத்தில் நந்தனார் பிறந்துவாழ்ந்து வந்தார். சேரியில் பிறந்தும் சித்தத்தைச் சிவநாமத்தில் ஊன்றிய சீலராய் விளங்கினார். அவர் திருப்புன்கூர் வந்து தேரடியில் நின்று ஆண்டவனை வணங்கும்போது, ஈசன் திருமேனி தெரியாதவாறு மலைபோல் நந்தி மறைத்திருக்க, சிவலோகநாதரிடம் முறையிட, நந்தி விலகி நந்தனாருக்குத் தரிசனம் கிடைத்தது. பின் தில்லையை அடைந்து நடராஜப் பெருமானைத் தரிசித்து அந்தமில்லாப் பேரின்பத்தை அடைந்தார்.

இவ்வாறு, பன்னெடுங்காலத்திற்கு முன்பே கடவுளுக்கு எல்லோரும் சமம் என்பதை விலக்கிய நந்தனாருக்கு, அவர் பிறந்த ஆதனூரில், அவர் பெருமையை விளக்கவும் ஆலய மில்லாக்குறையை நீக்கவும் ஓர் புதிய கோயில் எடுக்க அரசினர் உதவித்தொகை அளித்துள்ளார்கள். ஆலயம் கட்ட அதிகப்படி தேவைப்படும் தொகைக்காகப் பொதுமக்கள் அனைவரும் பொருள் உதவி அளிக்குமாறு வேண்டிக்கொள்ளப்படுகிறது.

நன்கொடையைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எஸ். சுப்பையா, பொருளாளர் & செயலாளர்,
திருப்பணிக்குழு :—ஸ்ரீ சிவலோகநாதசுவாமி கோயில்
திருப்புன்கூர் போஸ்ட், வைத்தீசுவரன் கோயில் (வழி) தஞ்சை மாவட்டம்

திருநாவுக்கரசு நாயனார்

[வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்.]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

'நோய்நீங்கும் வழியுள்ளதோ?' என வினவியவனுக்கு, 'நான் சமணப் பள்ளியை அடையமாட்டேன்' என்று திலகவதியார் கூறியதனால், 'சூலை நோய் நீங்குவதற்கு வழியுண்டு; அஃது உன்னிடம் சொல்லற்பாலதன்று; என் தம்பியிடம் நேரே சொல்லற்பாலதாகும்' என்பது கொள்ளக் கிடந்ததென்க.

தமக்கையாரது உறுதி மொழியைக் கேட்ட தருமசேனர் மனம் வருந்தி, 'இனி, யான் என் தமக்கையாரைக் காண்பதற்கு என்ன வழிசெய்வேன்!' என்று கவலையுறும் பொழுது, சிவபிரானது திருவருள் வந்து பொருந்தினமையால், 'பொருத்தம் அற்ற புன்னெறியாகிய இச்சமண சமயத்தில் உள்ளோரால் நீங்காத இச்சூலை நோய் நீங்குமாறு, பொருத்தம் உடைய நன்னெறியாகிய சிவநெறியைச் சேர்ந்திருக்கும் திலகவதியாரது திருவடிகளையே யான் இனிப் புகலிடமாக அடைவேன்,' என்று நினைத்தார்.

அந்நினைவு அவருக்கு உய்தியைத் தர எழுந்த நினைவாகையால், அதன்படியே முயற்சியும் உண்டாயிற்று. அதனால், இடையாய்க் கிடந்த தளர்ச்சியும் சிறிது நீங்க, உடுத்திருந்த பாயையும், கையிலே கொண்டிருந்த உறிக்கரத்தையும், மயிற்பீலியையும் எறிந்துவிட்டு, தூய வெள்ளாடையை உடுத்திக்கொண்டு, தாம் செல்லும் இடங்களில் தமக்குக் கைகொடுத்துவரும் ஏவலாளர்களைப் பற்றிக்கொண்டு, இரவிலே ஒருவருங் காணாதபடி புறப்பட்டுத் திருவதிகையை நோக்கி மெல்ல மெல்ல நடந்தார்.

மருணீக்கியார், தாம் பாடலிபுத்திரத்திலிருந்து பெற்றது சூலை நோயன்றி வேறில்லை என்னுமாறு அவ்விடத்தை விட்டு நீங்கி, தமக்கையாரைக் காணவேண்டும் என்னும் அவா விரைவில் அழைத்துச்செல்லச் சென்று திருவதிகையையடைந்து, அங்குத் திலகவதியார் உறைகின்ற திருமடத்தைத்தெரிந்து, அதனுள்ளே சென்று, அவரைக் கண்டார். கண்டதும் அவரது திருவடிகளில் வீழ்ந்து, 'நமது குடியானது செய்த நல்லதவத்தின் பயன் போன்றவரே, சூலை நோயைத் தாங்கும் வலியில்லாது, உம்மையே புகலிடமாக அடைந்தேன்; இனிச் சிறிதும் தாழாது, அடியேன் பிழைத்து நன்னெறியையடையும் வழியைச் சொல்லியருளல் வேண்டும்,' எனக் கூறிப் புலம்பினார்.

அப்பொழுது திலகவதியார், தம்பியாரைப் பார்த்து, சிவபெருமானது திருவருளை நினைந்து வணங்கி, 'குறிக்கோளில்லாத பரசமயமாகிய படுகுழியிலே அறியாது வீழ்ந்து, பெருந்துன்பத்தை அனுபவிக்கின்ற தம்பியாரே, எழுந்திரீர்,' எனத் திருவாய் மலர்ந்தார்.

அவ்வண்ணமே மருணீக்கியார் சூலை நோயுடனே நடுக்கமுற்று எழுந்து வணங்க, திலகவதியார், 'தம்பியாரே, உமக்கு வந்த இச்சூலைநோய் சிவபெருமான் கொடுக்க வந்ததாகும்; ஆகையால், தம்மை அடைந்தவர்களது பந்தத்தை நீக்கும் அப்பெருமானையே வணங்கி, அவருக்குத் தொண்டு செய்வீராக' என்று கட்டளையிட்டார்.

அக்கட்டளையை மருணீக்கியார் ஏற்றுக்கொண்டு வணங்க, அவரைத் திருக்கோயிலினுள் அழைத்துச் செல்லுதற்பொருட்டுத் தபோதனியாராகிய திலகவதியார் சிவபெருமானது திருநீற்றை அவரது திருவைந்தெழுத்தை ஓதிக் கொடுத்தார். மருணீக்கியார் அத்திருநீற்றைத் தமக்குக் கிடைத்த பெருவாழ்வாகக் கருதி, வணங்கி வாங்கி, அவர் சொல்லிய அத்திருவைந்தெழுத்தை ஓதி, உடம்பு முழுதும் நிறையப் பூசிக்கொண்டார். இதனையே இவர் பின்பு,

"கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்;
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன்;
—உனதருளால்

திருவாய்ப் பொலியச் சிவாய நமஎன்று நீறணிந்
தேன்;
தருவாய் சிவகதி நீபா திரிப்புலியூ ரரனே.''

என இறைவனை நோக்கிக் கூறியருளினர் என்க.

இதனுள், “கருவாய்க் கிடந்து உன்கழலே நினையும் கருத்துடையேன்'' என்றது, இவர் கருவிலே திருவுடையவராய் இருந்தமையை விளக்கும்; “உருவாய்த் தெரிந்து, உன்றன் நாமம் பயின்றேன்'' என்றது, இளமையில் இவர் சிவநெறியிலே ஒழுகினமையைத் தெரிவிக்கும்; “உனதருளால் திருவாய்ப் பொலியச் சிவாயநம என்று நீறணிந்தேன்,'' என்றது, இவர் புறச் சமயத்தில் நின்ற மாசுநீங்கி ஒளி பெற்றுத் திகழத் திலகவதியாரால் திருநீறும், திருவைந்தெழுத்தும் அருளப்பெற்றுச் சிறப் பெய்தினமையை உணர்த்தும். இங்குத் திருவைந்தெழுத்தைச் சிகாரமுதலாக வைத்து அருளிச்செய்திருத்தல் நோக்கத்தக்கது. தாம் நீறணிந்ததை, “உனதருளால் அணிந்தேன்'' என்றதனால், திலகவதியாரை இவர்சிவபிரானாகவே கொண்டமை தெளியப்படும். இவ்வாற்றால், மருணீக்கியாரைப் புறச் சமயத்தினின்ற வாலாமை நீக்கித் தூயராக்கிச் சிவபிரானது திருவருட் பேற்றிற்கு உரியராகச் செய்த நல்லாசிரியர் திலகவதியாரேயாதல் செவ்விதின் விளங்கும். இன்னும் இவர்தாமே மருணீக்கியாரைத் திருக்கோயிற் புறத்தினின்றும் அழைத்துக் கொண்டு உள்ளே சென்று சிவபிரானது திருமுன்பு விடுத்தலையும் பின்னர்க் காணலாம். ஆகவே, “பதிகம் ஏழெழுநூறு பகருமா கவியோகி'' யாகவும் “பரசு நாவரசான பரம காரண ஈச''னாகவும் திகழும் ஒப்பற்ற அருட்பேராசிரியர் ஒருவரை உலகிற்கருளிய ஞானத்தாயாராகிய திலகவதியாரது தவத்தின் பெருமையை நாம் என்னென்றறிந்து சொல்லவல்லோம்! அவருக்கு நாம் என்ன கைம்மாறு செய்யவல்லோம்!! இதுபற்றியன்றோ அவரைச் சேக்கிழார், “தூண்டுதவ விளக்கனையார்'' எனவும், “மன்னுதபோதினியார்'' எனவும் அருளிச் செய்தார். இனி மருணீக்கியர் தாமே, திலகவதியாராலே தாம் மெய்யுணர்வுபெற்றமையை,

“அம்மை யாரெனக் கென்றென் றரற்றினேற்கு
அம்மை யாரைத்தந் தார்ஆரு ரையரே''

எனப் பின்னர் அருளிச் செய்தமை காண்க. இன்னும் அவர் இறைவனை, “ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய்'' என்று கூறியதனோடு அமையாது, “உடன்தோன்றினராய்'' என இவரைச் சிறந்தெடுத்தோதிய அருமைப்பாட்டினையும் நோக்குக.

உண்மையாசிரியனாவான், தன் மாணாக்கன் ஈடேறவேண்டும் என உண்மையாகவே எண்ணும் எண்ணம் உடையவனாய், அதன் பொருட்டு, அனைவரையும் ஈடேற்றுவோனாகிய இறைவனிடம் பல்காலும் அவனுக்காக வேண்டி முறையிடும் கைம்மாறு கருதாத கருணையாளனே யாகலின்; தம் தம்பியார் பொருட்டே தம் வாழ்க்கை முழுவதையும் செலுத்திய திலகவதியாரினும் சிறந்த உண்மையாசிரியன் மருணீக்கியாருக்கு வேறுயாவர் இருத்தல் கூடும்!

மருணீக்கியார், திருநீற்றை, திருவைந்தெழுத்தோதி நிறையப் பூசிக்கொண்டபொழுது, அவரது அகத்திருள், நீங்கும் நிலையை அடைந்துவிட்டது; அதற்கேற்ப, உலகிலுள்ள புறஇருளும் நீங்கிப் பகல்வரும் நிலை உண்டாயிற்று. இதனைச் சேக்கிழார்,

“நீறணிந்தார் அகத்திருளும் நிறைகங்குற் புறத்
திருளும் மாறவரும் திருப்பள்ளி எழுச்சி''

என அழகுபடக் கூறினர்.

அகத்திருள் நீங்கும் நிலை எய்தினமை கூறவே, ‘சூலை நோயும் நீங்கும் நிலைமை எய்திற்று,' என்பதுதானே அமைந்து கிடந்தது; என்னை? திருவதிகைக்குச் செல்லவேண்டும் என்று நினைத்து உடனே அந்நோய் சிறிது குறைந்தமை முன்னே கூறப்பட்டதாகலின்.

எனவே, ‘திருவைந்தெழுத்தை ஓதித் திருநீறணிந்தவுடன் வினையும் நோயும் நீங்குதலை மருணீக்கியார் தம் அனுபவத்திற் கண்டார்' என்பதும், ‘அதனையே பின்பு அவர்,

“சந்திரற் சடையில் வைத்த சங்கரன் சாம வேதி
அந்தரத் தமரர் பெம்மான் ஆன்நல்வெள்ளூர்தி
யான்றன்
மந்திரம் நமச்சி வாய வாகநீ றணியப் பெற்றால்
வெந்தறும் வினையும் நோயும் வெவ்வழல்
விறகிட் டன்றே''

என்றருளிச்செய்தார்,' என்பதும் உணரப்படும்.

இவ்வாறு திருநீற்றை யணிந்துகொண்ட மருணீக்கியாரைத் திலகவதியார், திருக்கோயிலினுள் அழைத்துச் செல்வாராயினர். திருப்பள்ளியெழுச்சிக் காலத்தில் செய்யவேண்டிய திருப்பணிகளுக்கேற்பத் திலகவதியார், திருவலகும், திருமெழுக்குத் தோண்டியும் எடுத்துக் கொண்டு முன்னே செல்ல, மருணீக்கியார், அவர்பின்னே சென்றார்.

அவ்வாறு செல்லுங்காலத்துத் திலகவதியார் நிற்கும் நெறியினையும், அந்நெறி அவருக்கு ஒரு நெறிய மனத்தைத் தந்தமையையும் மருணீக்கியார் நேரே கண்டாராதலின், அந்நெறியையே பின்பு அவர்மெய்யுணர்வு பெற வேண்டுவார்க்கு அறிவுறுத்துவாராய்,

"நிலைபெறுமா றெண்ணுதியேல், நெஞ்சே, நீவா;
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு, மெழுக்கு மிட்டு"

என்றற்றொடக்கத்தனவாக எடுத்தோதி யருளிச்செய்தார் என்க.

திலகவதியார், தாம் அழைத்துக் கொண்டு சென்ற மருணீக்கியாரைத் திருக்கோயிலினுள், திருவதிகைத் திருவீரட்டானேசுரரது திருமுன்பிலே விடுத்தார். திருக்கோயில் வழிபாட்டு முறையினை முன்னரே அறிந்தும் செய்தும் வந்திருந்தோராகிய மருணீக்கியார், இதுபோது, திலகவதியாரால், "கழலடைந்தோர்—பற்றறுப்பார் தமைப் பணிந்து பணிசெய்வீர்" எனப் பணிக்கவும், அதற்கேற்றவாறு திருநீறணிவிக்கவும், திருக்கோயிலினுள் கொண்டுவந்து சேர்க்கவும் பெற்றவுடன், முன்னர்க்கோயிலைக் கைகூப்பி வலம் செய்து, பின்னர்த் தரையிலே வீழ்ந்து வணங்கி எழுந்து, திருமுன்பிலே சென்று பெருமானைக் கண்டார்.

திருப்பதிகம் வெளிப்படல்

முன்பு சமண்சமயத்திற் செல்லுமாறு மாறிநின்ற சிவபெருமானது திருவருள், இப்பொழுது நேர்நிற்றலால் மருணீக்கியாருக்குத் தமிழ் பாமாலைகள் சாத்தி அப்பெருமானை வழிபடுதல் வேண்டும் என்னும் உணர்வு உண்டாயிற்று; அதனால், அவர், தமது திருமேனியிலே திருவெண்ணீறு விளங்கவும், உள்ளத்திலே அன்பு ததும்பவும், தம் வயிற்றிற் பொருந்திய சூலை நோயையும், அறிவிற் பொருந்திய மயக்கத்தையும் நீக்கியருள்மாறு, திரிபுரங்களை எரித்த திருவீரட்டானேசுரரை வேண்டி, "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" எனத் தொடங்கி, பத்துத் திருப்பாடல்களால் ஆகிய ஒரு பெரிய திருப்பதிகத்தைப்பாடி, அப்பெருமானைப் போற்றினர். அவ்வாறு போற்றியருளிச் செய்யப்பட்டதனால், அத்திருப்பதிகம், ஏழுலகத்தில் உள்ளவரும் ஓதி, தம் உடல் நோய் உயிர்நோய்களினின்றும் நீங்கி உய்தி பெறுதற்கு வழியாய் அமைந்தது.

திருப்பதிகத்தின் சிறப்பு

இங்ஙனம், இத்திருப்பதிகம், 'உலகம் உய்வதற்கு வழியாக அருளப்பட்டது,' எனக் கூறப்பட்டதனால், 'இதனை அருளுதற் பொருட்டே இறைவன் இவருக்குச் சூலை நோயைக் கொடுத்தருளினன்,' என்பது விளங்கும். அஃது எங்ஙனமெனக் காண்போம்.

மக்கட்கு வரும் நோய்கள் இருவகையின; அவை, உணவு, செயல் முதலியவற்றின் மாறுபாடுகாரணமாக வருவனவும், பழவினையால் வருவனவுமாம். வெப்பு, தலைநோய், பசியின்மை முதலிய சிறுநோய்கள், காணத்தால் வருவன; வாதம், குட்டம், கயம் முதலிய பெருநோய்கள் பழவினையால் வருவன. இவற்றையே, இந்நாயனர், பின்பு, "திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்" என்னும் திருத்தாண்டகத்துள், "பெருநோய்கள் மிகநலிய" எனக் குறித்தருளினர் என்க.

இவற்றுள், காரணத்தால் வரும் சிறுநோய்கள் மருத்துவத்தால் நீக்கப்படும். பழவினையால் வருவன மருத்துவத்தால் நீக்கப்படாது, அவ்வினை கெடுமாறு, இறைவனை நோக்கிச் செய்யும் வழிபாட்டினாலே நீங்குவனவாம். அவ்வழிபாட்டில் அவ்வினையை நீக்கியருளுமாறு இறைவனை வேண்டிக் கொள்ளும் வேண்டுகோள் சிறப்புடையது. அவ்வேண்டுகோள், 'எல்லாவற்றையும் செய்தும் செய்வித்தும் நிற்பவன் இறைவனே' என்னும் மெய்யுணர்வுடன் செய்யும் பொழுதே பயன் தருவதாகும்; அம்மெய்யுணர்வு அப்பெருநோய் உடைய வினையினர்க்கு உண்டாதல் அரிது. இனி, அம்மெய்யுணர்வுடையார், அவ்வினை காரணமாக அந்நோயினையுடையராய் வேண்டிப் பாடுத

லும் அரிதாகும். ஆதலால், அன்ன நோயினை யுடையார் ஓதி, அதனின்றும் நீங்கி உய்தற் பொருட்டு, இவர்க்கு இச்சூலை நோயை உண்டாக்கி, அதனை நீக்கியருளுமாறு வேண்டி இத்திருப்பதிகத்தினை அருளுமாறு செய்வித்தனன் இறைவன் என்பது பெறப்படுதல் உணர்க.

இனி, பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருளானாகிய மாணாப் பிறவி நோயுடையாரும் ஓதி, அதனினீங்கி உய்தற் பொருட்டு, இவரைச் சமண்சமயத்தில் நிறுத்தி, அங்ஙனம் நின்றது காரணமாக வருந்தும் நிலையில் நின்று, அவ்வருத்தத்தினை நீக்கியருளுமாறு வேண்டி இத்திருப்பதிகத்தினை அருளச் செய்தனன் இறைவன் என்பதும், மேலே பலவிடத்தும் கூறிவந்தவாற்றால் இனிது பெறப்பட்டுக்கிடத்தல் காண்க. முதற்றிருப்பதிகத்திற்கு உள்ள இத்தன்மையை எடுத்துக்கூறவே, இனிவரும் திருப்பதிகங்கள் அனைத்தும் அவ்வாறாதல் உணர்ந்துகொள்ளப் படுமென்க.

மருணீக்கியார் திருநாவுக்கரசராதல்

மருணீக்கியார் திருப்பதிகத்தை முடித்தவுடன் சூலைநோய் இருந்த இடம் தெரியாமல் அவரை விட்டு நீங்கியது. அப்பொழுது அவர், 'திருவதிகை வீரட்டானப் பெருமான் அடியேனது உயிரோடு தனது திருவருளையும் அடியேனுக்கு அளித்தது வியப்பைத் தருவதாகும்,' என்று சொல்லி, அவ்வியப்போடு, அப்பெருமானது திருவருளாகிய கடலில் மூழ்கினார். அதனால், அவரது உடம்பெங்கும் மயிர்கள் சிலிர்த்தன; கண்கள் உவகைநீரைச் சொரிந்தன. அவர், களிப்பு மிகுதியால் நிலத்திலே வீழ்ந்து புரண்டார்; தம்மை மறந்திருந்தார். 'எனது குற்றத்தினால் ஏறத்தகாதவாறு உண்டாகிய மேட்டிலும் ஏறுமாறு உமது திருவருள் வெள்ளத்தைப் பெருக்கியது என்னளவில் செய்யத் தக்க செயலோ?' என்று கூறினார். 'புறநெறியாகிய ஆழ்ந்த குழியிலே வீழ்ந்து, எழும்வகை யறியாது மயங்கி, பயனில் செயலே செய்தொழியற்பாலேனாகிய யான், அந்நிலையினின்றும் நீங்கி, மலைமகள் கேள்வனாகிய மாதேவனது திருவடிகளை வந்து அடையும் பெருவாழ்வினைத் தந்த சூலை நோய்க்கு யான் செய்யும் கைம்மாறு யாது!' என்று சொல்லி அச் சூலைநோயை வணங்கினார்.

இங்ஙனம் மருணீக்கியார் தம்மை மறந்த பேரின்ப நிலையில் இருக்குங்கால், வீரட்டானேசுரரது திருவருளால் வான்மொழி ஒன்று, யாவர்க்கும் வியப்புண்டாகுமாறு, "பாவென்னும் உறுப்புப் பொருந்தி வெளிப்பட்ட, செவ்விய தமிழ்ச்சொல்லின் வளப்பத்தைக் கொண்ட, பதிகமென்னும் தொகையமைந்த பாடலைப் பாடிய தகுதியினால், உனது நல்ல பெயர் 'நாவுக்கரசு' என்று ஏழுலகத்தினும் நிலைபெற்று விளங்குவதாக' என்று உண்டாயிற்று. அதுமுதல் அவரது திருப்பெயர், 'திருநாவுக்கரசர்' என்பதேயாயிற்று.

நாவென்பது மொழியைக் குறித்தலானும், மொழியாவது கலைஞானமேயாகலானும், 'நாவுக்கரசு' எனப் பெயர் தந்தது, கலைஞானத்திற்குத் தலைவராகச் செய்தவாறாயிற்று. இவரோடு உடனுறை ஆசிரியராகத் தரப்பட்ட திருஞானசம்பந்தரது திருப்பதிகங்களினும் இவரது திருப்பதிகங்களிலே கலைஞானம் விரிந்து விளங்குதலை அத்திருப்பதிகங்களை நோக்கியுணர்க. இவற்றையெல்லாம் நன்குணர்ந்தே, சேக்கிழார், இவரது திருவவதாரத்தைக் கூறுமிடத்து, "அலகில் கலைத்துறை தழைப்ப......வந்து அவதாரம் செய்தார்" என்றருளிச் செய்தார். எனவே, 'கலைஞானம், அனுபவஞானம்' என்னும் இருவகை ஞானங்களுள் இவரைச் சிறப்பாகக் கலைஞானத்திற்கு ஆசிரியராகத் தந்தருளினான் இறைவன் என்பது அறியப்படும். திருஞானசம்பந்தரைச் சிறப்பாக அனுபவ ஞானத்திற்கு ஆசிரியராகத் தந்தருளினமையை அவரது வரலாற்றில் காணலாம்.

'இங்ஙனம், இவ்விரு பேராசிரியரையே உலகிற்கு மெய்ந்நெறி காட்டும் மெய்ந்நெறிப் பேராசிரியராக இறைவன் அளித்தருளினான் என்பது, வரலாறும், அகச்சான்று புறச்சான்றுகளுமாகிய பலவகையானும் வெள்ளிடை மலைபோல் ஐயுறவின்றி இனிது விளங்கிக் கிடப்பதே ஆயினும், இதனை இங்ஙனம் உள்ளவாறே உணர்ந்து, உய்தி பெறுதல் என்பது, வினைத்தடை நீங்கித் திருவருள் வாய்க்கப் பெற்றார்க்கே கூடுவதாமென்க.

திருப்பெயர்ச் சிறப்பு

இறைவன், இவரது திருப்பெயரை உலகெழினும் மன்னுமாறு அருள்செய்தவதனால்

இவரது திருமொழியும், திருச்செயலுமே யன்றி, இவரது திருப்பெயர்தானே, மக்களைப் பிறவியாகிய ஆழ்கடலினின்றும் கரையேற்ற வல்லதென்பது பெறப்பட்டது. இது மெய்யாதலைக் கண்கூடாக அறிவிப்பதே, அப்பூதியடிகள் நாயனரது வரலாறு என்பது உலகமறிந்தது.

கலைஞானத்திற்குத் தலைவராய் விளங்கும் சிறப்பினை இறைவன் அளித்தருளப் பெற்ற திருநாவுக்கரசர், 'தீவினையே குடிகொண்ட உள்ளத்தையுடைய அடியேன் பெறத்தக்க நிலையோ இது!' என்று சொல்லி, இராவணனுக்கு அருள்செய்த வரலாற்றினுல் அறியக்கிடக்கும் உண்மையாகிய திருவருளின் திறத்தை நினைந்து, அவ்வரலாற்றினை மேலும் மறவாது நினைந்து துதிப்பதை மேற்கொண்டு, இறைவரை வணங்கினர். இதனுலேயே இவரது திருப்பதிகங்களின் இறுதிப் பாடல்களிலெல்லாம், இராவணனுக்கு அருள் செய்த வரலாறு காணப்படுகின்றது என்க. அவ்வரலாற்று உண்மையைத் திருஞானசம்பந்தரது வரலாற்றில் சேக்கிழார் விளக்கியருளுதல் காண்க.

அடியவர்களது ஆரவாரம்

திருநாவுக்கரசருக்கு இறைவன் அளித்த சிறப்பினைக் கண்ட சிவனடியார்கள், திருவதிகையில் பெருந்திரளாகக் கூடி, 'பெருங்கருணையாளனுகிய நம் பெருமானது திருவருளின்வழியே, ஆளுடைய அரசுகள், சமணர்களது சமயம் பாழ்படும்படி அதனை விடுத்து வந்து சிவநெறியை அடைந்தமையாலே, இவ்வுலகம் உய்தியைப் பெற்றது,' என்று சொல்லி, முரசம், படகம் முதலிய வாத்தியங்களை ஒலித்துக் கடல்போல வெற்றி முழக்கத்தினைச் செய்தார்கள்.

திருநாவுக்கரசரது திருத்தொண்டு

திருநாவுக்கரசர், மயக்க நெறியாகிய சமண் சமயத்தினின்றும் நீங்கிச் சிவநெறியை அடையும் பேறுபெற்றமைக்கு மிக்க மகிழ்ச்சியுற்று, மேல், 'மனம், மொழி, மெய்,' என்னும் மூன்றினுலும் சிவபிரானுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்னும் விருப்பமுடையவராய், திருநீறுங் கண்டிகையுமாகிய சிவசின்னங்களைச் சிறப்புற அணிந்துகொண்டு, உள்ளத்திலே சிவத்தியானமும், வாயிலே திருப்பதிகப்பாடலும், கையிலே உழவாரப் படையும் கொண்டவராய், அன்பு மேலீட்டினலே தொண்டுசெய்வாராயினர். "கழலடைந்தார்-பற்றறுப்பார் தமைப்பணிந்து பணிசெய்வீர்" என்று தம் தமக்கையார் தந்த ஆணையும் இதுவேயாதல் இங்கு நினைக்கத்தக்கது. சிறப்பாக உழவாரப்பணி செய்தமையாலே, இவர் அருந்தவத்தோர் நெறியாகிய திருத்தொண்டின் நெறிவாழ வந்தவராதலறிக.

திலகவதியாரது மகிழ்ச்சி

சிவபிரானுக்குத்தாம் அன்பினலே செய்த உண்மைத் தொண்டினுல் தம் விருப்பம் நிறைவெய்தப்பெற்ற தபோதனியாராகிய திலகவதியார். அப்பெருமான் தம் தம்பிக்குச் செய்த சிறப்பினைக் கண்டு, 'பொய்ச்சமயமாகிய நோயையும், அது நீங்குதற்குக் கொடுக்கப்பட்ட சூலைநோயையும் நீக்கி, எங்களை ஆட்கொண்ட இதுபோலும் திருவருளை இவ்வுலகில் யாவர் பெற்றுர்!' என்று சொல்லி அப்பெருமானை வணங்கினர்.

'தம் விருப்பம் நிறைவெய்தி வணங்கினர்,' என்றதனுல், 'திலகவதியாரது கடமை முடிந்தது,' என்பது பெறப்பட்டது. அதனுல், அவர் கவலையின்றி, முன்போலவே திருவதிகையில் வீரட்டானேசுரருக்குப் பணி செய்திருந்து, அப்பெருமானது திருவடியை அடைந்தார் என உணர்ந்து கொள்க.

(தொடரும்)

பிள்ளைத் தமிழில் முத்து

"கோவா மணியே, வாடா மலரே
கொட்டுக சிறு பறையே"
"முழுமா ணிக்கத் திரளொளியே
முழக்கி யருள்க சிறுபறையே"
—எட்டுக்குடி முருகன் பிள்ளைத்தமிழ்.

நவமணிகளில் ஒன்று முத்து. வெள்ளி பொன்னைவிட நவமணிகள் சிறந்தவை. "சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனியெம்மானை" மணியாகப் பாவித்து, "மாணிக்கமே! முத்தே! பவளமே!" என்றும், "பெருந்தகையைப் பெறற்கரிய மாணிக்கத்தை" என்றும் அனுபவிக்கிறோம். மாணிக்கவாசகப் பெருமான், இறைவனை "முத்தனே! முதல்வா! முக்கண்ணா!! முனிவா!" என்றெல்லாம் அழைக்கிறார். "மன்னே! மாமணியே! மழபாடியுள் மாணிக்கமே!" என்கிறார் வன்றொண்டர். ஆறுமுகச் சிவனுக்கு அமைந்துள்ள பல பெயர்களுள் "முத்தையன்" என்பதும் ஒன்று. அபிராம வல்லியை அபிராமிபட்டர், "மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணி புனைந்த அணியே" என்றும், அவள் "கைக்கே அணிவது கன்னலும் பூவும், கமல மன்ன மெயக்கே அணிவது வெண் முத்து மாலை" என்றும் வழுத்துகிறார். குழந்தைகட்கும் 'முத்து', 'இரத்தினம்' 'மாணிக்கம்', 'மரகதம்,' கோமேதகம்' என்றெல்லாம் பெயர் சூட்டுகிறோம். மணிவாசகனாரும் 'முத்தணி கொங்கைகள் ஆட ஆட' என்றும், "முத்தன்ன வெண்ணகையாய்" என்றும் முற்றிழையாரை விளிக்கிறார்.

'முத்து என்ற சொல் "முத்தத்தையும்" குறிக்கும், செங்கனிவாய் முத்தம் இன்பமா கடலிலிருந்து எழுவது, ஏனைய இடங்களில் பிறக்கும் எந்த முத்தும் இந்த முத்தத்திற்கு ஒப்பாகாது; மிக்காகாது. "அனைத்தெலும் புண்ணெக, ஆநந்தத் தேன் சொரியும்" பனி வாயின் முத்தத்தில் மகிழாதார் யார்? மிக உயர்ந்த தமிழாகிய 'திருப்பாவை'யைப் பட்டர்பிரான் கோதை, 'சங்கத்தமிழ்' என்றே சொல்லுகிறாள். (சங்கு - முத்து).

பிள்ளைத் தமிழின், முத்தப் பருவத்தில், புலவர்கள் (நூலாசிரியர்கள்) சமத்காரம் தோன்றப் பாடுவது மரபு. முத்துக்கள் பிறக்குமிடம், முத்துக்களின் குணதோஷங்கள் இவைகளை ஆய்ந்து, தள்ளுவன தள்ளி, கொள்ளுவன கொண்டு, கொண்டவற்றை தரம் பார்த்துச் சீர்தூக்கி, ஆலாபனை செய்வார்கள். ஈண்டு சில கவிகளை ஆராய்வோம்.

யானையின் தந்தம், பன்றிக்கொம்பு' சிப்பி, கமுகு, கதலி, நந்து (வலம்புரிச்சங்கு), சலஞ்சலம் (வலம்புரிக்கும் இடம்புரிக்கும் மத்தியிலுள்ள சங்கு), மீன்தலை, கொக்கு, நளினம் (தாமரை), மின்னார் கந்தரம் (நூறு வயதுவரை புருஷசிந்தனையே யில்லாத மாதர் கழுத்து), சாலி (நெல்), கழை (மூங்கில்) கன்னல் (கரும்பு), பசுவின் பல், கட்செவி (பாம்பு), மேகம், சந்திரன், உடும்பு, முதலை முதலிய இருபது இடங்களிலிருந்து முத்து பிறப்பதாக, புகழேந்திப் புலவர் பாடிய இரத்தினச் சுருக்கத்திலுள்ள ஒரு பாடலால் அறியலாம். பாடல் பின் வருமாறு:—

" தந்தி, வராகம் மருப்பு,
இப்பி, பூகம், தனிக்கதலி
நந்து, சலஞ்சலம், மீன்தலை,
கொக்கு, நளின, மின்னார்
கந்தரம், சாலி, கழைக்கன்னல்,
ஆவின்பல், கட்செவி, கார்
இந்து, உடும்பு, கரா, முத்தை
ஈனும் இருபதுமே,"

சிங்கத்தின் கை, தவளை, கோவேறு கழுதையின் முன்னங்கால் முதலிய இடங்களிலும் முத்து பிறக்கும் என்று சொல்லப்படுகிறது.

திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ் ஆசிரியர் பகழிக்கூத்தர், வலம்புரி, யானை,

பசுஞ்சாலி, மேகம் ஆகிய நான்கு இடங்களில் பிறக்கும் முத்துக்களை ஒரு பாட்டில் கூறி, அவைகளை விலக்கி, "மாது நாயகம் என வடிவுடைசீர் வள்ளிநாயகனின்" பவள வாய் முத்தத்தையே வேண்டுகிறார்.

விவரம் பின் வருமாறு:

"பேரொலி செய்கிற அலைகள் எடுத்து எறிதலால், நிறைந்த கருப்பத்தையுடைய வலம்புரிச் சங்குகள் கரையில் தவழ்ந்து, (பிரசவ நோயால்) வருந்தி, வெண்மணலில் கருவுயிர்த்த முத்துக்கு விலையுண்டு; தாவிப் பாய்கின்ற மதநீரும், மனயாறுபாடும் உடைய பெரிய யானையின் பிறைச்சந்திரன் போன்று வளைவான தந்தத்திலே விளைந்த முத்துக்கு விலையுண்டு; தழைத்துத் தலை சாய்ந்த நெல் மணிகளைக் கொத்துக் கொத்தாய்ச் சுமந்த பசுமையான செந்நெற் பயிரில் விளைகின்ற குளிர்ந்த முத்துக்கும் விலையுண்டு; மேகத்தில் பிறக்கும் முத்தினுக்கும் விலை கூறுகின்ற தன்மை உண்டு; உன்னுடைய கொவ்வைப் பழம்போலும் வாயில் தோன்றிய முத்தத்திற்கோ விலையில்லை; முருகா! முத்தம் தருக; முத்துக்களைச் சிந்துகின்ற கடற்கரையோரத்திலுள்ள திருச்சீரலைவாய் என்னும் நகர்க்குத் தலைவா! முத்தம் தருக" என்று இப்படி வியாபார சமத்காரம் செய்கிறார் (செட்டின் மார்க்கச்) செட்டியிடம்.

இப்பொழுது பாட்டைக் காண்போம்:-

கத்துந் தரங்கம் எடுத்தெறியக் கடுஞ்சூல்
 உளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்தில் கான்ற
 மணிக்கு விலையுண்டு
தத்தும் கரட விகடதட தந்திப்
 பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந் தனக்கு விலையுண்டு தழைத்துக்
 கழுத்து வளைந்தமணிக்
கொத்தும் சுமந்த பசுஞ்சாலிக் குளிர்
 முத்தினுக்கு விலையுண்டு
கொண்டல் தருநித்திலந் தனக்குக்
 கூறுந் தரமுண் டுன்கனிவாய்
முத்தந் தனக்கு விலையில்லை முருகா
 முத்தந் தருகவே
முத்தஞ் சொரியும் கடலலைவாய் முதல்வா
 முத்தந் தரு

(வாலுகம்-மணல் மேடு; கான்ற-பிரசவித்த; கரடம் - மதநீர்; விகடம்-மாறுபட்ட நிலை; தந்தி - தந்தமுடைய யானை.)

இன்னொரு புலவர் சிவபக்தி மேலீட்டை நியதியாகக்கொண்டு, இன்னின்ன முத்துக்கள் வேண்டாம்; உன் பவளச் செவ்வாய் முத்தமே வேண்டுமென்கிறார்.

"இன்ப மாகடலை என் உள்ளத்தில் தேக்கும் பெருமானுக்கு, கடுநஞ்சினை (ஆலகால விஷத்தை) அளித்த கடல்பெறும் முத்தினை வேண்டேம்; காமதகனன் என்ற பழி உண்டாகும்படி, எம் பரமன்மேற் பாணந்தொடுத்த மன்மதன் கையிலுள்ள வில்லாகிய கரும்பிலிருந்து பிறக்கும் முத்தும் வேண்டேம்.

"மொழிக்கும் நினைவுக்கும் எட்டாதநின்
 திருமூர்த்த மென்றன்
விழிக்கும் வினைக்கும் வெளி நின்றதால்
 விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை
 அண்ட மெல்லாம்
பழிக்கும்படி ஒரு பாகங்
 கொண்டாளும் பராபரையே!"

என்பது, அபிராமி அந்தாதி.

மதயானையின் இரு தந்தத்திலிருந்து உண்டாகும் முத்தையும் இச்சியேன். (இறைவன் கஜ சம்மார மூர்த்தியாகையால், களிற்றின் முத்தையும் வேண்டேனென்கிறார்.) "சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்" என்பது அப்பர் திருத்தாண்டகம். "ஆரவாரித்துவரும் கூற்றினையுதைத்த, திருநெல்வேலியின் மூங்கிலில் உதித்த 'செல்வ' முத்தாகிய சிவத்தை உளத்தில் சேர்த்த, நின் (மங்கையர்க்கரசியின்) பவளச் செவ்வாய் முத்தையே விரும்புகிறேன்" என்று இன்றைய புலவர் சாமர்த்தியம் பண்ணுகிறார். அவருடைய கவியின் எழிலைக் காண்போம்.

"ஒழியா வின்ப வாரிதியெம் முளத்திற்
 றேக்கும் பெருமானுக்
குண்ணக் கடுநஞ்சினை யளித்த வுததிபெறு
 முத்தினை வேண்டேம்
பழியாம் வகைபைம் பரமன்மேற்பாணந்
 தொடுத்த மதன்சிலையிற்
படுமுத் துவவேம் களிறிரண்டின் பணைமுத்

திச்சி யேமன்று
தெழியா வரும்கூற் றினை யுதைத்த
திருநெல்லையின் வேய்முத்தையுளஞ்
சேர்த்த முத்தே நின்பவளச் செவ்வாய்
முத்தே விருப்பானேம்
அழியாப் புகழ்சேர் மங்கையருக் கரசே
முத்த மருள்கவே
அருகா சனிக்குப் பால்சுரந்த வமுதே
முத்த மருள்கவே

"மங்கையர்க் கரசியார்
பிள்ளைத் தமிழ்"

—கவியரசு கு. நடேச கவுண்டர்

(உததி - கடல்: பணை - தந்தம்: அருகா சனி - அருக + அசனி. (அசனி - இடி.) அருகர்கட்கு (சமணர்கட்கு) பேரிடியான திரு ஞானசம்பந்தர்.

முத்தின் பெருமையும் மதிப்பும் என்ன வாயினும், அம் முத்தினைக் கடல் அளிப்பதாயின் அது வேண்டாமென்கிறார் புலவர். காரணம் "கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக், கரையிலாக் கருணைமா கடலை", உப்புக் கடல், நஞ்சு உண்ண அளித்ததுதான். இப்பேர்ப்பட்ட கடலின் தொடர்பே வேண்டாமென்று இன்னும் இரண்டு புலவர்கள் அழகொழுகத் தீட்டிக் காட்டுகிறார்கள்:

"சரும விடையில் ஏறிவரும் தருமப் பிரபுவாகிய இறைவனுக்கே, கொஞ்சமும் அஞ்சாது, மனம் கூசாது, அமுது செய்ய விடம் அளித்தது கடல்" என்று கருதியே காவிரியாறு கடலில் கலக்கவில்லை என்று சேக்கிழார் சுவாமிகளும் சொல்லுகிறார்கள்;

"அடல் விடையின் மேல்வருவார் அமுது செய அஞ்சாதே விடம் அளித்த தெனக்கருதி மேதினிக்கு வளம் நிறைத்தே கடல்வயிறு நுழையாத காவிரி" என்கிறார். (திருமூலநாயனார் புராணம்.)

இதே கருத்தை, திருவாதவூரடிகள் புராணத்தை இயற்றிய கடவுண்மாமுனிவர் அப்புராணத்தில் வைகையைப்பற்றிச் சொல்லியுள்ளார்.

மூன்று கண்கள், நான்கு தோள்கள், ஐந்து முகங்கள்கொண்ட இறைவன் சொக்கநாதரின் அருளையும், நன்மையையும் பெற்ற தொன்மையானநாடு பாண்டிநாடு. ("பாண்டிநாடே பழம் பதி") அது நவகங்கை என்னும் நதியைக் கொண்டுள்ள வளப்ப மிகுந்த நாடு. கடுமையான ஆலகால விஷத்தை அவனுக்குக் கடல் தந்ததென்றே, வையையும் கடலில் சென்று கலக்கவில்லை என்கிறார்:

"முக்கண்ஒரு நான்குபுய ஐந்துமுக முன்னேன்
சொக்கனருள் நன்மைபெறு தொன்மைதிகழ்
[நன்னாடு
அக்கடு விடத்தை அரனுக்கருள்வதென்றே
மைக்கடலின் வைகல் ஒழி வைகை வளநாடு."

புலவர்கள் கோபம் ஒருபுறம் இருக்கட்டும், இப்படி அரன், ஆலகால விஷத்தை உண்டிராதிருந்தால், நம் கதி என்ன ஆவது? கந்த புராணத்தில், திருக்குற்றாலப் படத்தில் ஒரு பாட்டை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

"பாரோடும் விண்ணுடர் பறந்தோட
புரந்தரனுர் பதிவிட்டோட,
தேரோடும் கதிரோட, மதியோட,
விதியோட, திருமால்மேனி
காரோடத் தொடர்ந்தோடக் கடல்விடத்தைப்
பரமன் உண்டுகாவா விட்டால்,
யாரோடு நீரிருப்பீர்? எங்கோடி உயிர்
பிழைப்பீர் ? அறிவிலீர்காள்!"

மற்றொரு புலவர், தான் முத்துப் பரிசோதக நிபுணர் என்ற தனிச்சிறப்பை அடிப்படையாகக் கொண்டு, தன் சமத்காரத்தை எடுத்துக் கூறி வழக்காடுகிறார். அவர், வரகவி வீரபாண்டியப் புலவர் என்னும் சங்கர மூர்த்திப் புலவராவார். அவர் திருமந்திர நகரம் என வழங்கும் தூத்துக்குடி சீமையைச் சார்ந்தவர். செந்திலாதிபன் அடியான், வீரகட்ட பொம்மன் சமஸ்தானத்து இருந்த வீரப்புலவர் முத்தினைப்பற்றி நன்கு தெரிந்தவர். அப்புலவரைப்போல், எந்தப் பிள்ளைத் தமிழ் ஆசிரியரும் இதுகாறும் முத்தின் குணதோஷங்களையும் வர்க்கங்களையும் ஆய்ந்தறிந்து தெளிவுபடுத்தியதில்லை, இத் தனிப்பெருமை வரகவி வீரபாண்டியப் புலவர் ஒருவருக்கே வந்து அமைந்துள்ளது. தூத்துக்குடியில், திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் சுவாமி ஸ்ரீசங்கரராமேச்சுரர் சமேத பாகம் பிரியாளம்மை மீது ஒரு பிள்ளைத் தமிழ் இயற்றியுள்ளார்.

முத்து ஆராய்ச்சியில் தேர்ச்சியுற்ற வீர பாண்டியப் புலவர், பல்வேறு முத்துக்களின் தோஷங்களை எடுத்துக் கூறி, தோஷமில்லாத பவ்ள முத்தம் எங்குளதென வினவி, "கிளி மொழிப் பங்கய முகப்பைங் கவுரி" யாகிய பாகம் பிரியாள் அம்மையின்" "கிருபை முத்தம் தான்" அது என்று சொல்லி, 'சிறு துரைப்பெண்' பார்வதியின், பவளம் போன்ற இதழ்களிலிருந்து உதிக்கும் அப் பவளமுத்து, இவ் உலகில் கிடைப்பதரு மையே என்கிறார்.

இப புலவர் கூறும் முத்து தோஷங்களாவன:—

ஆய்வுக்குரிய முத்துக்களைச் சொரிகின்ற நத்தும் (சங்குகளும்), உப்புக் கடலில் உதித்தலால், தானும் உப்பு கரிக்கும். சிகர வெற்பின் தரளம் நிச்சயம் தழன்று மடுக்கும். மாதர்களின் கூந்தல்போன்ற கரிய நீலமேகத்தில் விளைகின்ற ககன (ஆகாய) முத்தம் கருகிவிடும். கழை (கரும்பு)யின் முத்து கரடாயிருக்கும். தாமரை முத்து திருகலாயிருக்கும். (முறுக்கேறிக் கிடக்கும்.) பருத்த, பலத்த யானை மருப்பின் அழகிய முத்தம் சொற சொறப்பா யிருக்கும்.

வரகவியின் கம்பீர வாக்கையும் சற்று காண்போம்:—

"தெரியுமுத்துஞ் சொரியினத்துந்
திரியுமுப்பின் கடலிலே
சிகர வெற்பின் றரளநிச்சந் தழன்
மடுக்குங் குடிலிலே
கரியமைக்கொண் டலில்விளைக்குங்
ககனமுத்தங் கருகலே
கழையின் முத்தங் கரடுமுத்தங்
கமலமுத்தந் திருகலே
பரிமிதத்திண் கரிமருப்பின்
பரியமுத்தஞ் சரவையே
பவளமுத்தெங் குளதிதழ்ச்செம்
பவளமுத்திங் கருமையே
கிரியளிக்குஞ் சிறுதுரைப்பெண்
கிருபை முத்தந் தருகவே
கிளிமொழிப்பங் கய முகப்பைங் கெவுரி
முத்தந் தருகவே."

—பாகம் பிரியாவம்மை பிள்ளைத்தமிழ்.

மேலும், ஒரு பாட்டில் வரகவி வீர பாண்டியப் புலவர் முத்துக்களின் பல பெயர்களைச் சொல்லி விவரிக்கிறார். உலகிலுள்ள எல்லாரக முத்துக்களையும் "பருவண்டியிலே" (சல்லடையில்) போட்டு தரம் பிரிப்பர். ஆனால் "பார்வதி! உன் செங்கனி வாய் முத்தம், தரம்பிரிக்கக் கூடிய முத்தா என வினவி, இல்லை என்ற விடையும் தந்து, அப்படிப்பட்ட தரம் பிரிக்க முடியாத வாய் முத்தத்தைத் தருகவே" என்று இறைஞ்சுகிறார்.

'பருவண்டி' என்பது ஒரு அருமையான தீந்தமிழ்ச் சொல். பருமையை அண்டவைப்பது என்பது பொருள். இப்பொழுது 'சல்லடை.' என்று சொல்லுகிறோம். சலிப்பது சல்லடை; 'பன்னடை' என்றும் சொல்லுவதுண்டு. அக்காலத்தில் வழக்காற்றிலிருந்த 'பருவண்டி' என்னும் சொல், இன்று முத்துக் 'குளிப்பவர்களிடையே 'வண்டுகட்டல்' என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது. 'பருமையை அண்டவைப்பது' என்பதிலிருந்து, சிறியவற்றை வலைக்கண் மூலம் கீழே தள்ளுவது என்பது புலனாகும்.

'பாகம் பிரியாள் பிள்ளைத்தமிழில் முத்து ரகங்களுக்கு ஆசிரியர் கொடுக்கும் பெயரும் குணமும் காண்க :—

	பெயர்	குணம்
1.	வடிவாணி.	நல்லமுத்து; பெரிய உருவம்; நல்ல உருண்டை; நல்ல நிறம்; ஒரு புள்ளிகூட இராது.

(ஆணி - உயர்ந்தது; ஒளி. "ஆணிப் பொன் முத்தி மண்டப மேவு கச்சி" க்ஷேத்திரக் கோவைப்பிள்ளைத் தமிழ்.)

2. உண்மைக்காணி:—உயர்ந்த முத்து.

3. சிவப்பாணி:—தங்க நிறமான முத்து.

4. குத்துண்:—துவார முள்ளதுபோல் தோன்றுவது. (வீடுகுத்து என்று சொல்லும் தோஷத்தை ஒக்கும்).

5. கழுநீர்:—கருப்பு முத்து. (உள் கருப்பு)

6. இருப்புக்குள் கழிப்பு:—அர்த்த நாசம் (தனவிரயம்).

7. கழிப்பு:—ஒன்றுக்கும் உதவாதது.

8. கழிப்புக் கையேறல்:—உருண்டையில் ஒரு பக்கம் கருப்பு முள்போல் இருக்கும்.

9. குறுகல் ஆணி:—ஒளி குறுகியது; சிறு வடிவம்: இதில் சிலவற்றிற்கு உயிருண்டு.

10. குறுகல் வரை:—குறுகிய கோடுள்ளது; பம்பரக் கீற்றுப்போல் வரியுள்ளது.

11. கழிவு குறுகல்:—விட்டு விட்டு கீற்று உடையது. (தேங்காய்த் திருகல் போன்றது.)

12, செந்நீர்:—மிகச் சிவந்த நிறமுள்ளது. (உள் செந்நீர்.)

13. சப்பத்தி:—சப்பட்டை வடிவம்.

14. சமதாயம்:—சய நிறம்.

15. கழிவு சமதாயம்:—மட்ட சயநிறம்.

16. பால்:—பால் நிறம்.

17. சங்கு:—சங்கிலிருந்து பிறக்கும் முத்து.

18. வெள்ளை:—வெள்ளை நிற முத்து.

மேலே சொன்ன முத்து ரகங்களையெல்லாம் 'பருவண்டியில்' போட்டு தரம் பிரித்து விடலாம். ஆனால், பார்வதியின் செங்கனிவாய் முத்தத்தினை தரம்பிரிக்கவும் முடியுமா? முடியாது. இப்பொழுது முத்துக்களைப்பற்றி, ஆழ்ந்து, அகன்று, நுண்ணிய ஆராய்ச்சியுடைய வீரப்புலவரின் பாடலைக் காண்போம்.

(பாகம் பிரியாள் பிள்ளைத்தமிழ் முத்தப்பருவம் 9வது பாட்டு)

இதனில் ஒரு வரலாறு அடங்கியுளது; இதனையும் காண்போம்.

"தத்துந் தரங்க முழங்காவுன்
சந்நிதானச் சமுத்திர முத்தந்
தனக்குத் தரநேர் வடிவாணி
யுண்மைக் காணி சிவப்பாணி
குத்துண் கழுநீ ரிருப்புக்குட்
கழிப்புக் கழிப்புக் கையேறல்
குறுக லாணிக் குறுகல்வரை
கழிவுகுறுகல் செந்நீர்சப்
பத்தி சமதா யங்கழிவு சமதா
யம்பாற் சங்கு வெள்ளை
பருவண் டியிலே தரம்பிரிப்பர்
பாரு வதிநின் செங்கனிவாய்
முத்தந் தனக்குத் தரம்பிரிக்க
முற்று முத்தந் தருகவே
முழுமா மறைதேர் பாகமே
முத்தே முத்தந் தருகவே."

இராமபிரான், இலக்குவன், சுக்கிரீவன் இம்மூவரும் திருமந்திர நகரில் (தூத்துக்குடியில்) தங்கி, எவ்வாறு கடலைக் கடப்பது என்று இரவெல்லாம் மந்திராலோசனை செய்துகொண்டிருந்தனர். அப்போது, குயவன் சட்டி செய்ய தன் கைத்தடியால் தட்டித் தட்டி, ஓசை கொடுத்துக் கொண்டிருந்தான். சமுத்திரம் அலைகளை எழுப்பி, 'ஓஓ' வென ஒலியைப் பரப்பிக்கொண்டு இருந்தது. சமுத்திரக் கரையிலுள்ள பனைமரங்களின் ஓலைகளும், 'சலசல' என்று சப்தம் செய்து கொண்டிருந்தன. இம் மூவித ஓசைகளும் மந்திராலோசனை செய்வதற்குத் தடங்கலாயிருந்தன. சட்டென இராமபிரான் தன் கையை நீட்டி, ஓசையை நிற்கும்படி காண்பிக்க, இம்மூவித ஓசைகளும் நின்றுவிட்டன. அதனால்தான் ஆசிரியர். "தத்துந் தரங்க முழங்காவுன் சந்நிதானச் சமுத்திரம்" என்கிறார். இன்றும் தூத்துக்குடி கடற்கரையில், கடலின் ஒலி கிடையாது. பனைமரம் கிடையாது. குயவர்கள் குடியிருப்பும் கிடையாது. இராமபிரான் மந்திராலோசனை செய்த ஊராகையால், தூந்துக்குடிக்குத் திருமந்திர நகர் என்ற பெயரும் வழங்குகிறது.

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே ஆழமான கடலில் முத்து எடுக்கும் வழக்கம் தமிழ் நாட்டிலே இருந்தது. இவ்வாறு முத்து எடுப்பதற்கு 'முத்துச்சலாபம்' அல்லது முத்துக்குளித்தல் என்று சொல்லுவார்கள். உலகில் முதன் முதலாக முத்துக்களைக் கண்டெடுத்தவர்கள் தமிழர்களே. தூத்துக்குடி, முத்துச் சலாபத்திற்கு அன்றும் இன்றும் என்றும் பெயர் போனது. அதனால்தான் தூத்துக்குடி சீமையைச் சேர்ந்த 'பாகம் பிரியாவம்மை பிள்ளைத் தமிழ்' ஆசிரியர், மட்டரக முத்துக்களை ஒரு பாட்டில் கேவலமாகப் பேசுகிறார். (9-வது பாட்டு முத்தப் பருவம்) "மூங்கிலில் விளையும் கண்பட்ட

முத்தைக் கடைக் கண்ணிட்டுப் பார்க்கிலோம், சிப்பிமுத்தை ஒதுக்குவோம், காலால் மிதித்துத் துவைத்து வருவோம், மிதிபட்ட முத்தினைத் தொட்டிட்ட செங்கையைப் பன்னீர் விட்டு விளக்குவோம்'' என்றெல்லாம் பகருகிறார்.

குகஸ்ரீ ரஸபதி இப்பிள்ளைத் தமிழ்க்கு நாடு மதிக்கும் அருமை விரிவுரை எழுதியுளர், அதை உலகம் ஓதி உணர்வதாக!

நம் நாட்டில், சிறப்பாக தூத்துக்குடியில், நடைமுறையில் முத்துரகங்கட்கு ஏற்பட்டுள்ள பெயர்களும் குண, குற்றங்களும் :—

பெயர் குண குற்றங்கள்

1. ஜீவன் :—நல்ல உரு: நல்ல நிறம்; நல்ல நீர்; புள்ளி இராதது.

2. கோல்வா:—மாங்காய், தேங்காய் வடிவுள்ளது நல்ல வெள்ளை நிறம். 'அனதாரை' என்று தமிழில் சொல்லுவார்கள்.

3. பீசல்:—சொறிசொறியாய் உருவம் அற்றது.

4. மாசி:—சிறு உருவம். ஜீவன் இருந்தால் மதிப்பு அதிகம்.

5. பட்டன்:—அடிப்பக்கம் தட்டையானது.

6. கழிவு:—பல நிறம். உள்மிகக் கருப்பாய் இருந்தால் மதிப்பு அதிகம்.

7. கோடை:—உத்திராட்ச நிறம். அதற்குள் மண் இருக்கும். சில சமயம் வெடிக்கவும் செய்யும்.

8. சங்குமுத்து:—சுத்த வெண்ணிறம், நீரோட்டம் இராது. இதில் சில சிவப்பாயும் இருக்கும்.

9. நக்குமாசி :—மாவுபோல் பொடியாயுள்ளது. முத்துபஸ்பம் செய்ய வைத்தியர்களுக்கு உதவும்.

10. மாசித் தூள்:—'தோடு' அளவுள்ளது.

11. ஆணிமுத்து:—நல்ல நிறம்; புள்ளி இராது; திராக்ஷைக்குள் விதை தெரிவது போல், ஆணிமுத்துள் இலேசான சிகப்பு நிறம் தெரியும். ஆணிமுத்தைத்தான் இந்தியில் ஜீவன் என்பார்கள்.

12. மோதி:—உயர்ந்த முத்து—இந்தி வார்த்தை—மோதிலால் நேரு.

முத்துச்சிப்பியை நோயாளி கண்டாலே போதுமாம். உடனே அவனிடத்தில் உள்ள கபம் கழன்றோடும். இருமல் மற்றோரிடத்திற்குக் குடி சென்றுவிடும். கோழையும் அப்படியே. காசநோய் வேரோடு விலகுமாம். மேகநோயைப்பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. இப்படி ஒரு வெண்பா கூறுகிறது:—

ஈளை விலகும் இருமல் குடியோடும்
கோழைவிழும், கயநோய்க் கூட்டமறும்நீருட-
கப்பி வருமேகக் கட்டியும்போம் முத்தத்தின்
சிப்பிதனைக் கண்டவிடத் தே.

தாயுமானவர் கூட

"முத்தே! பவளமே!
மொய்த்தபசும் பொற்சுடரே!
சித்தே! என் உள்ளத் தெளிவே!
பராபரமே!"

என்று "ஆணிப் பொன்னன அறிவை", எம் ஆண்டவனை வழுத்துகிறார்.

'மரகதவடிவம்' பூண்ட முத்தையன்' (முருகன்) குதலைக்கிளி மென்மொழியால், அருணகிரிநாதருக்கு "முத்தைத்தரு' என்று அடியெடுத்துக் கொடுத்தாரென்றால், முத்தின் பெருமையை இன்னும் சொல்லவும் வேண்டுமோ?

—அமிருதவசனி.

ஸ்ரீ வில்லிபுத்தூர்: நாச்சியார் கோயிலில் ஆண்டாள் திருஆடிப்பூர விழா 3-8-61 முதல் 15-8-61 வரை நடைபெற்றது.

சென்னை: அருணாசலேசுவரர் கோயிலில் ஆடிப்பூரமகோற்சவம் 3-8-61 முதல் 13-8-61 வரை நடைபெற்றது.

நாகப்பட்டினம்: சௌந்தரராஜப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 4-8-61 முதல் 14-8-61 வரை நடைபெற்றது.

நவதிருப்பதி அநுபவம்

[திரு. K. பட்சிராஜன், B.A., B.L.]

ஆரும் பாட்டு

இன்று எனக்கு உதவாது அகன்ற
இளமான் இனிப் போய்த்
தென்திசைத் திலதமனைய
திருக்கோளூர்க்கே
சென்று தன் திருமால் திருக்கண்ணும்
செவ்வாயும் கண்டு
நின்று நின்று நையும்
நெடும்கண்கள் பனிமல்கவே.

தான் போனதால் வருந்தும் எனக்கு வந்து உதவாமல் நீங்கின சிறுமான் போன்ற என் மகள் நடந்துபோய் தெற்குத் திசைக்கே ஒரு திலகம் போன்று விளங்கும் திருக்கோளூருக்குச் சென்று இனிமேல் தன்னுடைய ஸ்ரீமானுடைய அழகிய கண்களையும் சிவந்த வாயையும் பார்த்து அம்மகிழ்ச்சியிலே தன் நீண்ட கண்களிலே நீர் பெருக நின்று கொண்டே தன் திருமேனி குலைவாள்.

முன் பாட்டிலே தன்னைவிட்டுப் போன தன் மகள் அங்குபோய் 'எங்ஙனே உகக்குங் கொல் இன்றே' என்று தன்னையே வினவிக் கொண்ட அன்னை தன் மகள் நிலை இப்படித் தான் இருக்க வேண்டும் என்று தனக்குள் ளேயே கற்பனைசெய்து காண்கிறாள்.

இன்று எனக்கு உதவாது

இப்போது என் பக்கம் நின்று எனக்கு இதமானது செய்தும் சொல்லியும் என்னைத் தேற்றாது. நான் என் வயமாய், மனமும் உடலும் நலமாய் இருக்கும்போது மக்கள் அருகிராவிடினும் தவறில்லை, ஆனால் நான் இப்படி உள்ளம் தவிக்கையில், தவிக்கும் எனக்கு உதவாமல். இங்கே ஈட்டிலே இராமன் பிரிய அது பொறாது பிரலாபிக்கும் தசரதனை வால்மீக சுலோக மூலம் உவமை காட்டப் பெற்றது.

''என்னை இம்மூப்பிடையே வெறுத்தாய்
இனிநான்
வாணாள் வேண்டேன் வேண்டேன்
என்றான்''

என்றார் கம்பரும்.

அகன்ற

உதவவில்லை என்றால் ஏதோ இவ் ஊரிலேதான் வேறெங்கோ சென்றிருக்கிறாள். கடுகவந்து விடுவாள் என்று சற்று ஆற வழியுமின்றி வேற்றூரல்லவா போய்விட்டாள்.

இளமான்

இளமையுடைய மான்கன்று போலத் துள்ளித்திரியும் என் மகள். பருவத்தின் தன்மையாலே தன் செயலால் விளையும் விளைவுகளை உய்த்து நோக்கப் பக்குவம் பெறாதவள்.

இனி

தாய்க்கும் மிஞ்சின பந்துவா உலகிலே. பெற்று வளர்த்துச் சீராட்டிப் போற்றிய என்னையுங் காட்டில் தன் நலத்திலே அக்கரையுடையார் ஒருவர் உண்டு போல.

போய்

அப்படி ஒருவர் இருக்கிறதாகக் கொள்ளலாமோ என்றால் இவள் இதுவரை ஏங்கித் தவித்தபோது அந்த அக்கரை உடையார் இவளுக்குதவவந்ததாகவும் இல்லையே. இவளல்லவா தேடிப் போகிறாள்.

தென்திசைத்திலதமனைய

''தெற்குதிக்கு என்றுகொண்டு ஆர்யர்கள் இழந்த மிலேச்ச பூமியிறே'' என்பது ஈடு. ஆர்யாவர்த்த: புண்யபூமி: மத்யம் விந்த்ய ஹிமாலயோ: என்று வடநாடுதான் புண்ய பூமியென்றும் தெற்குமிலேச்ச பூமி யென்றும் தவறாகக் கருதி இத்தென் நாட்டின் பெருமையை யிழந்தனர் ஆரியர். இதைக் கண்டித்துத்தான் எங்கிலத்து வித்திடினும் காஞ்சிரங்காழ் தெங்காகா தென்னாட்டவரும் சுவர்க்கம் புகுதலான் தன்னாற்றானாகவருமே வடதிசையும் கொன்னளர் சாலப் பலர் என்று நாலடி கூறிற்று. இன்னும் ஆரிய மொழி வாயிலாகத் தான் இறைவனை யடைய முடியும் என்ற தவறான

கொள்கையையுடைய முரணர் பலர் பிரபந்தச் சுவையும் பயனும் இழந்து திரிவது கண்கூடு.

இத்திசையின் பெருமை யறியத்தவமில்லாதவர்.

தென்திசை

எம்பெருமான் நித்யவாசம் செய்து மகிழ்வதற்கென்றே தேர்ந்தெடுத்த திசை. அவனுள்ளத்துக்குத் தேன் போன்றினிய திசை. (தென்-இனிமை) அது காரணமாகவன்றோ அவன் நித்யவாச ஸ்தலங்கள் இங்கே பன்னூருகவுள்ளன. அப்படி அவனுக்கினிய திசையான தெற்கு திக்கிலே.

திலகமனைய திருக்கோளூர்க்கே

அத்திசைக்கே ஒரு பொட்டிட்டது போன்று விளங்கும்; தான் விளங்குவதாலேயே தானுள்ள நுதற்பிரதேசம் விளங்கித் தோன்றும்படி யிருப்பது திலகம். திலகமில்லாநுதல் பாழ்பட்டுத் தோன்றுமன்றே! அதுபோலத்தானிருப்பதால் திசையே விளங்கும்படி. அழகிலும் புகழிலும் ஏற்றம்பெறும்படி உள்ளத் திருக்கோளூர்க்கு.

சென்று

தன் வழி நடந்த வருத்தம் கூடத் தெரியாமல் போய்.

தன்திருமால்

தனக்கு ஸர்வவித பந்துவுமாகத்தான் வரித்த திருமால். வெறும்மாலல்ல (திருமால் முன்னைய பாசுரத்தில் இப்பதம் விளக்கப் பெற்றது காண்க) பிராட்டி முன்னுகப் பற்றுதலன்றி அறியாள். புருஷகாரி மூலம் பற்றுகையன்றே சுபாவமும் சொரூபமும்.

திருக்கண்ணும் செவ்வாயும் கண்டு

அவனைக்குளிர நோக்கும் அழகிய கண்கள். இவளிருந்தவிடம் தேடி நாம் செல்ல வேண்டி யிருக்க நம் காலத் தாழ்வுபொருதே நாமிருந்தவிடம் தேடி இவள் வரும்படியாய் விட்டதே என்ற வியப்பிலே மலர்ந்த கண்கள். இவள் கோவைவாய் துடிப்பு நின்றது போன்று துடிக்கும் அதரங்களுடன் விளங்கும் அவனுடைய செய்யவாய் இவற்றைக் கண்டு.

நின்றுநின்று நையுப்......மல்கவே

இப்படி நம்பக்கல் ஆதரமுடையவனையன்றோ நாம் பழிக்க நினைத்தது என்று தன் தவருய எண்ணத்துக்கு வருந்தியும், அவனைக் கண்டு மகிழ்ந்தும் ஆக இரண்டு கண்ணீரும் வெள்ளமிட உடல் அங்க அங்கமாக குலைந்து நிற்பாள்.

இப்படி ஒரு நிலையிலே இரு கண்ணீரும் தேக்கி நிற்கும் அவள் இருப்பைக் காணப் பெற்றிலேனே என்று ஏங்குகிருள் தாய்.

ஏழாம் பாட்டு

மல்குநீர்க் கண்ணொடு மையலுற்ற மனத்தினளாய்
அல்லுநன்பகலும் நெடுமால் என்றழைத்து இனிப்போய்
செல்வம்மல்கி அவன்கிடந்த திருக்கோளூர்க்கே
ஒல்கிஒல்கி நடந்து எங்ஙனே புகுங்கொல் ஒசிந்தே.

பெருகுகின்ற கண்ணீரோடு மயக்கத்தையுடைய மனத்தையும் உடையவளாய் நல்லபகலும் இரவும் மிக்க காதலை உடையவனே என்று அவனைக் கூவி யழைத்துக் கொண்டே போய் செல்வம் கொழித்து அவன் சயனித்திருக்கிற திருக்கோளூருக்கு அசைந்தசைந்து நடந்து தளர்ந்து என்மகள் எப்படிப் போய்ப் புகுவளோ.

போன தன் மகள் அங்கு எப்படி ஆவள் என்று தன் மனத்திரையிலே கற்பனை செய்து பார்த்து அவ்விருப்பைக் கண் கூடாகக் காண வியலாது போயிற்றே என்று ஏங்கினுள் தாய். ஆனால் அவ்வெண்ணத்தோடேயே தன் மகளின் தன்மையை எண்ணுகிருள். இந்நிலையிலுள்ளவள் எப்படி அவ்வூர் போய்ச் சேரப் போகிருளோ என்று ஐயுறுகிருள்.

மல்குநீர்க் கண்ணேடு

பெருகுகின்ற நீரையுடைய கண்ணேடு. அவனைப் பிரிந்த விரகத்தாலே வந்த கண்ணீர்.

மையலுற்ற மனத்தினளாய்

ஒரே மயக்கத்தில் ஆழ்ந்த மனத்தையுடையளாய். நாம் போனுல் நம்மை ஏற்பனோ உதாசீனம் செய்வனோ என்று மயக்கம். காதற் பிச்சில் அறிவு தடுமாறிய நிலை.

அல்லு நன்பகலும்

நன்பகலும் அல்லும். நல்ல பகற்பொழுதினும் இரவிலும். காலம் தெரியாதே ஒரே போக்காக. "நள்ளிரவும் நண்பகலும்" என்றாற் போல.

நெடுமால் என்றழைத்து

அவனுக்குத் தன்மேல் உண்டான நீண்ட காதலைக் கூறி அத்தகைய காதலை உடையவனே என்றழைத்து. அவன் வியாமோகம் இவளுக்குப் பற்றாசாயிற்று.

இனிப்போய்

அப்படிக் கூப்பிட்டாலே போதாதோ உண்மையில் அவனுக்கு இவளைப்பற்றிய சிந்தையுண்டானால் அது கேட்டு வந்து இவளுக்கு முகங்கொடானோ. அப்படி அவன் வராவிடினும் தான் அவனிருந்த இடம் தேடிப்போய்.

செல்வம் மல்கி அவன் கிடந்த

எல்லாச் செல்வமும்மிக்குப் பெருகி வெள்ளமிடும்படி அவன் அச்செல்வத்தைக் கண்டு தருக்கிச் சாய்ந்து கிடக்கிற. இவளை கூப்பீடு கேட்டுப் பாதி வழியேற வந்து அணைத்துக்கொடு போகாதே அவன் கிடந்தது செல்வச் செருக்காலேயிறே. அப்படி அவன் செய்திருந்தால் என் மகள் மனம் அடையும் பெருமித அழகை அவன் ரஸித்திருக்கலாம். தன் செருக்காலே அதை இழந்தான்.

கிடந்த

இவளும் அவன் கிடையழகு காண ஆசைப்பட்டவள். "கிடந்ததோர் கிடக்கை கண்டும் எங்ஙனம் மறந்து வாழ்கேன் ஏழையேன் ஏழையேனே" என்றாரும் உண்டே.

ஒல்கி ஒல்கி நடந்து ஒசிந்து

தள்ளாடித் தள்ளாடி. கால்கள் பின்னலிட நடந்து அந்நடையாலே தளர்ந்து

எங்ஙனே புகுங்கொல்

எப்படிப் போய்ச் சேரப் போகிறாள். அவன் வீடாதலாலும் போகிறது பெண்ணாதலாலும் 'புகும்' என்றார். புக்ககம் என்று வழக்காதலாலே.

எட்டாம் பாட்டு

ஒசிந்த நுண்ணிடைமேல்
கையைவைத்து நொந்துநொந்து
கசிந்த நெஞ்சினளாய்க் கண்ணநீர்
துளும்பச் செல்லுங்கொல்
ஒசிந்த ஒண்மலராள் கொழுநன்
திருக்கோளூர்க்கே
கசிந்த நெஞ்சினளாய் எம்மை
நீத்தஎம் காரிகையே.

துவண்ட ஒளிபொருந்திய மலர்மகளுக்கு நாயகனது திருக்கோளூர்க்கே உருகும் நெஞ்சையுடையளாய் எங்களெல்லோரையும்விட்டு அகன்ற அழகியான என் மகள் தளர்ந்த தன்னிடையிலே கைவைத்து மிகவும் நொந்து நெஞ்சுருகியவளாய் கண்கள் நீர்த்துளிக்க போய்ச் சேர்வாளா.

இதுவும் முன்பாசுர மனோபாவத்தோடொன்றியது. தான் போய்ச் சேரவுன்னிய திருப்பதிக்கு என் மகள் எப்படியேனும் போய்ச் சேர்வாளா என்று ஐயுறுகின்றது தாய் மனம்.

ஒசிந்த நுண்ணிடைமேல்

இடையோ இயற்கையிலேயே நுண்ணியது. இடை என்று ஒரு அவயவம் உண்டோ இல்லையோ என்று கண்டார் சங்கிக்கும்படியிருப்பது. "இல்லையே நுசுப்பு என, பார் உண்டு என்னவும்" என்று கம்பர் பிராட்டியைக் கூறினார். இப்பெண்ணுக்கு இடை என்ற அவயவமே இல்லையே என்று கண்டார் சிலர் கூவ. வேறு சிலர் மேலுள்ள அவயவங்களைக் காட்டி அவை நிலைக்க இடை என்ற அவயவம் இருந்தே தீரவேண்டும் என்று அனுமானத்தாலே இடையுண்மையைச் சாதிக்கும்படி அப்படி இழை போன்ற மெல்லிடை. அவ்விடை நடையாலே தளர்ந்து முறிவது போன்று நோக. அதன் மேலே

கையைவைத்து

தன் கையை வைத்து அழுத்தி

நொந்து நொந்து

இப்படி ஒருபுறம் நோக அங்கே கையை வைத்து அழுத்தி வலியை ஆற்ற மறுபுறம் நோகவுற உடனே அப்புறத்தை அழுத்த. இப்படி நோதலும் கைவைத்தழுத்தி

ஆற்றலுமாகவே. இடை முறிந்து விடுமோ என்று பயந்து கைவைத்துப் பிடிப்பது போல.

கசிந்த நெஞ்சினளாய்

உள்ளம் நீர்ப்பண்டமாய் உருக. வேட்கை பெருகவே உள்ளம் உருகுகிறது. "உருகு மால் நெஞ்சம் உயிரின் பரமன்றிப் பெருகு மால் வேட்கையும்" என்பதும் இவர் பாசுரம் தானே.

கண்ண நீர்துளும்ப

உள்ளே நெஞ்சு நீராயுருக வெளியே கண்ணீர் ஆறுகப் பெருகுகிறது. இப்படி உள்ளும் புறமும் கரைந்து உருகி ஓட.

செல்லும் கொல்

இத்தனைத் துன்பத்தையும் பொறுத்துக் கொண்டு போய்ச் சேர்வளா?

ஒசிந்த ஒண்மலராள்;

ஒள்ளிய மலர்மேல்தான் தங்கிலும் அப் பூவும் உறுத்தும்படி மென்மையான திருவடி களை உடைய திருமகள், அப்பூவின் உருய் வும் பொருது துவளும் இலக்ஷ்மி.

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும்
மாதர் அடிக்கு நெருஞ்சிற் பழம்"

என்றல்லவா குறள் கூறிற்று.

கொழுநன்

அத்திருமகள் நாயகன்.

திருக்கோளூர்க்கே

அவனது ஐச்வர்யம் எல்லாம் தேங்கி நின்ற ஊருக்கு.

கசிந்த நெஞ்சினளாய்

அவ்வூர்க்கே அன்பு செய்யும் மன முடையளாய் அவ்வூர் நினைப்பிலே மனம் நீர்ப்பண்டமாக பள்ளத்துப் பாயும் நீர் போல் அவ்வூர் நோக்கியோடும் மனமுடை யாளாய்.

எம்மைநீத்த

எங்களை விட்டகன்ற. என்னை மட்டு மல்ல, அவள் விட்டது. மற்றச் செவிலியரை விட்டாள். தோழியரை விட்டாள். தனக்கு கப்பான பூவை பைங்கிளிகள் பந்து தூதை பூம்புட்டில்கள் அனைத்தையும் விட்டாள். எங்கள் எல்லோரையும் ஸர்வ சங்க பரித் யாகம் பண்ணிச் சென்ற.

எம்காரிகை

எங்களுடைய பெண். பெண் என்ருல் சாதாரணமான பெண்ணு. அழகே உரு வெடுத்தவள். அவன் திருமார்பிலே வைத் திருக்கிருனே 'ஒசிந்த ஒண் மலராள்' அவ ளழகுக்கு ஒன்றும் குறைந்தவளில்லை.

ஒன்பதாம் பாட்டு

காரியம் நல்லனகள் அவைகாணில்
என் கண்ணுக்கு என்று
ஈரியாய் இருப்பாள் இதெல்லாம்
கிடக்க இனிப்போய்
சேரிபல்பழிதூஉய் இரைப்பத்
திருக்கோளூர்க்கே
நேரிழை நடந்தாள் எம்மை
ஒன்றும் நினைத்திலளே.

நன்ருகச் செய்யப்பட்ட பொருள்களைக் கண்டால் என் கண்ணனுக்கு என்று அன்பு பாராட்டி இருப்பாள். அதெல்லாம் கிடக்க இப்போது போய் சேரியெல்லாம் பலவித அபவாதங்களைக் கூற அழகிய அணிகளை யுடைய என் பெண் திருக்கோளூர்க்கே நடந்து போனுள். எங்களையெல்லாம் ஒரு சிறிதும் நினைத்தாளில்லை.

காரியம் நல்லனகள் அவை காணில்

நல்லனகள் காரியம் அவை காணில், நன்ருகச் செய்யப் பெற்ற பொருள் எவை யாயினும் அவற்றைக் கண்டால்.

என் கண்ணனுக்கு என்று

இவை என்னுடைய கிருஷ்ணனுக்கே ஏற்கும். இவை அவனுக்கு உகப்பாயிருக்கும் என்று. எந்த நல்ல வஸ்துவைக் கண்டு தன் மனம் உகந்தாலும் சரி உடனே அப்பொருள் தனக்கென நினையாள். அவள் மனம் கண் ணனை நினைக்கும். இது அவனுக்கே தகும் என்பாள். இப்படி எல்லா நல்ல பொருளும் கண்ணனுக்கு என்

ஈரியாய் இருப்பாள்

உள்ளம் உருகுவாள். அவனுக்கு என்று நினைத்த நினைவோடே அவன் இதை எப்படி ரஸிப்பான் என்று தன்னுள்ளே கற்பனை செய்து பார்ப்பாள். இது அவன் சம்பந்தம் பெற்றால் எப்படி சோபிக்கும் என்று எண்ணுவாள் அந்த ரசனையிலே மனம் நீராய் உருகி விடுவாள். அந்த உருக்கத்திலே தானும் அப்பொருளைத் துய்க்காள்

இதெல்லாம் கிடக்க

இப்படி அவள் தேர்ந்தெடுத்தவை, கண்ணனுக்கு என்று தேர்ந்தெடுத்தவை ஒன்றா? இரண்டா? இவையெல்லாம் கிடக்க, அவற்றைக் கொண்டாவது போனளா. அதுவுமில்லை.

இனிப்போய்

இப்போது சென்று, தான் தேர்ந்த பொருள்களைக் கொள்ளக் கண்ணன் வருவான் என்று இதுவரை இருந்தாள். இப்போது அவை இங்கே கிடக்கத்தான் அவனிருக்குமிடம் தேடிப் போனாள்.

சேரிபல்பழி தூஉய் இரைப்ப

இப்படி அவள் போனதன் பலன் பக்கத்திலுள்ளார் பழி கூறுகிறார்கள். அதனையும் ஒருவரோடொருவர் மறைவிலே கூறுகின்றார் என்பதில்லை. சேரியில் நாற்சந்தியிலும் பழியை இரைக்கிறார்கள். எங்கும் இதே பேச்சு. பழிதான் ஒன்றா இரண்டா. ஒருத்தி "தன்னை அவளுக்கு என்று ஆக்கி வைத்தாள்" என்கிறாள். ஒருத்தி "வைத்தென்ன! அது முடிந்ததா?" என்கிறாள். வேறொருத்தி "ஏதடீ அவனிடம் தேடிப் புறப்பட்டுவிட்டாளே!" என்கிறாள். பின்னொருத்தி "ஒருதாய்தான் இருக்கிறாளே என்று நினைக்கவாவது செய்தாளா? என்கிறாள். மற்றொருத்தி "இப்படி நாம் திமிராய்த் தனி வழி போனாள் என்று ஊர்சொல்லுமே என்றாவது நினைக்கவில்லையேடீ" என்கிறாள். எல்லாவற்றுக்கும் மேலாக ஒருத்தி இப்படி ஒரு பெண் நம்மைத் தேடிப் புறப்பட்டு விட்டதே. சே! அப்படி விடக்கூடாது என்று பாதி வழி வந்தாவது அவன் பற்றிக் கொண்டானா அதுகூட இல்லை" என்று பரிகசிக்கிறாள்.

திருக்கோளூர்க்கே

அவன் சயனித்திருக்கும் திருக்கோளூருக்கே. வழியிலே தங்கினளில்லை. நேரே அவ்வூரை நோக்கி.

நேரிழை

அழகிய ஆபரணங்களை அணிந்த என் பெண்.

நடந்தாள்

ஒன்றும் நேராததுபோல நடந்தாள். ஊரார் பழி கூறுவார் என்று நினைத்தாளா. தாய் வருந்துவாள் என்று கருதினாளா. ஊரார்பழியே தனக்குத்தாரகமாகக்கொண்டு நடந்தாள். 'அலரெழ ஆருயிர் நிற்கும் அதனைப் பலரறியார் பாக்கியத்தால்' என்றார் வள்ளுவர். அவர் குறளுக்கு இலக்ஷ்யம்போல வல்லவா என் பெண் போயிருக்கிறாள்.

(தொடரும்)

சென்னை: அருணசலேசுவரர் கோயிலில் 27-7-61 மாலை 6-30 மணிக்கு பெரிய புராண விரிவுரைத் தொடக்க விழாவை சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். பெரிய புராண விரிவுரை கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களால் பிரதி புதன்கிழமை தோறும் மாலை 6-30 மணியிலிருந்து நடைபெற்று வருகிறது.

◆ ◆ ◆

திருச்சிராப்பள்ளி: நாகநாதசுவாமிகோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 24-8-61ல் நடைபெற்றது.

◆ ◆ ◆

மன்னார்குடி: இராஜகோபாலசுவாமி கோயிலில் செங்கமலத் தாயாருக்கு பிரம்மோற்சவம் 6-8-61 முதல் 15-8-61 வரை நடைபெற்றது.

திருப்பாச்சிலாச்சிராமக் கல்வெட்டுவரலாறு

[வித்துவான் திரு. வை. சுந்தரேசவாண்டையார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.]

திருப்பாச்சிலாச்சிராமம் என்பது, "செங் கமலப் பொதியவிழச் சேல்பாயும் வயல் மதுவாற் சேறு மாறாப் பொங்கொலிநீர் மழ நாடு" என்று சேக்கிழாரடிகளால் சிறப் பிக்கப்பெற்ற மழநாட்டுத் தேவாரம் பெற்ற பதிகளுள் ஒன்றாகும். இவ்வூர் இக் காலம் திருவாசி என்று வழங்கப்பெற்று வருகின்றது. இது திருச்சிராப்பள்ளிக்கு வடமேற்கே எட்டரைமைல் தூரத்தில் சேலத்திற்குச் செல்லும் பெருவழியில் இருக் கின்றது. இவ்வூர்த் திருக்கோயில், சைவ சமய குரவர்களால் பாடப்பெற்ற பழமையும், பெருமையும் வாய்ந்தது. சுந்தரமூர்த்தி நாய னார்க்குச் சிவபெருமான் நிதிக்குவை அளித் தது, திருஞானசம்பந்தப் பெருந்தகையார் பதிகம்பாடி கொல்லி மழவனது அருமை மக ளார்க்கு ஏற்பட்டிருந்த முயலகன் நோயைத் தீர்த்தது, முதலான அற்புதங்கள் நடந்த திருக்கோயில் இது.

இத்திருக்கோயிலில் சோழ மன்னர்களில் முதற் பராந்தகன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசாதி ராசன், இரண்டாம் இராசேந்திரன், முதற் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன் இவர்கள் காலங்களிலும்; பாண்டிய மன்னர் களில் கோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தரபாண்டிய தேவர், வீரபாண்டிய தேவர், இவர்கள் காலங்களி லும்; போசள அரசர்களில், வீரசோமேஸ்வர தேவன் காலத்திலும்: விசயநகர வேந்தர்களில், கிருஷ்ணதேவராயர் காலத்திலும் செதுக்கப் பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

ஊரின் பழம்பெயர்

மிகப் பழங்காலத்தே இவ்வூர், திருப்பாச் சிலாச்சிராமம், திருவாச்சிராமம் என்னும் பெயர்களைப் பெற்றிருந்தது. இதனை "நங்கள் பிரான் திருப்பாச்சிலாச்சிராமம் பணிய நண்ணும் போதில்," "நீடு திருவாச்சிராமம் மன்னும் நேரிழை பாகத்தார் தாள் வணங்கி" என்னும் தெய்வப்பாக்கிழாராகிய சேக்கிழார் பெருமான் திருவாக்கால் அறியலாம். (திரு ஞானசம்பந்தர் புராணம் செய்யுள் 310, 321). இதற்கு ஏற்ப இக்கோயிலிலுள்ள சோழமன்னர்களின் கல்வெட்டுக்களும் இவ் வூரைப் "பாச்சில் திருவாச்சிராமம்", "திரு வாச்சிராமம்"—எனக் கூறுகின்றன. இவற் றுள் பாச்சில் திருவாச்சிராமம் என்பது பாச்சில் என்னும் ஊருக்கு அருகிலுள்ள ளுள்ள திருவாச்சிராமம் என்று பொருள் படும். இத்திருவாச்சிராமம் என்னும் பெயர் இக்கோயிலிலுள்ள சுந்தரபாண்டிய தேவர் கல்வெட்டில் திருவாசிரம் என்று குறிக்கப் பெற்றுள்ளது. அப்பெயர் மருவி இக்காலம் திருவாசி என்று மக்களால் வழங்கப்பெற்று வருகின்றது.

இறைவரின் திருப்பெயர்

இத்திருவாசிச் சிவபெருமான் "பாச்சில் திருவாச்சிராமத்து தேவர்": "பாச்சில் திருவாச்சிராமத்துப் பெருமானடிகள்" "பாச் சில் திருவாச்சிராமமுடைய மகாதேவர், திருவாச்சிராமம் உடையார்" திருவாச்சிராம தேவர், திருவாசிரம் உடைய நாயனார் என் னும் திருப்பெயர்களால் குறிக்கப்பெற்றுள் ளனர்.

மண்டபங்களின் திருப்பெயர்கள்

இக்கோயில் மகாமண்டபத்தின் வட புறச் சுவரின் அடிப்பாகத்தில் மிகவும் சிதைந்துபோன கல்வெட்டின் அடிப்பாகத் தில் சில தொடர்கள் உள்ளன. அத்தொடர் ஒன்றில் பராந்தகன் திருமண்டபம் என்னும் பெயர் குறிக்கப்பெற்றுள்ளது. அம்மண்ட பத்து வாசல் இரு அருகால்களிலும் மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மனாகிய முதற் பராந்தக சோழன் காலத்துக் கல்வெட்டுக் கள் இருக்கின்றன. ஆதலின் பராந்தகன் திருமண்டபம் என்பது இந்த மண்டபம் ஆதல் வேண்டும்.

உத்தமசோழன் திருமண்டபம்

இக்கோயிலிலுள்ள இரண்டாம் கோபுரமாகிய திருமாளிகைத் திருவாயிலின் வடக்கு உட்பக்கத்தில் இருக்கும் முதற் குலோத்துங்கசோழதேவரின் 27-ஆம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டில் "பாச்சில் கூற்றத்து பாச்சில் திருவாச்சிராமமுடையார் கோயிலிலே உத்தமசோழ திருமண்டபத்தே இருந்து"—என்னும் தொடரினால் இக் கோயிலில் இப்பெயருள்ள மண்டபம் ஒன்று இருப்பது புலனாகிறது. அது மேற்குறித்த பராந்தகன் மண்டபத்தை அடுத்துக் கிழக்கிலுள்ள மண்டபம் ஆதல்வேண்டும்.

பெரிய திருமண்டபம்

இப்பெயருள்ள மண்டபம் ஒன்றை, இக் கோயில் இரண்டாம் கோபுரவாயிலாகிய திருமாளிகைத் திருவாயிலின் தென்பால் மேற்குப்புறச் சுவரில் (on the second niche) இருக்கும் கல்வெட்டின் தொடர் குறிப்பிடுகின்றது. பெரிய திருமண்டபம் என்பது இரண்டாம் கோபுரத்திலிருந்து முதல் கோபுரம்வரை இருக்கும் மண்டபம் ஆதல் வேண்டும். இம்மண்டபத்தின் வடக்கு வரிசைத் தூண்கள் ஒன்றில் சன்னல் கம்பிகள் குடைந்து அக்கம்பிகளுக்கு உட்பக்கத்தில் பந்துபோன்று எடுக்கமுடியாத உருண்டைக் கல் ஒன்றையும் செதுக்கி வைத்திருக்கும் சிற்பத்திறன் போற்றற்குரியதாகும். இம்மண்டபம் பழுதுறாமல் ஆண்டுதோறும் பழுது பார்க்கப்பெற்று வந்தது.

இதை உணர்த்தும் கல்வெட்டுப் பகுதி "பெரிய திருமண்டபத்துக்கு ஆட்டைவிட்டன் புதுக்கவேண்டும் விசத்துக்கு சந்திராத்தித்தவல்செல்ல ஆட்டைவிட்டன் நெல்லு முப்பதின் கலமும்" என்பதாகும்.

சில திருமேனிகள்

இத்திருக்கோயிலின் இரண்டாம் கோபுர வாசல் தென்பால், உள்பக்கத்தில் உள்ள முதலாம் இராசராசசோழன் கல்வெட்டில் **இராசராச விடங்கரைப்பற்றி** குறிக்கப்பெற்றுள்ளது. அது முதலாம் இராசராச சோழன் கல்வெட்டில் குறிக்கப்பெற்றிருப்பதாலும், அதற்கு இராசராசவிடங்கர் என்னும் திருப்பெயர் இருப்பதாலும், அது முதலாம் இராசராச சோழன் காலத்தில் எழுந்தருளுவிக்கப் பெற்றதாதல் வேண்டும்.

வரலாறு சம்பந்தமான அரிய செய்தி. சுந்தரமூர்த்தி நாயனார் இப்பாச்சிலாச்சிராமத்திற்கு எழுந்தருளி இறைவனை வணங்கி, அவர் தமக்கு நிதி அளித்தருளாமையினால் திருவுள்ளம் புழுங்கி "வைத்தனன் றனக்கே தலையுமெனாவும்" என்று பதிகத்தைத் தொடங்கி, திருப்பாட்டின் இறுதிதோறும் "இவரல்லா தில்லையோபிரானார்" என்று பாடி விழு நிதிக்குவை பெற்றார். இச்செய்கையைச் சேக்கிழார் பெருமான் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தில் (செய்யுள் 82) குறிப்பிட்டுள்ளார். இதனை இக்கோயில் மடைப்பள்ளியின் வடபுறச் சுவரில் சிதைந்துள்ள கல்வெட்டுப் பகுதியாலும் அறியக் கிடக்கின்றது. அக்கல்வெட்டுப் பகுதி "திருத்தம் பெற்ற குழி முந்நூற்றைம்பது. இவ்வாண்டு தரத்திலேபுக்கு இவ்வுடல் கொண்டு **கிழிகுடுத்தருளிய திருவாசலிலே** நாளொன்றுக்கு சிறுகாலைச் சந்திபதினாலு. இரவு சந்தி, திரு அத்தயாமம் அறுதியாக பதினெட்டு திருவிளக்கும் ஆக முப்பத்திரண்டு திருவிளக்கும் இவ்வாட்டை ஐப்பசி முதல் சந்திராதித்தவல் செல்லவும் இத்திருவிளக்கு ஆண்டார் பாலருவாயர் கண்காணியாக புரிக்க"—என்பதாம். இக்கல்வெட்டு, திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராச தேவர்க்கு யாண்டு 27-ஆவது இராசராச வளநாட்டுப் பாச்சில் உடைய திருவாச்சிராமமுடைய நாயனார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவர்கன்மிகளோம்—எனத் தொடங்குகின்றது. எனவே சேக்கிழார் பெருமான் குறிப்பிட்ட நிதி அளித்தருளிய வரலாறு இக்கல்வெட்டால்-உறுதி எய்துதல் வரலாற்று ஆசிரியர்களுக்குப் பெருமகிழ்ச்சி அளிப்பதாகும். மேலும் இக்கல்வெட்டால் இக் கோயில் வாசல் ஒன்றிற்கு, **கிழிகொடுத்தருளிய திருவாசல்** என்ற பெயருண்மையும் புலப்படுகின்றது.

வழிபாடு அல்லது பூசை

இத்திருக்கோயிலில் காலைச்சந்தி, உச்சியம் போது, இரவு சந்தி, அர்த்தயாமம் என்னும் நான்கு காலங்களில் பூசைகள் நடைபெற்று வந்தன.

தைப்பூசத்திருநாள்: தைப்பூசத் திருநாள் இக்கோயிலில் சிறப்பாக நடைபெற்றுவந்தது. அன்று இறைவர் தீர்த்தமாட எழுந்தருளுதல் உண்டு.

திருப்பாச்சிலாச்சிராமம் மழநாட்டுத் திருப்பதி என்பதற்குக் கல்வெட்டு ஆதாரம்

இரண்டாம் கோபுரத்து வாசலின் வடபாலுள்ள செழியரைத் தேசுகொள் ஸ்ரீகோவிராச கேசரிபன்மராகிய ஸ்ரீ இராசராச தேவர்க்கு யாண்டு கங-ஆவது (பதின்மூன்றுவது) மழநாடாகிய இராசாசரிய வளநாட்டுப் பாச்சில் கூற்றத்து மீபில் பிர்மதேயம் துடையூர் ஸபையோம், இந்நாட்டுப் பாச்சில் திருவாச்சிராமமுடைய தேவர்க்கு"—என்னும் கல்வெட்டுப் பகுதி மழநாடு முதலாம் இராசராச சோழனின் பதின்மூன்றும் இராச்சிய ஆண்டாகிய கி.பி. 998-இல் இராசாசரிய வளநாடு என்னும் பெயர்பெற்ற செய்தியைத் தெளிவாக விளக்குகின்றது. எனவே பாச்சில் திருவாச்சிராமம் மழநாட்டுத் திருப்பதி என்பதற்குக் கல்வெட்டு ஆதாரம் கிடைத்தது போற்றற்குரியது.

இராசாசரிய வளநாடு வரைசெய்யப் பெற்ற காலம்

இரண்டாம் கோபுர வாசலுக்குத் தென்பால் உள்பக்கத்தில் சிதைந்த கல்வெட்டொன்றில் "தண்டாற்கொண்டு தன்னெழில் வள ரூழியுளெல்லா யாண்டும் தொழுதகை விளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள் ஸ்ரீ கோவிராசகேசரிவன்மராகிய க+1(11)-ஸ்ரீ இராசராச தேவர்க்கு யாண்டு ஆவது இராசாசெரிய வளநாடு வகை செய்கின்ற ஆவணமும்"—என்னும் தொடர்கள் உள்ளன. இவைகளால் இந்நாடு முதலாம் இராசராச சோழனுடைய பதினொன்றும் இராச்சிய ஆண்டில் அதாவது கி.பி. 997-இல் வகைசெய்யப்பெற்றது என்று பெறப்படுகின்றது.

இவ்வூரைத் தன்னகத்துக்கொண்டுள்ள நாடு

இவ்வூர் முதற் பராந்தகசோழன் காலத்தில் பாச்சில் திருவாச்சிராமம் என்றும், முதலாம் இராசராச சோழன், முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திரன் இவர்கள் காலங்களில் இராசாசரிய வளநாட்டுப் பாச்சில் கூற்றத்துப் பாச்சில் திருவாச்சிராமம் என்றும்; முதற் குலோத்துங்க சோழனின் 27-ஆம் ஆண்டுக் கல்வெட்டில் தியாகவல்லி வளநாட்டுப் பாச்சில் கூற்றத்து மீபிலாற்று பாச்சில் திருவாச்சிராமம் என்றும், இரண்டாங் குலோத்துங்க சோழனின் பத்தாமாண்டுக் கல்வெட்டில் தீன சிந்தாமணி வளநாட்டுப் பாச்சில் கூற்றத்துப் பாச்சில் திருவாச்சிராமம் என்றும், மூன்றும் இராசராச சோழர், கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தரபாண்டியதேவர் இவர்கள் காலங்களின் கல்வெட்டுக்களில் முறையே இராசராச வளநாட்டுப் பாச்சில் கூற்றத்துத் திருவாச்சிராமம், இராசராச வளநாட்டுப் பாச்சில் திருவாசிரம் எனவும் குறிக்கப்பெற்றுள்ளது. வளநாட்டின்பெயர் மாற்றப்பட்டிருப்பினும் கூற்றத்தின் பெயர் மாற்றப்படவில்லை என்பது ஈண்டு அறியத்தக்கதொன்றும். வளநாடு என்பது இக்காலம் ஒரு ஜில்லாவிற்குச் சமம். கூற்றம் என்பது இரண்டு நாடுகளுக்கு இடையில் உள்ள ஒருசிறு பிரிவாகும். சோழமண்டலத்தில் இராஜேந்திர சிங்கவளநாட்டின் உட்பகுதியாகிய பொய்கை நாட்டிற்கும் இன்னம்பர் நாட்டிற்கும் இடையில் உள்ள மிறைக் கூற்றம் என்பது இதற்குச் சான்றாகும்.

பொதுச் செய்திகள்

கோயிலுக்கு நெல் அளந்த மரக்காலின் பெயர் இராச சஞ்சயன் என்பதாகும். 'இராச சஞ்சயன் என்னும் கண்டாரக்காலால் ஆட்டை விட்டன் பலிசையாக இருநூற்று இரு கலமும்"—என்னும் கல்வெட்டுப் பகுதி அறிவிக்கின்றது.

முதலாம் இராசராசசோழன் காலத்தில் கோயில் பண்டாரத்திலிருந்து ஒரு கழஞ்சு பொன் வட்டிக்கு வாங்கினவர்கள் ஓராண்டிற்கு ஒரு கலநெல்லைப் பலிசையாக அல்லது வட்டியாக அளந்துவந்தனர். எனவே ஒரு கழஞ்சுப் பொன்னுக்கு ஓராண்டிற்கு வட்டி ஒரு கலநெல் என்று பெறப்படுகின்றது.

இச்செய்தி "கழஞ்சினவாய் கலநெல் ஆட்டை விட்டன் பலிசையாக" என்னும் கல்வெட்டுத் தொடரால் அறியக்கிடக்கின்றது. இக்கோயிலுக்கு அன்பர்கள் கொடுத்த பொன் வெள்ளி இவை பாச்சில்கல்லரல் சிறுக்கப்பெற்று வந்தன.

முடிப்புரை

இத்திருக்கோயிலில், கல்வெட்டுத் துறையாளர் 1891-இல் ஒரே ஒரு கல்வெட்டைப் படியெடுத்து அதன் சுருக்கத்தை அந்த ஆண்டு அறிக்கை எண் 34-இல் குறித்துள்ளனர். அதன் பிறகு எவருமே இக்கோயிலில் சாந்துகளினால் மறைபட்டுக் கிடந்த கல்வெட்டுக்களை கண்டறிந்திலர் யான் அவ்வூர்க்குச் சென்றபோது பல கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்தேன்—அவ்வூர் பெருநிலக்கிழார் திருவாளர் கல்யாணசுந்தரம் பிள்ளை சாந்துகளைப் போக்கித் தெளிவாக யான் எழுதுமாறு உதவியதோடு, யான் தங்கியிருந்த மூன்று நாட்களுக்கும் உணவு முதலியன அளித்து ஊக்கியருளினார்கள்—அவர்களைப் பெரிதும் பாராட்டுகின்றேன். இங்குக் கல்வெட்டுக்கள் இருப்பனவற்றைப் பத்திரிகையில் யான் தெரிவித்த பின்னர், கல்வெட்டுத்துறையாளர் அண்மையில் சென்று படியெடுத்ததாக அறிந்தேன்.

திருமயிலைக் கபாலீச்சரம் பன்னிரு திருமுறைப் பெருவிழா

—: o :—

சென்னைத் திருமயிலைக் கபாலீச்சரத்தில் 9-8-61 முதல் 20-8-61 வரையில் பன்னிரு நாட்கள் திருமுறை விழா மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது. முதல் நாள், சென்னை அறநிலைய உதவி ஆணையாளர் திரு. T. H. விவேகானந்தம் பிள்ளை B.A.,L.T. அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்தார்கள். நாளுக்கொரு திருமுறையாக பன்னிரண்டு நாட்களிலும் பன்னிரு திருமுறைகள்பற்றியும் அறிஞர்கள் சொற்பொழிவாற்றினார்கள். கடைசிநாள் 20-8-61 காலையில் நால்வர்களுக்கு அபிஷேக ஆராதனைகளும், யானையின்மேல் பன்னிரு திருமுறை ஊர்வலமும் நடைபெற்றன. மாலையில் அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B.A.B L. அவர்கள் விழாவைத் துவக்கி வைத்துச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அறநிலைய அமைச்சர் திரு. M. பக்தவத்சலம் அவர்கள் தலைமையில், திருவாளர்கள் G. கலியாணம் பிள்ளை M.A., P. ஆலாலசுந்தரம் செட்டியார், M.A., கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் இம்மூவரும் முறையே "பன்னிரண்டாம் திருமுறை", "திருமுறைப் பெருமை", "பன்னிருதிருமுறை" என்னும் பொருள்கள்பற்றிச் சொற்பொழிவுகள் செய்தார்கள். அமைச்சர் அவர்கள் முடிவுரை கூறினார்கள்.

நயினார்கோயில்: நாகநாதேசுவரர் கோயிலில் ஆடிப்பூர விழாவில் 11—8—61 12—8—61, 13-8-61 நாட்களில் சமயச்சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

திருவாடானை: ஆதிரெத்தினேசுவரர் கோயிலில் ஆடிப்பூரவிழாவில் 11—8—61, 13-8-61, 14-8-61 நாட்களில் இன்னிசையரங்குகள் நடைபெற்றன.

சின்னமனூர்: பூலானந்தீசுவரர் கோயிலில் ஆடி வெள்ளி சிறப்புப்பூசை 4-8-61-ல் நடைபெற்றது. அன்று சுவாமி அறிவானந்தர் அவர்களால் 'தாயுமானார் காட்டிய பக்திநெறி' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றது.

மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

திருமங்கையாழ்வாருடைய பெரிய திருமொழி ஒன்பதாவது பத்தில் ஏழாவது பதிகத்தினால் திருவல்லவாழ்த் திருப்பதியை யனுபவித்து வருகிறோம். அதில் நான்காவது பாட்டளவும் முன்னிதழில் அநுபவித்தோம். இப்போது ஐந்தாவது பாட்டுத் தொடங்கி யநுபவிக்கிறோம்.

5. மஞ்சுதோய் வெண்குடை மன்னராய்
வாரணஞ் சூழ வந்தார்
துஞ்சினா ரென்பதோர் சொல்லைநீ
துயரெனக் கருதினையேல்
நஞ்சுதோய் கொங்கைமேல்
அங்கைவாய்வைத்து
அவள் நாளையுண்ட
மைந்தனூர் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே.

நெஞ்சமே! மேகமண்டலத்தளவு மோங்கின வெண்கொற்றக் குடையின்கீழே சக்கரவர்த்திகளாய் வளர்ந்து யானைத் திரள்கள் சூழவாழ்ந்தவர்கள் நீண்டகாலம் வாழகில்லாமல் மாண்டு போயினரென்னும் வார்த்தை உன் செவியில் பட்டிருக்குமே; அதனால் செல்வம் நிலைநிற்க மாட்டாததென்று உணர்ந்திருப்பாய் நீ; இதனால், இதுகாறும் செல்வம் திரட்டுவதில் வீணாகக் கருத்துக் கொண்டிருந்தோமே! அந்தோ! என்கிற அநுதாப வுணர்ச்சியுமுனக்குத் தோன்றி யிருக்கும்; தோன்றி யிருக்குமானால், பூதனையினது விஷந்தோய்ந்த முலையிலே அகங்கையையும் வாயையும் வைத்து உறிஞ்சியுண்டு அப்பூதனையினது வாழ்நாளை முடித்த பெருமிடுக்கனான பெருமானுறையும் திருவல்லவாழ்த் திருப்பதியைச் சென்று தொழாதொழியினும் வாயாற் சொல்லவாவது இசைந்திடுவாயாக என்றாராயிற்று.

இவ்வுலகத்துச் செல்வம் நிலை நிற்பதன்று; உயர்ந்த வெண்கொற்றக் குடையின் கீழ் இராஜாதிராஜர்களாக வீற்றிருந்து யானைகளைக் கட்டியாண்ட மஹாநுபாவர்களும் நாலுநாளிலே மாண்டு போனார்களென்பதை நெஞ்சே! நீ கண்டறியாயோ? கேட்டறியாயோ? ஏன் அறிந்திருக்கமாட்டாய்; நன்கு அறிந்திருப்பாய். ஆகையாலே இஹலோகத்துச் செல்வம் துயரை விளைப்பதேயன்றி நிலைநின்ற ஆனந்த ரூபமன்று என்பதை நீ யுணர்ந்து கொள்ளத் தட்டில்லை. ஆகவே, பண்டு பூதனையை முடித்த பெருமான் இன்னமும் விரோதிகளை மாய்ப்பதன் பொருட்டு நித்திய ஸன்னிதானம் பண்ணி யிருக்கப்பெற்ற திருவல்லவாழ்ப்பதியிலே பொருந்தப் பார் என்றதாயிற்று.

நஞ்சுதோய் கொங்கைமேல் அங்கை வாய் வைத்து அவள் நாளையுண்ட வரலாறு வருமாறு; கண்ணபிரானைப் பெற்ற தாயான தேவகிப்பிராட்டிக்கு உடன்பிறந்தவனாய் அக்கண்ணபிரானுக்கு மாமனாகிய கம்ஸன், தன்னைக் கொல்லப் பிறந்த தேவகீபுத்திரன் திருவாய்ப்பாடியிலே ஒளித்து வளர்தலை யறிந்து, அக்குழந்தையை நாடியுணர்ந்து கொல்லும் பொருட்டுப் பல அசுரர்களை ஏவ, அவர்களுள் ஒருத்தியான பூதனை யென்னும் அரக்கி பெண்ணுருவமெடுத்துத் தாயான யசோதைப் பிராட்டியின் வேடம் பூண்டு இரவிலே கோகுலத்திற்கு வந்து அங்குத் தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த கண்ணபிரானாகிய குழந்தையை யெடுத்துத் தனது நஞ்சு தீற்றிய முலையைக் கொடுத்துக்கொல்ல முயல, பகவானான குழந்தை அவ்வரக்கியின் தனங்களைக் கைகளால் இறுகப் பிடித்துப் பாலுண்ணுகிற பாவனையிலே அவளுயிரையும் உறிஞ்சி, அவள் பேரிரைச்சலிட்டுக் கதறி உடம்பு நரம்புகளின் கட்டெல்லாம் நீங்கி விழுந்து இறக்கும்படி செய்தனனென்பதாம். இவ்வரலாற்றை ஆழ்வார் இங்கு அநுஸந்தித்தது-இவ்வண்ணமாகவே விரோதிகளை அவலீலையாக ஒழித்திடவே இங்கு

அர்ச்சாமூர்த்தியாக ஸன்னிதி பண்ணி யிருக்கிறனென்பதைக் காட்டுதற்கென்க. ஈற்றடியில் "மஞ்சனூர்" என்கிற பாடமுமுண்டு. பொருளில் வாசியில்லையென்க. (5)

6. உருவினுர் பிறவிசேர் ஊன்பொதி
நரம்புதோல் குரம்பையுள்புக்கு
அருவிநோய் செய்துநின்று ஐவர்தாம்
வாழ்வதற்கு அஞ்சினுயேல்
திருவினுர் வேதநான்கைந் துதீ
வேள்வியோடங்க மாறும்
மருவினுர் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவுநெஞ்சே.

நெஞ்சமே! ஸூக்ஷ்ம சரீரத்தோடே கூடியிருந்து பிறப்பையடைந்து மாமிசத்தைப் பொதிந்துகொண்டு கிடக்கிற நரம்பும் தோலுமாகிற குடிசையினுள்ளே பஞ்சேந்திரியங்களானவை புகுந்து இன்னல்களை விளைத்துக்கொண்டு குடியிருப்பதைப்பதைப் பற்றி நீ அஞ்சினுயாகில், ஞானமும் அனுட்டானமும் மலிந்துள்ள வைதிகர்கள் குழுமிடமான திருவல்லவாழ்த்திருப்பதியிலே பொருந்துவாயாக என்று தம் திருவுள்ளத்திற்கு உபதேசிக்கிற வியாஜத்தினுல் ஸம்ஸாரிகளுக்கு உபதேசிக்கிறபடி.

நாம் பூண்டிருக்குமுடலின் இழிவு தெரியாமையில்லை; "திண்டாவழும்புஞ் செந்நீரும் சீயுநரம்பும் செறிதசையும், வேண்டா நாற்றமிகுமுடல்" என்று பிறர் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டாதபடி நாமே கட்கூடாகக் கண்டு தெரிந்துகொண்டிருக்கிறோம். இத்தகைய உடலினுள்ளே வன்குறும்பரான ஐவர் புகுந்து நின்று குமைக்கின்றனர். "கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலுமைங்கருவி" என்று நம்மாழ்வாரருளிச்செய்தபடி காண்கை கேட்கை தொடுகை மோருகை உண்கை ஆகிய ஐந்து தொழில்களை நடத்தும் ஐந்து இந்திரியங்களே இங்கு ஐவர் எனப்படுவன. அஃறிணையான பஞ்சேந்திரியங்களை 'ஐவர்' என்று உயர்த்திக் கூறியது. அவற்றின்மீது தமக்குள்ள சீற்ற மிகுதியையும் அவற்றின் கொடுமைக் கனத்தையும் காட்டுதற்கென்க. திணைவழுவமைதியென்பர் தமிழர். இவ்விந்திரியங்கள் தத்தமக்கு வேண்டிய விஷயங்களைப் புசிப்பதற்காக அருவித்தின்னும். அதைப்பரம போக்கியமாகக் கொள்ளுவர் ஸம்சாரிகள். அங்ஙனல்லாமல் நெஞ்சே! நீ அருவருப்புக்கொள்ளுவாயாகில் திருவல்லவாழ்ப் பதியைப் பொருந்திவாழ்ந்திடுவாயாக வென்றுராயிற்று.

வேதம் நான்கு-ருக்வேதம் யஜுர்வேதம் ஸாமவேதம் அதர்வணவேதம் என்பன. அன்றி, தைத்திரியம், பௌடியம், தலவகாரம், சாமம் என்னுமிவை யென்றலுமாம். இவற்றுக்குத் திருவினுர் என்று அடைமொழி கொடுக்கப்பட்டதானது மானிடர்க்குரிய குற்றங்களுள் எதுவுமில்லாமைபற்றி. ஐந்து வேள்விகளாவன-பிரமயஜ்ஞம், தேவயஜ்ஞும், பூதயஜ்ஞும், பித்ருயஜ்ஞும் மநுஷ்ய யஜ்ஞும் என்பனவாம். இவற்றுள், வேதமோதுதல் பிரமயஜ்ஞும்; யாகஞ் செய்தல் தேவயஜ்ஞும்; பலியீதல் பூதயஜ்ஞும்; பித்ருக்களை யுத்தேசித்துத் தர்ப்பணம் விடுதல் பித்ருயஜ்ஞும்; விருந்தினர்க்கு உணவளித்தல் மநுஷ்யயஜ்ஞும். அங்கம்ஆறும்=சிக்ஷா, வியாகரணம் சந்தஸ் நிருக்தம் ஜோதிஷம் கல்பம் என்று வேதாங்கங்கள் ஆறு. ஆக, நாலுமைந்து மாறும் வல்லவர்கள் மலிந்தவிடம் திருவல்லவாழ் என்றதாயிற்று (6)

7. நோயெலாம் பெய்ததோ ராக்கையை
மெய்யெனக் கொண்டு வாளா
பேயர்தாம் பேசும்பேச்சைநீ
பிழையெனக் கருதினுயேல்
தீயுலா வெங்கதிர்த் திங்களாய்
மங்குல்வானுகி நின்ற
மாயனுர் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவுநெஞ்சே.

மனமே! எல்லா நோய்களையுமிட்டுப் பண்ணின சரீரம் உண்மையில் பொய்யாயிருக்க, அதனை மெய்யென்றேயெண்ணிக் கொண்டு அவிவேகிகள் வீணுகப் பேசுகிற பேச்சுக்கள் பலவகைப்பட்டிருக்கும்; இவ்வுடலுக்கு மேற்பட வேறொரு பொருள் கிடையாதென்றும், ஆத்மா பரமாத்மாவென்று இரண்டு பொருள்கள் உள்ளனவாகச் சொல்லுவது மாயப்பேச்சென்றும்; அப்படி யிருந்தால் ஒரு நாளாகிலும் அவை கண்ணுக்குப் புலப்படமாட்டாவா? ஒரு நாளும் ஒருவர்க்கும் புலப்படாமையினுல் அவை அஸத்யங்களேயென்றும், காண்கிற வுடலுக்குத் தொண்டு பூண்டொழுக வேண்டுமேயல்லது காணுதவற்றுக்காக ஒன்று

செய்வது தவறென்றும் இப்படியெல்லாம் பேசிப் பாமரர்களை மயக்குவர்கள் நாத்திகர்கள்; அத்தகைய பேச்சுக்களைப் பிசகென்று நீகொள்ளக்கடவை. அங்ஙனம் கொண்டாயாகில் திருவல்லவாழ்ப்பதியைப் பொருந்தப் பார். அந்தத் திருப்பதி யாருடையதென்றால், தீயுலாவெங்கதிர்த் திங்களாய் மங்குல்வானாகி நின்ற மாயனுருடையது. ஸூரியனாகவும் சந்திரனாகவும் ஆகாசமாகவும் பரப்பி நிற்கின்ற பெருமானுடையதென்கை.

உலகிற் காணும் எல்லாப் பொருள்களையும் பகவான் படைத்தபோது, குயவன் பானையையும், சேணியன் ஆடையையும் படைப்பது போலல்லாமல் படைத்த பொருள்கடோறும் அப்பகவான்தான் உள்ளே புகுந்து வியாபித்து நிற்பதாக நூற்கொள்கை. "தத் ஸ்ருஷ்ட்வா; ததேவாநுப்ராவிசத்" என்று தைத்திரீயோபநிடதம் ஓதியிருப்பது காண்க. ஆகவே ஸகலபதார்த்தங்களும் பகவதாத்மகமாகவே யிருப்பது பற்றி "வெங்கதிர்த் திங்களாய் மங்குல்வானாகி நின்ற மாயனுர்" எனப்பட்டதென்க. "நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய், சீரார்சுடர்களிரண்டாய்ச் சிவனாய் அயனாய்" "கொண்டல் மாருதமும் குரைகடலேழும் ஏழுமாமலைகளும் விசும்பும், அண்டமுந்தானாய் நின்றவெம்பெருமான்" என்றிங்ஙனேயுள்ள பலபல பாசுரங்கள் காண்க. (7)

8. மஞ்சுசேர் வானெரி நீர்நிலங்
காலிவை மயங்கி நின்ற
அஞ்சுசே ராக்கையை அரண மன்றென்
றுய்யக் கருதினேயேல்
சந்துசேர் மென்முலைப் பொன்
மலர்ப்பாவையுந் தாமும் நாளும்
வந்துசேர் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவுநெஞ்சே.

நெஞ்சமே! மேகங்கள் சேர்ந்த ஆகாயம் நெருப்பு நீர் நிலம் காற்று ஆகிய இப்பஞ்சபூதங்கள் சேர்ந்த சேர்க்கையாகிய இவ்வுடலைப் பொருள்படுத்தாமல் நீ உய்ந்து போக நினைத்தியேல், எம்பெருமான் பெரிய பிராட்டியாரும் தானுமாய்க் கூடி வாழுமிடமான திருவல்லவாழ்த் திருப்பதியைச் சேருவாயாக என்றாராயிற்று.

இவ்வுடல் பஞ்சபூதங்களினாலாக்கப்பட்டது. ஆனதுபற்றியே சரீரம் பாஞ்சபௌதிக பிண்டமென வழங்கப்படுகிறது. வடமொழியாளர் மரணத்தைப் பஞ்சதா என வழங்குவர். பஞ்சபூதங்கள் ஒன்று சேர்ந்து வடிவெடுத்தால் அதை ஜன்மமென்கிறது. அவை தனித்தனியே பிரிந்து ஐந்தாக ஆய்விட்டால் மரணமெனப்படுகிறது. ஆகவே பஞ்சபூத பிண்டமான இவ்வுடலைப் பேணாதே ஞானமும் ஆனந்தமுமே வடிவெடுத்த ஆன்மாவைக்கொண்டு கடைத்தேற வேணுமென்று பாரிப்பது தகுதி; அங்ஙனம் பாரிக்குமிடத்துத் திருவல்லவாழ்ப்பதியே தஞ்சமெனத் தட்டில்லை.

அபராதங்களை அளவுகடந்து செய்திருக்கின்ற நாம் எம்பெருமானை கிரேபோய் நிற்க வழியில்லையே; அவன் குற்றங்களுக்குத் தக்கபடி தண்டிப்பவனாகையாலே அவனது தண்டனைக்குத்தானே நாம் உட்பட வேண்டியிருக்குமென்று நெஞ்சு தளும்ப, அதற்குத் தேறுதல் கூறுகின்றது மூன்றுமடி. "நீரிலே நெருப்புக் கிளருமா போலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால் பொறுப்பது இவளுக்கா" என்றும் "திருவடியைப் பொறுப்பிக்குமிவள் தன் சொல்வழி வருமவனைப் பொறுப்பிக்கச் சொல்ல வேண்டாவிறே" என்றுமுள்ள முமுக்ஷுப்படி ஸ்ரீஸூக்திகளை ஈண்டு நினைப்பது. இதைச் சிறிது விவரிப்போம்.

குளிர்ந்த தண்ணீரிலே நெருப்பு அணுகமாட்டாது என்றிருக்கச் செய்தேயும் கடலிலே படபாக்னி கிளர்வதாகக் காண்கிறோம். அது போலத் தண்ணளியே வடிவெடுத்திருக்கின்ற எம்பெருமான் திருவுள்ளத்திலே இந்த ஸம்ஸாரி சேதனர் அளவுகடந்து பண்ணின அபராதமடியாகச் சீற்றம் பிறந்துவிடும்; பிறந்தால் அவ்வபராதத்தைப் பொறுப்பது பெரிய பிராட்டியாருக்காக. இவளுடைய உபதேசாதிகளாலே எம்பெருமான் நிக்ரஹ சங்கற்பத்தைவிட்டு அநுக்ரஹசங்கற்பத்தை ஏற்றுக்கொள்வன். இது ஸம்பாவிதமோ? என்ன, ஸம்பாவிதமேயென்று மூதலிக்கப்படுகிறது. சீதைப்பிராட்டி அசோகவனத்தில் சிறையிருந்தபோது ஆஞ்சநேயர் அங்கு வந்து காண்கையில் அரக்கியர்களால் பிராட்டிபடும் நலிவுகளைக் கண்டு மனங்கலங்கி,

அக்குரங்கரசன் 'இவர்களை இப்போது நாம் ஒன்றும் செய்வதற்கில்லை; இராவணன் மாண்டு இராகவன் வெற்றி பெற்ற பிறகு இங்கு வந்து இவர்களைச் சித்திரவதஞ் செய்வேன்' என்று போயினன். பிறகு இராவணன் மாண்டனனாக, உடனே பிராட்டியிடம் ஓடிவந்து "பத்துமாதம் உம்மைப் படாதபாடும்படுத்தின இவ்வரக்கிகளை இப்போது சித்திரவதம் செய்யவே வந்திருக்கிறேன், அனுமதியளிக்கவேணும்" என்ன; பிராட்டி இதமான வார்த்தைகளைக் கூறி அவ்வனுமனது முயற்சியை மாற்றிவிட்டாளென்று ஸ்ரீராமாயணத்தில் வாசிக்கிறோம். இங்ஙனம் முரட்டுப் பிடிவாதமுள்ள குரங்கையே திருத்துமவளான பிராட்டி, பரமரஸிகனும் தனக்கு விதேயனுமான எம்பெருமானைத் திருத்துவதில் அருமையுண்டோ என்கை. ஆக, காருண்யமே வடிவெடுத்த கமலை உடனிருக்கையாலே நாம் நமது குற்றங்குறைகளைச் சிந்தைசெய்து கவலைப்படாமே கூசாது புகலாமென்றதாயிற்று. (8)

9\. வெள்ளியார் பிண்டியார் போதியா
ரென்றிவ ரோதுகின்ற
கள்ள நூல் தன்னையுங் கருமமன்றென்
றுய்யக் கருதினையேல்
தெள்ளியார் கைதொழுந் தேவனார்
மாமுநீ ரமுதுதந்த
வள்ளலார் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவுநெஞ்சே.

கீழ் எட்டுப் பாசுரங்களிலும் அருளிச்செய்தபடியே, ஆபாசபந்துக்கள் உற்றதுணைவரல்லர் என்கிற வுணர்ச்சியும், விஷயபோகங்கள் நமக்கு விஷமே யென்கிற வுறுதியும், இஹலோகத்துச் செல்வம் நிலை நிற்பதன்று என்கிற அத்யவசாயமும், இவ்வுடல் துச்சம் என்னுமுணர்ச்சியுமுண்டாகப் பெற்றாலும், வேதத்திற்குப் புறம்பான மதங்கள் தண்டவிடமெங்கும் பரவிக்கிடக்கையாலே அவற்றில் அந்வயிக்கப் பெருமையாகிற பாக்கியமுண்டாவது அரிதாதலால் அதனை இப்பாசுரத்தில் காட்டுகின்றார்.

வெள்ளியார்; வெள்ளியென்று சுக்கிரனுக்குப் பெயர். லோகாயதம் என்கிற நாத்திகமதத்திற்கு அவன்பிரவர்த்தகனாகையாலே வெள்ளியாரோதுகின்ற கள்ளநூல் கருமமன்று என்று கொள்ளுமாறு கூறுகின்றார். **பிண்டியார்** பிண்டியென்று அசோகமரத்திற்குப் பெயர். அதனை இருப்பிடமாகக் கொண்ட அருகதெய்வம் ஜைனர்களுடையது. ஜைனமதத்தினரான பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூலின் தொடக்கத்தில் உள்ள கடவுள் வணக்கத்தில் "பூமலிய சோகின் புனைநிழலமலர்ந்த" என்றது காண்க. **போதியார்**-போதியென்று அரசமரத்திற்குப் பெயர்: அதனை இருப்பிடமாக வுடையது புத்ததேவதை. புத்ததேவனைப் போதி வேந்தனென வழங்குதல் காண்க. ஆகவே போதியாரென்று பௌத்தரைச் சொன்னபடி. ஆக இப்படிப்பட்ட பாஹ்ய மதஸ்தர்களின் கொள்கைகள் நமக்கு உபாதேயமல்லவென்று துணிந்து வைதிக ஸம்பிரதாயநிஷ்டையுடையையாகில், நெஞ்சமே! ஸ்வரூப ஞானிகளால் ஸேவிக்கப்படுபவரும், பிரயோஜநாந்தரபரர்க்குங்கூட உடம்பு நோவக் கடல்கடைந்து அமுதமளித்தவருமான பெருமாள் நித்யவாஸம் பண்ணுமிடமான திருவல்லவாழ்ப்பதியை மேவித்தொழுவாயாக என்றாராயிற்று.

தெள்ளியார் கைதொழுந் தேவனார்: தெளிவுள்ளவர்கள் தொழும் பெருமாளென்றபடி. ஏது பரதேவதை என்னும் விஷயத்திலே கலக்கமற்றிருப்பவர்களும், 'உபாய உபேயங்களிரண்டுமவனே' என்று தெளிந்திருப்பவர்களுமான வைணவர்கள் தொழுந் தெய்வமென்க. முநீர் முந்நீரென்றபடி. தொகுத்தல் விகாரம். முனீர் என்றலுமுண்டு.

மேற்பாசுரம் இப்பதிகம் கற்றார்க்குப் பயனுரைத்துத் தலைக்கட்டுவது. திருவல்லவாழ்ப்பதியனுபவம் முற்றிற்று. இனி அடுத்த விதழில் திருக்கடித்தானத்தை யனுபவிப்போம்.

[தொடரும்]

திருவாஞ்சியம்: திருவாஞ்சிநாதர் கோயிலில் ஆடிப்பெருந்திருவிழா 3-8-61 முதல் 13-8-61 வரை நடைபெற்றது.

திருக்கோகர்ணம்: திருக்கோகர்ணேசுவரர் கோயிலில் ஆடிப்பெருந்திருவிழா 4-8-61 முதல் 14-8-61 வரை நடைபெற்றது.

சிவஞான போதம்

[திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.,]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

அங்ஙனம் ஒன்றாய வழியும், உயிர் உயிரே, உடல் உடலே; உயிர் உடம்பாகாது, உடம்பு உயிராகாது; ஆயின், உயிர் உடம்பாயும் அதற்கு வேறாயும் நிற்கும்; உடம்பு அவ்வாறு நிற்கவல்லது அன்று. இது போலவே உயிர்க்கு வேறாய முதல்வன், உயிராயும் நிற்பன், உயிர்க்கு வேறாயும் நிற்பன்; உயிர் முதல்வனோடு அங்ஙனம் நிற்கவல்ல தன்று—என்றபடி.

(ii)இனித் தானேயாதல் என்றது முதல்வன் பொருட்டன்மையால் உயிர்களின் வேறாதல்.

"விரிகதிர் ஞாயி றல்லர் மதியல்லர் வேத விதியல்லர் விண்ணும் நிலனும், திரிதரு வாயு அல்லர் செறுதீயும் அல்லர் தெளிநீரும் அல்லர் தெரியில், அரிதரு கண்ணி யாளை ஒருபாக மாக அருள்காரணத்தின் வருவார்" என்றாற்போல வரும் திருவாக்குக்கள் முதல்வன் உலகிற்கலந்திருந்தும் அதனால்தான் தொடக்குண்ணுதும் பற்றப்படாதும் வேறே ஆதலை விளக்குதற்கு எழுந்தவை.

முதல்வன் உயிர்களின் வேறேயாயினும் அவற்றோடு கலந்தே நிற்பன் என்பதற்கு அநுபவம் காட்டுதற்குக் கண்ணொளியும் ஞாயிற்றின் ஒளியும் உவமையாகக் காட்டப் படும். கண் ஒருபொருளைக் காணுங்கால் அப்பொருள் மேல் விழுந்துள்ள ஞாயிற்றின் ஒளியோ விளக்கொளியே கண்ணிற்கலக்க வேண்டும் என்பது அறிவியல் துறையில் காணும் துணிபு. அங்ஙனம் கண்ணின் காணும் தன்மையும் புறஒளியும் கலந்து நிற்பினும், கண்காண்பதாயும், புறஒளி பொருள்களைக் காட்டுவதாயும் இருத்தலின் அவை ஒன்றற்கொன்று பொருண்மையால் வேறு என்பது எளிதின் உணரப்படும். இதுபோல முதல்வனது திருவருளாகிய ஞானத்தைச் சார்ந்த உயிர்கள் பொருள் களை அறிந்துவரும். ஆயினும், உயிர் அறிவது; முதல்வன் திருவருள் அறிவிப்பது. ஆதல்பற்றி ஒன்றற்கொன்று பொருட்டன் மையால் வேறுவேறே என்பது உணரப்படும்.

(iii)இனி அவையேதானேயாதல் என்றது முதல்வன் உயிர்க்குயிராய் நின்று கடவுதல் பற்றி உடனாதல். இதற்குக் காட்டப்படும் உவமை கண் ஒரு பொருளைக் காணும்போது அதனை அவ்வழிச் செலுத்திக் காட்டும் உயிரின் அறிவு அதனோடு பிரிப்பின்றி உடன் இயைந்து நிற்றல்.

"அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்" என்ற இடத்து, அண்ணல் அவளை நோக்கும்போது, அண்ணலின் கண் பார்வை மட்டுமா அவள் பக்கம் திரும்பியது? அண்ணலின் கருத்தும் அன்றோ அக்கண்ணோடு உடன் சென்று அவளை அக்கண்ணுக் குக் காட்டித் தானும் கண்டு திளைத்தது! இங்கே அண்ணலின் கருத்தும் வேறே, கண் பார்வையும் வேறே; ஆயினும், அவளைக் காணும்போது, அவன்றன் கருத்தும் கண்ணின் பார்வையும் ஒன்றையொன்று விடாது பின்னி நின்றமை வெளிப்படை, இதுவே உடன் ஆதல் எனப்படும். இவ்வாறு, உயிர் கள் பொருள்களை அறியும்போது முதல் வனது அறிவாற்றல் உயிர்களின் அறிவாற் றலோடு உடன் கலந்து அறிவிக்கும் என்பது ஞான நூல்களின் துணிபு.

உடனாதற்கு வேறோர் உவமை;—நாம் பேனாவால் எழுதும்போது, பேனா எழுது கிறதா? நம்கை எழுதுகிறதா? இரண்டுந் தான் எழுதுகின்றன. திட்டமாகச் சொன் னால், நாம் பேனாவைக் கொண்டு எழுது கின்றோம்; அல்லது, பேனா எழுதும்போது, நம் கை அதனைப்பற்றிப் பிரியாது நின்று அதனை எழுதுவித்து உடனாகி நிற்கின்றது எனச் சொல்லலாம். இதுபோலவே உயிர் கள் ஒன்றை அறிந்து இயற்றும்போதெல் லாம் முதல்வனும் அவற்றோடு கலந்து நின்று உணர்த்தி இயற்றுவிக்கின்றான். இங்ஙனம்

உயிர்களை உணர்த்திச் செலுத்தும் நிலையை உடனுதல் என மெய்யுணர்ந்தோர் கூறிவந்துள்ளனர்.

"உரைசேரும் எண்பத்து நான்கு நூறுயிரமாம்யோனிபேதம், நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் நின்றான் கோயில்" என்னுந் திருஞானசம்பந்தர் வாய்மொழியும்,

"உள்குவார் உள்கிற் றெல்லலாம் உடனிருந்
—தறிதி என்று
வெள்கினேன்" எனவும்,

"உள்ளத்தே நிற்றியேனும் உயிர்ப்புளே வருதியேனும் கள்ளத்தே நிற்றி அம்மா! எங்ஙனம் காணுமாறே!" எனவும்,

"ஓதுவித்தாய் முன், அறவுரை காட்டி அமணரோடே காதுவித் தாய், கட்ட நோய் பிணி தீர்த்தாய், கலந்தருளிப் போதுவித்தாய்" எனவும் எழுந்த திருநாவுக்கரசர் வாய்மொழிகளும் முதல்வன் உயிர்களோடு உடனாய் நின்று செலுத்துகிறான் என்னும் உண்மையை உணர்த்துவன.

உயிர்களோடு முதல்வனுக்கு உள்ள அநாதிசம்பந்தம் இங்ஙனம் ஒன்றாய், வேறாய், உடனாய் (அபேதமாய், பேதமாய், பேதாபேதமாய்) நிற்றல் என மூவகைப்பட மொழியநிற்பது. மூவகையாக எண்ணுதற்குக் காரணம் கலப்பு, பொருட்டன்மை, உள்நின்று செலுத்துதல் என்னும் மூன்று பெற்றிகளைத் தனித் தனிக் கருத்திற் கொண்டு நோக்கும் நோக்கமே ஆகும். ஆயினும் உடனாதல் மூன்றாவதாகக் குறிக்கப்பட்ட நிலையில் முன்னைய இரண்டு நிலைகளும் அடங்கும்.

முதல்வன் வியாபகத்தில் உயிர்கள் வியாப்பியமானாற்போல, மாயை, கன்மம் மாயேயம் எனப்படும் பாசம் உயிர்களில் வியாப்பியம் ஆகும் என்று உணர்தல் வேண்டும். நெருப்பு, மின் முதலியன ஒரு பொருளிற்றங்கித் தம் தொழிலைச் செய்யும்; அதுபோல, முதல்வனும் உயிர்களை அதிட்டித்து நின்று பாசங்களைத் தொழிற்படுத்துவன். இதனால், முதல்வன் தனது வியாபகத்தின் வியாப்பியமாகிய ஆன்மாவோடு ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்பன் எனச் சூத்திரத்து ஓதியதுகொண்டு, அவ்வான்மவியாபகத்தின் வியாப்பியமாகிய மாயை கன்மமாயேயங்களோடும் அவ்வாறே நிற்பவன் என்பது கூறாமையே பெறப்படும் என்க.

மேலைச் சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்துக் காட்டப்பட்ட, "அதனைச் சிருட்டித்து அதனுள் நுழைந்தார்; நுழைந்து சத்தும் தியத்துமாய எல்லாம் ஆயினர்" என்னும் தைத்திரீய சுருதி முதலியவை முதல்வன் உலகெலாமாகி வேறாய் உடனுமாய் நிற்பன் என இங்கு விளக்கப்பட்ட முடிவையே கொண்டவை என்பது சித்தாந்த சைவர்களது துணிபு.

"அவையே தானே ஆய்" என்னும் சூத்திரப் பகுதிக்கு மேற்கூறியதே பொருள் என்பதை ஆசிரியர் கூறியுள்ள வார்த்திகம் பற்றியும், சிவஞானசித்தி இப்பகுதியின் பொருளை" உலகெலா மாகி வேறாய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி" என விரித்து ஓதுதல் பற்றியும் உணரல் ஆகும்.

இனி, இவ்வரிய முடிவிற்கு மூலமாக உள்ள அருள்ஞான உரை திருஞானசம்பந்தர் திருவாய்மொழியே ஆகும். அஃது, "ஈறாய்முதல் ஒன்றாய் இரு பெண் ஆண் குணம் மூன்றாய் மாறாமறை நான்காய்வரு பூதம்மவை ஐந்தாய் ஆறார்சுவை ஏழோசையொ(டு) எட்டுத்திசை தானாய் வேறாய் உடன் ஆனான் இடம் வீழிம்மிழலையே" எனவரும்.

இங்ஙனம் மூவகைப்படக் கருதநிற்கும், முதல்வனுக்கு உலகத்தொடு உள்ள சம்பந்தமே அத்வைதம் என்னுஞ் சொல்லால் வேதங்களுட் குறிக்கப்படும். அநுபூதிமான்கள் கொண்டுள்ள இக்கருத்து உணராது கலைஞானம் ஒன்றே வல்ல அறிஞர்கள் பலர் அத்வைதம் என்னும் சொல்லினியல்பையும் அதன் பொருண்மையினையும் பலவாறு கூறுப. அவையெல்லாம் பின்னர் அதிகாரணமாக வைத்து ஆராயுமிடத்து விளங்கும்.

(ஆ) ஆணையின் என்னும் சொல் சிங்கநோக்காய் நிற்றலின், அஃது இருவினையான் என்றதன் முன்னரும் சென்றியைந்தது.

(இ) மேலே காரணத்தான் அன்றிச் சங்கற்பத்தால் தோற்றி நிறுத்தி அழிப்பன் என்றமைக்கு ஏற்ப, இங்கு, 'முதல்வன் உயிர்களை இவ்வாறு நின்று போக்கு வரவு புரிவிப்பன்' எனக்கூறுது, "அவையேதானேயாய் (அவை)

தன் ஆணையின் (வரும்) இருவினையின் போக்குவரவு புரிய, (தான்) (அவ்) ஆணையின் நீக்கம் இன்றி நிற்கும்'' எனப்பட்டது. அன்றே—அசைநிலை; அநாதியே இவ்வாறு நிற்கும் என உரைப்பினும் அமையும்.

(ஈ) இதனால் முதல்வன் உயிர்களைக் கலந்து நின்று ஐந்தொழிற் படுத்துவன் என்பது பெறப்படுதலின், அங்ஙனம் ஐந்தொழிலுக்கு வினை முதலாதல் முதல்வனது தடத்தலக்கணம் எனப்படும் பொதுவியல்பு என்பது உணரப்படும். மேலே அந்தம் என உத்தேசம் ஆக 'எடுத்துக் கொண்டபொருளுக்கு இங்கே இலக்கணம் கூறியபடி.

உ (1) அவையே தானே ஆய் என்றது ஓர் அதிகரணம்,

(2) ஆணையின் இருவினையின் என்றது ஓர் அதிகரணம்,

(3) போக்குவரவு புரிய என்றது ஓர் அதிகரணம்

(4) ஆணையின் நீக்கமின்றி நிற்கும் என்றது ஓர் அதிகரணம்;

ஆக நான்கு கூறுக வைத்து ஆராய்ந்து உரைக்கப்படும் இச்சூத்திரம்.

இரண்டாம் சூத்திரம் முதல் அதிகரணம்:—

1. சூத்திரப் பகுதி

"அவையே தானே ஆய்"

[இ-ள். (முதல்வன்) உயிர்களேயாய் அவற்றின் வேறுமாய், அவற்றோடு உடனுய் நின்று-என்றபடி.]

2. வார்த்திகம்

"ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் தானேயாய் நிற்கும் என்றது; அத்துவிதம் என்ற சொல்லானே ஏகம் என்னில் ஏகம் என்று சுட்டுவது உண்மையின், அத்துவிதம் என்ற சொல்லே அந்நியநாத்தியை உணர்த்துமாயிட்டு''.

[குறிப்பு: ஈண்டு-சூத்திரத்தின் முதற் கூறாகிய இம்முதல் அதிகரணத்தில் என்றபடி.

முதல்வன் இவ்வான்மாக்கள் பலவுமாய், தானேயாய், இவ்வான்மாக்கள் பலவுந் தானேயாய் நிற்கும்-என, மொழி மாற்றி இரட்டுற மொழிந்து கொள்ளுதல் வேண்டும்.

அத்வைதம் என்னும் வடசொல் தமிழில் அத்துவிதம் என ஆளப்படும்.

இவ்வான்மாக்கள்-முன் அதிகரணத்தில் 'சங்காரத்தின் வழியல்லது சுதந்திரமின்றி நிற்பவை எனக் கூறிப்போந்த ஆன்மாக்கள் என்றபடி.]

3. (i) இங்குத் தன்னுற் கூறப்படும் பொருள்

முதல்வன் பொருட்டன்மைபற்றி நோக்கும்போது உயிர்களின் வேறே; ஆயினும், உயிர்களைக் கலந்து நிற்றல்பற்றி அவற்றோடு ஒன்றாயும், அவற்றை உள் நின்று செலுத்துந்தன்மையால் அவற்றோடு உடனாயும் நிற்பன்-என்பது.

(ii) இதன்கண் ஐயம்

முதல்வனும் உயிர்களும் ஒன்றோ, வேறோ, அன்றி வேறும் ஒன்றுமேயோ (அபேதமோ, பேதமோ, பேதாபேதமோ) எனப் பலதலைப்பட உணர நிற்றல்.

(iii) பிறர்கூறும் பக்கம்

"இது (உலகம்) முன் ஆன்மா ஒருவனேயாக இருந்தது. மற்றெதுவும் இமைக்கவில்லை (தொழிற்படவில்லை)'. [ஆத்மாவா இதம் ஏக ஏவாக்ர ஆஸீத் ந அந்யத் கிஞ்சந மிஷத்]-ஐதரேயம் 1-1.

ஏ நல்லோய்! "இது முன் சத்தாகவே-இருந்தது; ஒன்றே இரண்டாவது இல்லை''

[ஸத் ஏவ ஸோம்யேதம் அக்ர ஆஸீத் ஏகமேவ அத்விதீயம்] சாந்தோக்கியம் 6-2-1.

"எழுத்தாற் (அ, உ, ம-ஆல்) சுட்டப்படாத நான்காம் நிலையினர் வழக்கைக் கடந்த, உலக முடிவில் நின்ற அத்வைத சிவனர்''

[அமாத்ர:, சதுர்த்த:, அவ்யவஹார்ய:, ப்ரபஞ்சோபசம:, சிவோத்வைத]-மாண்டூக்கியம்-12. இவ்வாறு முக்கியோப நிடதங்கள் கூறுகின்றன.

இவற்றில், முதற்பொருள் அத்விதீயம் (இரண்டாவதில்லது), அத்வைத (இருவிதம் அற்ற) என்னும் அடைகளால் விசேடித்துக் கூறப்படுதலின், முதற்பொருள் ஒன்றே உள்

பொருள் என்பது பெறப்படும். இதனால், முதல்வனையும் உயிர்களையும், வேறு வேறு பொருள்கள் என வைத்து, இரண்டாவது ஒரு பொருள் உள்ளதாகக் கொண்டு கூறும் முடிபு எதுவும் வேதாந்தங்களின் (உபநிடதங்களின்) கருத்தொழுங்கிற்கு மாறாகும்; ஆதலின், 'உபநிடதங்கள் கூறும் பிரமம் (பெரும்பொருள்) ஒன்றே உள்பொருள் (சத்); பன்மையுணர்வு பயக்கும் உலகனைத்தும், மயங்கிய வழிக் கயிற்றில் தோன்றும் அரவு போல, வெறுந் தோற்றம் மட்டுமேயாய பொய்யே; உயிர் பிரமத்தோடு முற்றொருமையுடைய பொருளேயன்றி, அதனின் வேறன்று' எனக் கோடலே பொருத்தம்: சங்கரர் முதலிய ஒரு பொருட்கொள்கையினர் (ஏகான்மவாதியர்).

இன்னும் அவர் தம் கொள்கைக்கு ஆதரவாகப் பின்வரும் பிருகதாரண்ணிய உரையினையும் காட்டுவர்: "காணப்படாமல் காண்கிறான்; கேட்கப்படாமல் கேட்கின்றான்; நினைக்கப்படாமல் நினைக்கின்றான்; அறியப்படாமல் அறிகின்றான். காண்பவன் அவனையன்றி வேறொருவனும் இல்லை; கேட்பவன் அவனையன்றி வேறொருவனும் இல்லை; நினைப்பவன் அவனையன்றி வேறொருவனும் இல்லை; அறிகின்றவன் அவனையன்றி வேறொருவனும் இல்லை. அவனே ஆன்மா—அந்தரியாமி (அறிவினுள் உறைவோன்) அமுதன்; அவனின் வேறுயது அழியும்." பிருகத்-3-7-23.

(iv) இதனை மறுத்துக்கூறும் சித்தாந்தத் துணிபு

மேலே காட்டிய மொழிகள் உபதேச மொழிகள்; கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து அத்வைதம் என்னும் சொற்குப் பொருள் ஒன்று என்பதேயாம் என்னின், ஒன்று என்று கருதும் பொருள் யாது? உமது மதத்தில் பிரமம் ஒன்றே உள்பொருள் ஆதலின், அது தானே தன்னை ஒன்று என்று ஏன் கருத வேண்டும்? வேண்டாமையின், அவ்வாறு கருதும் பொருள் அந்தப் பிரமத்திற்கு வேறாக உண்டென்பது பெறப்படும். இதனால் ஒரு பொருட் கொள்கை அடிப்படையில் தவறுடையது என்பது எளிதின் உணரப்படும். "அத்துவிதம் என்ற சொல்லானே ஏகம் என்னில், ஏகம் என்று சுட்டுவது உண்மையின்"—என்னும் வார்த்திகப்பகுதியால் பெறும் மறுப்பு இது. இப்பகுதியின் நோக்குப் பின்வருமாறு விரித்து உணரத்தக்கது:—

இனி, அறிவேயாக உள்ள பிரமம், அவிச்சை காரணமாக, ஈசுவரன், சீவன், அநாத்மா என, மயங்கிய வழிக் கயிற்றில் தோன்றும் அரவுபோலத் தோன்றி, வியவகார நிலையில் அவ்வவிச்சையின் காரியமாகிய உபாதிபற்றி (உடனிகழ்பொருள்கள் பற்றி)ப் பகுத்துணர நிற்றலின், அந்நிலை உள்ள சீவனுக்கே இந்த உபதேசம் எனின், கயிற்றை அரவாகக் காண்பதற்கும், இப்பியை வெள்ளியாகக் காண்பதற்கும், காண்போன்கண் மயக்கம் காரணம் அன்று. கயிறும், இப்பியும் தம்மீது படும் ஒளிக்கதிர்களைத் திருப்புவதில் உள்ள ஒரு புடை ஒப்புமையே என்பதை அறியாது ஏதேதோ அரோபம் (ஏற்றிக் காணல், superimposition) என அளவு கடந்து மனக்கற்பனையே கருவியாகக் கொண்டு பொருட்பெற்றிகளைச் சிறிதும் கருதிப் பாராமல் முன்னோர் சிலர் கற்பித்துக் கூறியவற்றையே மீள மீளக் கூறுவதே இப்பேச்சு; அன்றி இதில் சிறிதும் அறிவோ, ஆராய்ச்சியோ இல்லை என்பது எளிதின் விளங்கக் கூடியது.

அவிச்சை காரணம் என்கிறீர்; அவிச்சை என்பது அறியாமைதானே! அவ்வறியாமை யாருக்கு உள்ளது? பிரமம் ஒன்றே உள்ளது என நீர் கொள்ளுதலின், அது அன்றோ அறியாமையை உடையது என முடியும்? அப்பொழுது அறிவாய் இன்பமாய் உள்ள பிரமம் என்னும் உபநிடத உரைகளோடு மாறுபட்டு அதற்கு அறியாமையையும் மயக்கத்தையும், தனக்குள்ளே அங்காங்கு பாவங்களையும் ஏற்படுத்துவதாக முடிகின்றது அன்றோ!

இன்னும், அவிச்சை என்பது உள்ளதோ இல்லாதோ என வினவின், உள்ளதும் அன்று, இல்லதும் அன்று, இருமையும் அன்று, கூறொணாதது என்பீர். கூறொணாதது (அநிர்வசனம்) எனின், அதுபற்றிய கருத்து (concept) தெளிவுபடவில்லை என்பது தானே முடிவு. தெளிவுபடாத ஒருகருத்தை அடிப்படையாகக் கொண்டு விவாதிக்கும் பேச்சு உபநிடதங்களுக்கும் பிரம சூத்திரங்களுக்கும் உரிய உண்மையான கருத்தொழுங்

கைக் காட்டுகின்றது என்பது எப்படிப் பொருத்தம் ஆகும்?

மேலும் இம்மதத்தில் வியவகாரநிலை என்பதே பெத்தநிலை எனப்படும் பிறப்பு நிலை. இதனை மயக்கம் காரணமாக வந்த தோற்றமே எனின், இதற்கு வேறான முத்தி நிலையும், பிறப்பு நிலையினின்று பெயர்தற்குத் துணை செய்யும் சாதனங்களும் வேண்டாமற்போகும்.

இங்ஙனம் பிறப்புநிலையைப் பொய் என்று கொள்வது மரத்தின்மேலேறி நின்று அடிமரத்தை வெட்டுவது போன்றது என்பது தெளிவு. முற்றும் உணர்ந்து உறுதி கூறியருளிய திருவள்ளுவனார் உலகப் பொருள்களை நிலையில்லாதவை என்றாரே யன்றிப் பொய்த்தோற்றம் என்று கூறினாரில்லை. மேலும், பிறப்பு உண்டென்பதும், அது துன்பம் என்பதும், பற்றற்றபோதே பிறப்பறும் என்பதும், முதற்பொருளை உணர்ந்து வழிப்படின், பற்றற்ற இன்பம் இடையறாது பெருகும் என்றும் அவர் கூறுதலின், அதுவே உபநிடதங்களின் கருத்தொழுங்கு எனச் சிந்தித்து உணர்தல் அறிஞர் கடன். மேற்கோள்கள் காட்டப்புகின் விரிதலின் இதனோடு மறுப்பு நிறுத்தப்படுகிறது.

மேலும், ஏகமேவ (ஒன்றே) என முன்னர்க் கூறப்பட்டமையின், அடுத்துவரும் அத்விதீயம் என்னும் சொல்லும் ஏகம் எனவே பொருள்படும் என்றல், சுருதிகளைக் கூறியது கூறல், நின்று பயனின்மை என்னுங் குற்றங்களுக்கு உட்படுத்துவதாதல் காண்க.

பின்னர் அச்சொல்லின் உண்மைப் பொருள்தான் என்னை எனின், முதல்வன் உலகத்தோடு இரண்டுபட நில்லான், அதாவது பிரிப்பின்றி உடனாய் நிற்பன் என்பதே ஆகும். இஃது "அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்துமாயிட்டு" என்ற, வார்த்திக ஏதுவின் பிற்பகுதியின் பொருள். அந்நியநாத்தி-அநந்நியம், வேறன்மை, இருவிதம் தோன்ற நில்லாமை. இங்ஙனம் பொருள் கோடல் சீவான்மா பரமான்மாக்களுக்குப் பேதங்கூறும் சுருதிகளுக்கும், சீவான்மா பிறவாதது இறவாதது எனக் கூறும் சுருதிகளுக்கும் "நித்தியோ நித்தியானாம், சேதனஸ் சேதனானாம்" (நித்தப் பொருள்களுள் நித்தரும் அறிவுடைப் பொருள்களுள் அறிவுடைப் பொருளும் ஆவர் பரமான்மா) எனவரும் கடோபநிடத உரைக்கும் ஒத்ததாதல் அறியத்தக்கது. "பதிபசுபாசம் எனப் பகர் மூன்றில்—பதியினைப்போல் பசுபாசம் அநாதி" என்னும் திருமூலர் கருத்துக்கும் இங்ஙனம் அத்வைதம் என்றதை இருபொருட் கண்ணதாக வைத்துப் பொருள் கோடலே ஒத்ததாகின்றது என்பதும் காண்க.

இங்ஙனமாகலின், உலக சிருட்டிக்குமுன், உலகம் தன் காரணநிலையில் அடங்கி முதல்வன் திருவருளைச் சார்ந்து ஒடுங்கி நின்றது என்பதும், முதற்பொருள் ஒன்றே என்பதும், அஃது உலகத்தோடு கலந்து பிரிப்பின்றி உடனாய் நிற்கும் என்பதுமே மேலே காட்டிய ஐதரேயம், சாந்தோக்கியம் என்பவற்றில் காட்டிய சுருதிகளின் செம்பொருள் என்பது தெளியப்படும் இனி அத்வைதம் என்னும் சொல்லின் இயல்பை ஆராய்வோம்.

(தொடரும்)

மதுரை: மீனாட்சிசுந்தரேசுவரர் கோயிலில் ஆவணி மூல உற்சவம் 7-8-61 முதல் 25-8-61 வரை நடைபெற்றது.

மாதர்வேளூர்: அச்சந்தீர்த்த பெருமாள் கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 24-8-61ல் நடைபெற்றது.

வெளிமுத்தி: பழம்பதிநாதசுவாமி கோயிலில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 24-8-61 வியாழக்கிழமை காலை 7-30க்குமேல் 8 மணிக்குள் நடைபெற்றது.

திருவண்ணாமலை: அருணாசலேசுவரர் கோயிலில் கார்த்திகைத் தீப விழா 13-11-61 முதல் 26-11-61 வரை நடைபெறும்.

திருநாகை
ஸௌந்தரியராஜப் பெருமாள் கோயில்

நாகை ஸௌந்தரராஜப் பெருமாள் கோயில் அரங்கநாதர் கோபுரம்

சோழநாட்டில் ஆழ்வார்களால் மங்கள சாசனம் செய்யப் பெற்ற திவ்விய தேசங்கள் நாற்பது. அவைகளுள் ஒன்று திருநாகை என்பது. நாகப்பட்டினம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து அரை கல் தொலைவில் பெருமாள் கோயில் இருக்கிறது. சந்நிதி கிழக்கு நோக்கியிருக்கிறது. கிழக்கு வாயிலில் ஏழு நிலைகளையுடைய கோபுரமும், மேற்கு வாயிலில் ஒரு கோபுரமும் இருக்கின்றன. கோயிலுக்குள் மூன்று பிரகாரங்கள் உள்ளன. இறைவன் எழுந்தருளி யிருப்பது பத்ர கோடி விமானம் என்றும் ஸௌந்தரிய விமானம் என்றும் கூறுவர். எம்பெருமான் கிழக்கே திருமுக மண்டலமாக நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். ஸௌந்தரியராஜன் என்பது அவருடைய திருநாமம். திருமங்கையாழ்வாருக்கும் நாகராஜனுக்கும் ப்ரத்தியட்சம். ஆதிசேடன், பூமிப்பிராட்டி, மார்க்கண்டன், சோழ பூபதி இவர்கள் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றனர்.

மஞ்சுயர் மாமதி தீண்ட நீண்ட
மாலிருஞ் சோலை மணாளர்வந்தென்
நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நின்று நீங்கார்
நீர்மலையார் கொல்நினைக்க மாட்டேன்
மஞ்சுயர் பொன்மலை மேலெழுந்த மாமுகில்
போன்றுளர் வந்து காணீர்
அஞ்சிறைப் புள்ளுமொன் றேறி வந்தா
ரச்சோ வொருவ ரழகியவா

—திருமங்கையாழ்வார்.

எம்பெருமான் சந்நிதிக்கு வெளியில் இருமருங்கும் பச்சைவண்ணப் பெருமாளும், பவளவண்ணப் பெருமாளும் காட்சியளிக்கின்றனர். சன்னிதிக்கு வடபுறம் வீற்றிருந்த பெருமாள், பள்ளிகொண்ட பெருமாள், சேனை முதலியார் இவர்களின் சந்நிதி தெற்கு நோக்கி யிருக்கின்றன. தென்புறம் வடக்கு நோக்கி வைகுண்டநாதன் சந்நிதி யிருக்கிறது. தாயார் சந்நிதி கிழக்கு நோக்கியது. திருப்பெயர் ஸௌந்தரியவல்லி நாச்சியார்.

கர்ப்பக்கிரகத்திற்குப் பின்புறம் சீனிவாசப் பெருமாள் எழுந்தருளியுள்ளார். வடமேற்கில் ஆண்டாள் சந்நிதியும், வடகிழக்கில் இராமர், சீதை, இலட்சுமணர், அனுமார் இவர்களின் சந்நிதியுமிருக்கின்றன. வெளிப் பிரகாரத்தில் வடகிழக்கே வசந்த மண்டபமும், ஆழ்வார்கள், உடையவர், மணவாள மாமுனிகள் சந்நிதியும் இருக்கின்றன.

இப்பதிக்கு இரண்டு தீர்த்தங்கள் உள்ளன. சாரபுஷ்கரிணி வடக்கு வீதியிலிருக்கிறது. சௌந்தர்யபுஷ்கரிணி கோயிலுக்குள் தாயார் சந்நிதிக்கெதிரிலிருக்கிறது. கோயிலில் ஆறுகால பூஜை நடைபெறுகிறது. ஆனியில் தாயாருக்கும், பங்குனியில் பெருமாளுக்கும் திருவிழா நடைபெறுகிறது.

இத்தலத்து எம்பெருமானை, திருமங்கையாழ்வார் பத்துப் பாசுரங்களுடைய திருப்பதிகத்தில் பாடியருளி யிருக்கின்றனர். சிறந்த அகத்துறைப் பாடல்கள். ஒவ்வொரு பாடல் இறுதியிலும் "அச்சோ ஒருவர் அழகியவா" என்று கூறுகிறார். கடைசிப் பாசுரத்தில் 'நாகை அழகியாரை' என்று சொல்கிறார். திருமங்கை மன்னன் நாகையிலிருந்து பொன்னாலான புத்த விக்கிரகத்தை எடுத்துப் போய் அதைக்கொண்டு திருவரங்கம் மண்டபம், மதிள், விமானம் இவைகளைத் திருப்பணி செய்தார் என்பது குருபரம்பரைப் பிரபாவத்தில் காணப்படுவது.

இத்தலத்திற்கு கிரந்தமும் தமிழிலுமான ஸ்தலபுராணம் ஒன்றுண்டு. அச்சாகவில்லை. 12 அத்தியாயங்கள் உடையது. கண்டகன், சுகண்டகன் என்ற இருவர்க்கு மோட்ச மளித்ததும், கௌரிக்கு சேவை சாதித்ததும், நாகராஜனுக்கு நின்றான் இருந்தான் கிடந்தான் என்ற முறையில் காட்சி கொடுத்ததும், துருவனுக்கு அஷ்டாட்சரத்தை உபதேசிப்பதற்காக இறைவன் பூலோகத்துக்கு வந்ததும், புஷ்கரிணி மகாத்மியமும், சுந்தராரண்ய க்ஷேத்ரம் என்று இதற்குப் பெயருண்டென்பதும் இன்னும் பல செய்திகளையும் ஸ்தல புராணம் கூறுகிறது.

நாகையை அடுத்த வெளிப்பாளையத்தில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வைணவ பக்தரான முத்துகிருஷ்ணதாசர் என்பவர் பக்தாமிருத மஞ்சரி என்ற தோத்திரத் திரட்டைப் பாடியுள்ளனர். சௌந்தரியராஜப் பெருமாள் பஞ்சரத்தினம், சௌந்தரியவல்



திருநாகை சௌந்தரராஜப் பெருமாள் கோயில் திருக்குளமும் கோபுரமும்

லித் தாயார் பஞ்சரத்தினம் என்பவைகளையும் அவர் இயற்றியுள்ளார். அவை பக்திச் சுவை மிக்கன. எடுத்துக் காட்டாக ஒரு பாடல்—

ஏர்பூத்த விரணிய கருப்பனைத் தந்தபேர்
இன்புடைய பதுமநாபா
எழுதாத கிளவியெனும் வேதநூ லோர்ந்தோ
ரிசைக்குமேல் கீழார்பொழிற்
பார்பூத்த வுயிர்களுக் குயிராகி யெங்கும்
பரந்துங்க ரந்து முறையும்
பரமபுரு டாபரந் தாமா பணைத்தோள்
பரித்திடும் பஞ்சாயுதா
நார்பூத்த நல்லடியர் பாமாலை பூமாலை
நண்ணியொளிர் நளினபாதா
நவிலண்ட கோடிப்ப டைப்பாதியே செய்து
நாளுமகிழும் விநோதா
சீர்பூத்த மெய்யுணர் வளித்தெனைக் காத்தநின்
திருவருட் குரியதாமால்
திருநாகை யமருஞ் சௌந்தரிய ராஜனே
திகழ்கோடி ரவிதேஜனே.

இக்கோயில் பழைய கோயில். 400 ஆண்டுகட்கு உட்பட்ட கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. ஜக்குலு நாயுடு என்பவரும், அவர் மனைவியார் இலட்சுமியம்மையாரும் பல கைங்கரியங்கள் செய்திருக்கின்றனர். 350 ஆண்டுகளுக்கு முன் மண்டபம் முதலியவற்றைக் கட்டினர். இவர்களுடைய உருவங்கள் பெருமாள் சந்நிதியிலிருக்கின்றன. இராமுப் பிள்ளை யென்பவர் மூலவரைச் சிலையினுல் செய்து வைத்தார். அவருடைய உருவமும் சந்நிதியிலிருக்கிறது.

அன்னமும் கேழலும் மீனுமாய ஆதியை
நாகை அழகியாரை
கன்னிநன் மாமதிள் மங்கை வேந்தன்
காமருசீர்க் கலிகன்றிகுன்று
இன்னிசையால் சொன்ன செஞ்சொல்மாலை
ஏழுமிரண்டுமோ ரொன்றும்வல்லார்
மன்னவரா யுலகாண்டு மீண்டும் வானவராய்
மகிழ் வெய்துவரே.

—திருமங்கையாழ்வார்.

சேர்ந்து உனக்குக் குற்றேவல் செய்திலன்
என்சிந்தையில் நீ
ஆர்ந்ததற்கு ஓர்கைம்மாறு அறிகிலேன்—
பூந்துவரை
மன்னு கை ஆழிவலவா வலம்புரியாய்
தென் நாகையாய் அருளிச் செய்

—பிள்ளைப் பெருமாளையங்கார்.

இறைபணியாளர் மாற்றங்கள்

—:o:—

திரு. ஏ. என். பத்மநாபன் - வடுவூர் - கோதண்டராமசாமி கோயிலுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

திரு. என். இரத்தினம் - அம்பல் - ஸ்ரீ பிரம்மபுரீசுவரர் கோயிலுக்கும் கோயில் திருமாகாளம் ஸ்ரீ மகாகாளநாதசுவாமி கோயிலுக்கும் மாற்றப்பட்டிருக்கிறார்.

திரு. பி. கந்தசாமி - திருக்கண்ணபுரம் ஸ்ரீ சவுரிராஜப்பெருமாள் கோயிலுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

திரு. கே. பழனியாண்டி - தொட்டியம் ஸ்ரீ மதுரகாளியம்மன்கோயிலுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

திரு. கே. மாணிக்கம் - இஞ்சிக்குடி - ஸ்ரீபார்வதீசுவரர் கோயிலுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

திரு. சி. விசுவநாதன் - சுண்டபாளயம் ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலுக்கும் மருதமலை - ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயிலுக்கும் இறைபணியாளர் பொறுப்பிலிருக்கும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திரு, கே. நடராஜ மாணிக்கம் - திருச்செங்கோடு ஸ்ரீ அர்த்தநாரீசுவரர் கோயிலுக்கும் இராஜு கவுண்டன் அறக்கட்டளைகளுக்கும் எடப்பாடி - ஸ்ரீநஞ்சுண்டேசுவரர் கோயிலுக்கும் இறைபணியாளராக மாற்றப்பட்டிருக்கிறார்.

சிவப்பிரகாச சுவாமிகள்

அருளிச் செய்த

நால்வர் நான்மணி மாலை

(சிதம்பரம் - ஈசானியமடம் இராமலிங்கசுவாமிகள் உரை)

—:0:—

(முன் தொடர்ச்சி)

இங்ஙனமியற்றியேனும் இவரருள் பெற வேண்டுமென்பது கருத்து. வேட்டால் (யான்) போதுவனென நூலாசிரியர் தம்மைச் சுட்டி நுவன்றதாக உரைப்பாருமுளர்; இதுவும் அப்பொருளிலடங்கலின் இஃதுரையன்மையறிக. கடற்கே யென்னும் ஏகாரம் தேற்றம். மற்றையது ஈற்றசை. வேட்டான் பூட்டாக் கடற்கே போதுவன் என இயையும்.

மறைபுகழ்தலை [1]"நின்னுன் மொழிந்த மறை நின்னடிகள் வந்தித்தும்-பன்னுளருச்சித்தும் பாதந் தலைசுமந்து - முன்னுமம் வாசித்து முன்னையறியேனென்று-சொன்னு லடியனேன் சோதனைத்தோ நின்னியல்பே" என்பதனுனும், பிறைசூடி யென்பதனை [2]"நெற்றியங் கண்ணுடை நிமலத் தெம்பிரானுற்றவர்க் கருள்புரிகின்ற வுண்மையைத்—தெற்றென வுணர்த்தல்போற் றிங்களின்கலை-கற்றையஞ் சடைமிசைக் கவின்று பூத்ததே. நின்ன தொல்கலையைந் துமுப் பகலிடை நிரம்பிப்-பின்ன ரவ்வழி தேய்ந்துவந் தோர்கலை பிரியா-தின்ன பான்மையே நிகழுமெக் காலமு மென்றுன்-முன்னை யாவிதோ றிருந்தெலா மியற்றிய முதல்வன்" என்பதனுனும், கதிபயக்கும் ஏதுவாதலை [3]"நன்று மாதர நாவினுக் கரசடி நளினம் வைத் துயினல்லா-லொன்று மாவது கண்டில முபாயமற் றுள்ளன வேண்டாமா-லென்று மாதியு மந்தமு மில்லதோ ரிகபரத் திடைப்பட்டுப்-பொன்று வார்புகுஞ் சூழலிற் புகேம்புகிற் பொறியிலைம்புலனுேடே". என்பதனுனும் அறிக. (கஅ)

போதமுண்ட பிள்ளையென்பு
பொருகண்மாது செய்ததோ
காதல்கொண்டு சொல்லின்மன்னர்
கன்மிதப்ப வுய்த்ததோ
வாய்திறந்து முதலைகக்க
மகனைநீய ழைத்ததோ
யாதுநம்பி யரிதுநன்றெ
னக்கியம்ப வேண்டுமே.

(இ-ள்.) நம்பி—நம்பியாரூரவள்ளலே! போதம் உண்ட பிள்ளை என்பு பொருகண்மாது செய்ததோ—ஞானப்பாலையருந்திய ஞானசம்பந்த வள்ளல் எலும்பைப் பெண்ணுக இயற்றியதோ? சொல்லின் மன்னர் கல் மிதப்ப காதல்கொண்டு உய்த்ததோ-திருநாவுக்கரசு வள்ளல் கல் தெப்பமாக மிதப்ப அதைக் காதலிற் செலுத்தியதோ, முதலை வாய் திறந்து கக்க மகனை நீ அழைத்ததோ-முதலை தன் வாயைத்திறந்துமிழப் புதல்வனைத் தேவரீர் மீட்டதோ? யாது அரிது-இம்முத்தொழிலுள் எத்தொழிலரிது?, நன்று எனக்கு இயம்பவேண்டும்-தெளியச் சிறியேனுக்குத் தெரிவிக்கவேண்டும் எ-று.

பிள்ளையாரருந்திய பாலுருவாய்த் தோன்றினும் அது ஞானமே யென்பார், 'போதமுண்ட பிள்ளை' என்றும், கவினெலாந் திரண்டுள கன்னிகையாகப் படைத்தனரென்பார், கணவரைப் பிணித்

1. திருவிளையாடல்கல்லானைக்குக்கரும்பருத்திய படலம் உஎ.
2. கந்தபுராணம் சந்திரசாபப்படலம்-சஙு-சஇ.
3. திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை-கக.

தலிற் சிறந்த கருவியாகும் கடைக்கணியல்பைக் குறிப்பித்துப், 'பொருகண் மாது செய்ததோ' என்றும், அமணர்கள் பிணித்தகல்லே அஞ்செழுத்துண்மையாற் பாசமகன்றமையிற் றெப்பமாக மிதப்ப, அதனை வருணனும் தாங்கலின் மன மகிழ்ச்சியிற் செலுத்தினரென்பார், 'கன் மிதப்பக்காதல் கொண்டுய்த்ததோ' என்றும், உண்டமதலையை உருச்சிதைவின்றி உடனுமிழ்தலும் முதலைக்கியலாதாக, அதுவே, சின்னுட்சென்றபின், சென்ற வாண்டுக்குரிய வளர்ச்சிநிரம்பிய மதலை யாகவுமிழ, அழைத்தனரென்பார், 'முதலை கக்க மகனை நீ யழைத்ததோ' என்றும், இம்முச்செயலுஞ் செயற்கருஞ் செயலே யாயினும், கன்னிகையாக்குதற்கென்புமிதத்தற்குக்கல்லும் ஆதாரமாயிருக்க மகனையழைத்தற்கு அஃதில்லையாகவும், பாடலொன்ருன் அஃதுளதாக்கி, அழைத் தமையின் அவற்றினும் இஃதற்புதமுடையதென்பார், 'யாது அரிது', என்றும் இவை தேவரகசியமாகலின் யானே சிந்தித் துணர வல்லனேதேவரீரே செவ்விதிற் றெருட்டியருளவேண்டுமென்பார், நன்று எனக்கு அரிது இயம்பவேண்டும், என்றும் கூறினர்.

பொருதல் - காதளவுசென்றுதாக்கல் மாதென்பது அழகுடைமையிற்போந்த பெயர். கொண்டு மூன்றும்வேற்றுமைச் சொல்லுருவு. வாய்திறந்தென வேண்டாது கூறினர்; உமிழ்தற்கரியசேயை உமிழ்ந்தமையுணர்த்தற்கு. ஓகாரங்கள் மூன்றும் வினப்பொருளவேனும் இறுதியது பிரிநிலையின்மேற்று.

போதமுண்டபிள்ளையென்பதனை "[1]ஆனதன்மையினத் திருப்பாட்டினி னடைவே-போன வாயுவும் வடிவமும் பொலிவொடு நிரம்பி-யேனை யக்குடத் தடங்கிமுன் னிருந்தெழ வதன்முன்-ஞானபோனகர் பின்சமண் பாட்டினை-நவில்வார்' என்பதனுனும், வருணனும் தாங்கியதை "[2]அருணயந் தஞ்செழுத் தேத்தப் பெற்றவக்-கருணைநா வரசினைத் திரைக்க ரங்களாற்-றெருணெறி நீர்மையிற் சிரத்திற் றங்கிட-வருணனுஞ் செய்தனன் முன்பு மாதவம்" என்பதனுனும், ஆதாரமுளதாக்கி மகனையழைத்ததை "[1]வறந்திடு பொய்கைமுன் னிரம்ப மற்றவ-ணுறைந்திடு முதலைவந் துதிப்ப வன்னதாலிறந்திடு மகன்வளர்ந் தெய்தப் பாடலொன்-றறைந்திடு சுந்தர னடிகள் போற்றுவாம்" என்பதனுனும் அறிக. (கக)

வேண்டுநின் னடியார் மெய்யன் பெனக்கு
மருள்செய் சிவனே யலந்தே னந்தோ
முறையோ முறையோ விறையோ னேயென்
றழுது செம்பொ னம்பலக் கூத்த
னருளாற் பெற்ற வன்பினி லொருசிறி
தடிய னேற்கு மருளல் வேண்டும்
நீயே கோட னின்னருட் பெருக்கிற்
கேற்ற தன்றிள வேறுகந் தேறியைப்
பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக
திருந்திய வேத சிரப்பொருண் முழுதும்
பெருந்துறை யிடத்துப் பெருஞ்சீர்க்
குறுந்துறு நீழலிற் கொள்ளைகொள் வோயே.

(இ - ள்.) இள ஏறு உகந்து ஏறியை பரிமாமிசை வர பண்ணிய வித்தக-இளமைவாய்ந்த இடபத்தை விரும்பியேவர்ந்த இறைவரைப் புரவிமீதெழுந் தருளப் புரிந்த வித்தகரே!, பெருந்துறை இடத்து பெருஞ்சீர் குருந்து உறு நீழலில்-திருப்பெருந்துறையென்னும் தலத்திலே மிக்கமேன்மையடைய குருந்தமரத்தின் விரிந்தநீழலில், திருந்திய வேதசிரம் பொருள் முழுதும்-திருத்தமுற்ற வேத முடிவிற் செறிந்த சைவசித்தாந்தப் பொருள்முற்றும், கொள்ளைகொள்வோயே-சிவபெருமான்பக்கற்பெற்ற திருவாதவூரண்ணலே!, சிவனே நின் அடியார் மெய்யன்பு எனக்கும் வேண்டும்-சிவனே! உம்முடைய திருத்தொண்டர்களின் உண்மையன்பு எனக்கும் உரித்தாகவேண்டும்; அருள்செய் அலந்தேன்-அருள் செய்வீர்; இதில் ஆவல்மிகுந்தேன்: அந்தோ முறையோ முறையோ இறையோனே என்று அழுது - அந்தோ! (அருள்பாலியாமை) முறைமையோ! முறைமையோ! முதல்வனே! என்றுபுலம்பி, செம்பொன் அம்ப

1. பெரியபுராணத்தில் சம்பந்தமூர்த்திபுராணம்-கos௦.
2. ஷ டியில் வாகீசமூர்த்தி புராணம்-கஙo,

1. கந்தபுராணம் கடவுள் வாழ்த்து-உஉ.

லம் கூத்தன் அருளாற்பெற்ற அன்பினில்- செவ்விய கனகசபையில் நடித்தருளும் சிவ பெருமானருளாற் பெற்ற அன்பிலே, அடியனேற்கும் ஒருசிறிது அளித்தல் வேண்டும் - அடியேனுக்கும் மிகச்சிறிது தந்தருளல்வேண்டும். நீயே கோடல் நின் அருட்பெருக்கிற்கு ஏற்றது அன்று- முற்றும் தேவரீரே கொள்ளுதல் உமது கிருபைமிகுதிக்கு முறைமையன்று எ-று.

தருமதேவதையை இடபமாகவுடைய தம்பிரானுரை தனது தாயென்றுபசரிக்கப் படும் வேதப்பரியிலிவர்வித்த வித்தகரென் பார், 'இளவேறுகந் தேறியைப்பரிமாமிசை வரப் பண்ணியவித்தக' என்றும், பிறவிக் கடலைக்கடக்குந் துறையென்பார், 'பெருந் துறை' என்றும், தவச்சினைகணெருங்க, அறக்குழைதழைத்து, மெய்மைபூத்து, விளங்குவதென்பார், 'பெருஞ்சீர்க்குருந்து' என்றும், சார்ந்தார்க்கு ஆதிபௌதிக முதலிய தாபத்திரயங்களைத்தவிர்ப்பதென் பார், 'உறுநீழல்' என்றும், வேதமுடிவிற் செறிந்த சிந்தாந்தப்பொருள்களே திருத்த முடையன, ஏனையவை பிணக்குடையன வென்பார், 'திருந்திய வேதசிரப்பொருள்' என்றும், அவை முற்றும் ஒருங்குபெற்றவ ரென்பார், 'முழுதுங்கொள்ளைகொள் வோய்' என்றும், [1]"மெய்கலந்த வன் பரன் பெனக்குமாக வேண்டுமே" என வும், [2]"அலந்துபோனே னருள்செய்யாய்" எனவும், [3]"அந்தோ வலறிடே னுலறிடே னுவிசோரேன்முனைவனே முறையோ" எனவும், இங்ஙனம் ஒருகாலன்றி ஆங்காங் கும் மிகப்பலகாலமுழுதவரென்பார், 'இறை யோனே யென்றழுது' என்றும், பஞ் சகிர்த்தியநடம் புரிந்தருள்பரமராகலின் அவரால் அநுக்கிரகிக்கப்பெற்றனரென் பார், 'செம்பொன்னம்பலக் கூத்தனரு ளாற் பெற்ற' என்றும், பெற்றது எல்லை யிறந்த அன்பென்பார், 'அன்பினில்' என்றும், அற்பநல்கினும் அதுகொண் டுய்வேனென்பார் 'ஒருசிறிது' என்றும், பரிபாகியல் லாதயானும் உமது சந்நிதிவிசேடத்தால் பரி

1. திருவாசகம் திருச்சதகம்-எ௲.
2. ஷை பிரார்த்தனைப்பத்து-௪.
3. ஷை திருச்சதகம்-௨௨.

பாகியேயென்பார், 'அடியனேற்கும்' என் றும், மெய்த்தொண்டர்க்குரிய மெய்யன்பு எனக்கும் வேண்டுமென்றழுது, சிவன் பாற்பெற்றீராகலின், அங்ஙனமே வேண்டு மெனக்கும், சிறிதளிப்பதே முறைமை யென்பார், 'அருளல்வேண்டும்' என்றும், தக்காரையும் தகாரையும் ஒப்பப்புரக்கும் அருளின்முதிர்ந்து, உலகினர்க்கிருளோட்டி உண்மைவிளக்குவான் ஞானுதித்தனுக வுதித்த தேவரீர், நல்காதுகோடல் தகுதி யன்றென்பார், 'நீயேகோடநின்னருட் பெருக்கிற்கேற்றதன்று, என்றும் கூறினர்'

கூறவே, [1]"அன்புமருளு மறிவுக்கடை யாள - மென்பருணர்ந்தோர் சிவன்வாக் கிண்டு" என்றபடி [2]"கற்று மனமெனக் கதறியும் பதறியு-மற்றோர் தெய்வங் கனவினு நினையா-தருபரத் தொருவன வனியில் வந்து-குருபர னாகி யருளிய பெருமையைச்-சிறுமையென் றிகழாதே திருவடியிணையைப் - பிறிவினை யறியா நிழலதுபோல-முன்பின்னாகி முனியா தத்திசை-யென்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி-யன்பெனு மாறு கரையது புரள - நன்புல னொன்றி நாதவென் றரற்றி-யுரை தடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்-கரமலர் மொட்டித் திரதய மலரக்-கண்களிகூர நுண்டுளி யரும்பச்-சாயா வன்பினை நாடொறுந் தழை" த்தலுடைமையும், அதை அனைவர்க்கும் பாலிக்கும் அருட்டிற முடைமையும் ஒருங்கியைந்தமை அறி வித்தவாறாயிற்று. உம்மைகளிரண்டும் இழிவுசிறப்பு. ஓகாரங்களிரண்டும் முறைப் பாட்டில் வந்தன. பரிமா இருபெய ரொட்டு. வித்தகமென்பது விசித்திரத் தையும் அறிவையுஞ் சுட்டி இரட்டுற மொழிதலாய் நின்றது. நீயேயென்னும் ஏகாரம் பிரிநிலை. மற்றையது அசை. திருந்தியகொள்வோயென வினையெச்ச முடிபாக்கலும் ஒன்று.

வேதம் தருமதேவதைக்குத்தாயா தலை [3]"சதுர்மறைவிடத்திற் றேன்றுந்

1. சைவசமயநெறி பொதுவிலக்கணம்- ௫௨௮.
2. திருவாசகம் போற்றித்திருவகவல்
3. திருவாவடுதுறைப்புராணம் தருமதேவ தைக்கிடபவாகனப் பேறருளியவத்தியா யம்-௬.

தருமதேவதை" என்பதனானும், வேதப் பரியிலிவர்ந்ததை [1]"அண்டகோடிகள னைத்துமோர் பிண்டமா வடுக்கியுண்ட நீரதா முதுகின்மேலுபநிடக் கலனை கொண்ட வாலிய வைதிகப்புரவிமேற் கொண்டான்-றெண்டர் பாசவன் றொடர விழ்த் திடவருஞ்சோதி" என்பதனானும், பிறவிக்கடலைக்கடக்குந் துறையாதலை [2]"வெம்பிறவிவே லைதனில் வீழ்பவர்க ளெல்லா - நம்புசிவ நாமமெனுநற்புணை பிடித்தா—வெம்பர னருட்கரையி லேறு துறை யாமா-லம்புவி மொழிந்துள பெருந் துறை யதன்பேர்" என்பதனானும், குருந்து தவச்சினை முதலியவுடைமையை [3]"வாய்த் தவளமிவ்வகை வயங்குமத னுப்ப-ணேத் தரு தவச்சினைக ளெங்கணு நெருங்க-மீத் திகழறக்துறை தழைத்துமிளிர்மெய்ம்மை-பூத்தறிஞர் போன்றெழில்பொருந்துமோர் குருந்தம்" என்பதனானும், வேதசிறப் பொருள் சைவசித்தாந்தப்பொருளாதலை [4]"வேதநூல் சைவ நூலென் றிரண்டே நூல்கள் வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்க-ளாதிநூ லநாதியம லன் றருநூ லிரண்டு மாரணநூல் பொது சைவ மருஞ்சிறப்பு நூலா-நீதியினுலுல கர்க்குஞ் சத்திநிபாதர்க்கு நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத்-தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல் சைவம் பிற நூறிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்" என்பதனானும், சந்நிதி விசேடத்தாற் பரிபாகமெய்துதலை [5]"கருட னுருவங் கருதுமளவிற்-பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோற்-குருவி னுருவங் குறித் தவப்போதே-திரிமலந் தீர்ந்து சிவனவ னுமே" என்பதனானும், ஞானுதித்தனை வுதித்தமையை [6]"பொய்ம்மையா முலகின் மாயப்பொங்கிரு ளகல வன்னோர்—தம்மை யாழ் நரகிற் றள்ளுஞ் சமயதா ரகை மழுங்க-வெம்மையா னுடையா னன்பரி தயதாமரைக ளெல்லாஞ்-செம்மையாய் மலர ஞான தினகர ருதயஞ் செய்தார்" என்பதனானும் அறிக. (உ0)

கொள்ளை கொள்ள வீடுதவிக்
கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளுந் திருஞான
சம்பந்தா—வெள்ளமிடு
மேடேறப் பால்குறைந்த
தென்றழுவ ரேகழுவின்
காடேறப் புக்கவரு கர்.

(இ - ள்.) கொள்ளை கொள்ள வீடு உதவி-எவரும் கைக்கொள்வான் முத்தியை யீந்து, கூற்றை பிடல்பிடித்து தள்ளும் திருஞானசம்பந்தா-இயமனை எய்தா தகற் றிய திருஞானசம்பந்தவள்ளலே! கழுவின் காடு ஏற புக்க அருகர்-கழுக்கூட்டத்தில் இவரத்துணிந்த அமணர்கள், வெள்ளம் இடும் ஏடு ஏற-வைகை நதிப்பெருக்கி லிட்ட "வாழ்க வந்தணர்" என்னும் திருப் பாசுரத் திருப்பதிகம் வரைந்த ஏடு எதி ரேறிச்செல்லக் (கண்டு), பால் குறைந்தது என்று அழுவரே-தம்பக்கங் குறைந் ததென்று அழக்கத்தக்கவரே, எ-று.

இவ்வியல்பினரென்னும் வரையறை யின்றிப் புக்க எண்ணிறந்தவர்பெறவென் பார், 'கொள்ளைகொள்ள' என்றும், பாலித் தது பதமுத்தியன்று; பற்றகன்ற பரமுத் தியேயென்பார், 'வீடுதவி' என்றும், அது பெற்றூர் இரும்புண்ட நீரிற்றிரும்பாமை யின் இயமனை அவர்மாட்டு என்றும் எய் தாதவனுக்கின ரென்பார், 'கூற்றைப்பிடர் பிடித்துத்தள்ளும்' என்றும், எவரையும் ஞானசம்பந்தராகச் செய்தவரென்பார், 'திருஞானசம்பந்தா' என்றும், வேகவதி யென்பதற்கிணங்கப் பெருகி விரையும் வைகையில் இட்டவேடு, சிவபெருமானே பரம்பொருளெனத்தெளிய, எதிரேறிச் சென்றதென்பார், 'வெள்ளமிடுமேடேற' என்றும், தீயிற்றேல்வியுற்றும் செய்வகை யறிந்துய்யாச் சிதடராகலின், அவர் ஏடேறப்பால் குறையுமென்பது முண ராது, முயலத்தகாக அதின்முயன்று, அழத்தக்கவரேயென்பார், 'பால்குறைந்த தென்றழுவரே' என்றும், எண்பெருங்குன் றத்து எண்ணுயிரவரும் அவர்மாணுக்கரும் ஏறுதற்குத்தொகுத்த எண்ணிலாக்கழு

1. திருவிளையாடல் நரிபரியாக்கிய படலம்-நகூ.
2. திருவாதவூரர்புராணம் திருப்பெருந் துறைச்சருக்கம்-கO.
3. ஷை-கரு.
4. சிவஞானசித்தி எட்டாஞ் சூத்திரம்-கரு.
5. திருமந்திரம் ஞான குருதரிசனம்-ச.
6. திருவாதவூரர்புராணம் மந்திரிச்சருக்கம் ரு.

மரங்களென்பார், 'கழுவின் காடு' என்றும், [1]"இன்ன மறத்தா ரிசைக்கின்றே னீரேன் வாளா விறக்கின்றீர் - அன்னை யனையா னெம்மிறைவ னுவனுக் காளா யுய்மின்கள்" என்று பிள்ளையாரருளவும், இழித்து, வலிந்தேறிய வன்மையரென்பார், 'ஏறப்புக்க' என்றும், திருத்தொண்டர் திருமடத்திற் றீயிட்ட இவர்க்கிது தகுமெனப் பின்விலக்காமையின் அத்தண்டனைக் குரியவரேயென்பார், 'அருகர்' என்றும் கூறினர்.

இதனாற்போந்தது: பிள்ளையாரை வழிபடும் பெருந்தவமிலாத அறிவிலிகள் பலசிந்தையராய், இயலாதனவியலுமென முயலாதனவற்றின் முயன்று, மோகத் தழுந்திப், பிறவியினுழலாநிற்பர்; அறிவுடையார் அங்ஙனமாகாது, [2]"பாரகலத் துன்பங் கடந்தமர ராற்பணியு-மேரகலம் பெற்றாலு மின்னாதாற்-காரகிலின்-றாமங் கமழ்மாடத் தோணி புரத்தலைவ-னாமஞ் செவிக்கிசையா நாள்" என்னுந்துணிவுடையராய் வழிபட்டுய்யா நிற்பரென்பது.

பிடர்பிடித்துத்தள் ளுதலென்பது அணுகாதகற்றலென்னும் பொருட்டாய் உலகவழக்குப்பற்றிவந்தது. ஏடேறப்பால் குறைந்ததென்பதும் அருகரென்பதும் [3]சிலிஷ்டமாய் நின்றன. பால் - ஈண்டுத் தங்கொள்கை. ஏகாரம் தேற்றம். எண்பெருங்குன்றங்களாவன அஞ்சனம் கவுஞ்சம் கோவர்த்தனம் திரிகூடம் காஞ்சி குஞ்சரசையம் ஏமகூடம் விந்தமென்பன; இவைசமணகுரவருறையும் தானங்கள்.

வீடுபெற்றாரெண்ணிறந்த ரென்பதனை [4]"அணிமுத்தின் சிவிகைமுதலணி தாங்கிச் சென்றோர்க்கண்-மணிமுத்த மாலை புனை மடவார்மங் கலம்பெருகும் - பணி முற்றுமெடுத்தார்கள் பரிசனங்கள் வினைப் பாசந் - துணிவித்த வுணர்வினராய்த் தொழுதுடன்புக்கொடுங்கினர். ஆறு வகைச் சமயத்தி லருந்தவரு மடியவருங்-கூறுமறை முனிவர்களுங் கும்பிடவந் தணைந்தாரும்-வேறுதிரு வருளினால் வீடுபெற வந்தாரு-மீறில்பெருஞ் சோதியினு ளெல்லாரும் புக்கதற்பின்" என்பதனானும், வழிபடுவோர் எத்துணைத்தீமையராயினும் அவர்மாட்டும் இயமனணுகாமையை [1]"கடலன்ன பொய்ம்மைகள் செய்யினும் வெய்ய கடுநரகத்-திடநமனேவுதற் கெவ்விடத் தானிருஞ் செந்தமிழாற் - றிடமன்னு மாமதிற் சண்பைத் தலைவன் செந் தாமரையின் - வடமன்னு நீண்முடி யானடிப் போதவை வாழ்த்தினமே" என்பதனானும், அறிவிலிகள் வீண்முயல்வுடையராவ ரென்பதனை [2]"இயலா தனபல சிந்தைய ராயிய லுங்கொலென்று-முயலாதனவே முயன்றுவன் மோகச் சுழியழுந்திச்-செயலார் வரைமதிற் காழியர் கோன்திரு நாமங்களுக் - கயலாரெனப்பல காலங்கள் போக்குவ ராதர்களே" என்பதனானும், சிவபெருமானே பரம்பொருளெனத் தெளிவித்தமையை, [4]"பொருப்பே சிலையாப் புரங்கடந்த புனிதனேயெத் தேவர்க்கும்-விருப்பேய் போகம் வீடுதரு மேலாங் கடவுளென நான்கு - மருப்பேய் களிற்றான் முடிதகர்த்தான் மருமா னறியக் குருமொழிபோ-னெருப்பே யன்றி வேகவதி நீரும் பின்னர்த் தேற்றியதால்" என்பதனானும் அறிக. (உக)

அருகக் கடல்கடந் தேறிய
தோசிலை யம்பியெனப்
பெருகக் கடல்கடந் தேறிய
தோசொல் பெருமிடறு
கருகக் கடல்விட முண்டோ
னடியிற் கசிந்துமன
முருகக் கடவன்பு பெற்றசொல்
வேந்த வுனக்கரிதே.

(இ - ள்.) கடல் விடம் பெரு மிடறு கருக உண்டோன் அடியில்-பாற்கடலினுதித்த நஞ்சத்தைப் பருத்தகண்டம் கறுக்கப் பருகிய பரமருடைய திருவடிகளில், மனம் கசிந்து உருக கடல் அன்புபெற்ற

1. திருவிளையாடல் சமணரைக் கழுவேற்றிய படலம்-ரு௬.
2. திருஞானசம்பந்தர் திருவந்தாதி ௪௦௧.
3. சிலிஷ்டம்-இருபொருட்பதம்.
4. பெரியபுராணத்தில் சம்பந்தமூர்த்தி புராணம்-௧௨௫௨-௧௨௫௫.

1. ௸ அந்தாதி-௨௧.
2. ௸-௬௫.
3. ௸ சமணரைக் கழுவேற்றிய படலம்-௬௫.

சொல்வேந்த-மனம் உருகிக்கசியக் கடல் போலும் அன்பைப்பெற்ற வாகீசமூர்த்தியே! அருகக் கடல் கடந்து ஏறியதோ-சமணக்கடலை நீந்திச் சைவமென்னுங் கரையில் இவர்ந்ததோ?, சிலை அம்பி என பெருகு அக்கடல் கடந்து ஏறியதோ-கல் தெப்பமாக மிதப்பக்கொண்டு பெருகிய அக்கடலைநீந்திக் கரையேறியதோ? உனக்கு அரிது சொல்-தேவரீருக்கு அரியதுயாது செப்புவீராக? எ-று.

அச்சுதனாதியர் அமலரருட்பேறின்றிச் சென்று பாற்கடல் கடைந்துழி அதினின்றும், அந்தகாரவடிவாய் ஆலகாலந் தோன்றி அவனிமுற்றும் நீருகப் பரவி அனலிற்சீறி வருதல் கண்டஞ்சித், திருக்கைலையிற் சரண்புக்காராக; திருவுளமிரங்கி அதைப்பருகி அவர்பிரார்த்தனைப்படி கண்டத்து இருவிய கருணையாளரென்பார், 'பெருமிடறுகருகக் கடல்விடமுண்டோன்' என்றும், அவர் திருவடிகளில் ஒப்பிகந்த உழுவலன்புடையரென்பார், 'கடலன்பு' என்றும், காட்சியான் அளவு காணப்படுதலின்மையும், கருநிறமுடைமையும், தீநாற்றமுடைமையும், பிறவும் செறிந்திருத்தலின், கடலைநிகர்ப்பவரென்பார் 'அருகக்கடல்' என்றும், நீற்றறையிலிடுவித்தல் நஞ்சூட்டுவித்தல் யானையாலிடறுவித்தல் கல்லிற்பிணித்துக்கடலிலிடுவித்தல் முதலிய கடுந்தொழிலுடைய அவ்வருகக்கடலை, அருட்பெருக்கமும் வாக்கின் முதிர்வுமின்றிக் கடந்தமை அரிதன்றி, இவ்வியல்பின இடுக்கண்புரிதலில்லாத இக்கடலை, அருட்பெருக்கமும் வாக்கின் முதிர்வுங்கொண்டு கடந்தமை, அரிதன்றென்பார், 'உனக்கரிதுசொல்' என்றும் கூறினர்.

அற்றேல், உழுவலன்புடையராயின் சமண்சமயம் சாராராகலின் கடலன்பு பின்னர்ப்பெற்றதாதல்வேண்டும்; அங்ஙனமாக, இவர்பாலது உழுவலன்பென்பது எங்ஙனம்பிறவெனின், நன்றுகடாயினை; சமணாதிகளைக்களைந்து சைவத்தைநாட்டுவானவதரித்த இவ்வாசிரியர் உலகநிலையாமைகண்டு, அறங்கள் செய்வாராயொழுகுங்கால், சாதனங்களுள் நீறுசிறந்தாங்குத் தவங்களுட் கொல்லாமை சிறந்ததாகலின், அதுவே சிவகதிக்குரிய நெறியெனத்தேர்ந்து, ஆய்ந்தவழி, சமண் சமயிகள்நடிப்பால் அது அச்சமயத்தின் மிக்குளதாகத்தோன்ற, அமலரும் அதனையழிப்பிப்பான் அதிற்பிரவேசிப்பிக்குந் திருவுளத்தால் உண்மைநெறியின்னதென் றுணர்த்தியருளாமையின், அதிற் புக்கு அதற்குரியவிஞ்சைகளிற் பயின்றுரேனும், அதனுண்மையுணர்தற்கன்றி, உள்ளபடி பிரவேசித்தவரன்றாகலின், மானசீகமாகச் சிவபெருமானை வழிபட்டு வந்தாரென்பது, [1]"ஏற்றுயடிக்கே யிரவும் பகலும் பிரியாதுவணங் குவனெப்பொழுதும்" எனவும், "நெஞ்சம்முமக்கேயிடமாகவைத்தே னினையாதொருபோ துமிருந் தறியேன்" எனவும் "சலம்பூவொடுதூபமறந்தறியேன் றமிழோ டிசைபாடன் மறந்தறியே னுன்னாமமென்ன வின்மறந் தறியேன்" எனவும், இவரருளிய திருவாக்குகளான் வெளிப்படுதலின் உழுவலன்புடையரேயென்க.

அற்றேல், கொடியகுடர்நோயணுகியவழி இச்சிவோபாசனையிருந்தும், அச்சமண் சமயவிச்சைகளான் அகற்றமுயன்றதென்னையெனின், அவற்றிற்பழகித் தேர்ச்சியுற்றுச் சிலசித்திபெற்றமையின் இவ்விச்சையின் இதுவும் அகலுங்கொலென எண்ணிமுயன்றுரென்பது. இன்னோரன்ன ஆசங்கைகள் எழாமைப் பொருட்டுப் பெரியபுராணத்தில் ஆங்காங்குக் குறிப்பித்திருத்தலின் ஆய்ந்துய்த்துணர்க. விரிக்கிற் பெருகும். வினாப் பொருள்பயக்கும் ஓகாரமிரண்டும், முறையே உயர்த்தற்கண்ணும் இழித்தற் கண்ணும் வந்தன. அகரச்சுட்டும் இழித்தற்பொருட்டு. கசிந்துஉருக வென்பன முன்பின்னாகப்புணர்ந்த எச்சத்திரிபுகள். ஒப்பிகந்த அன்புக்கு ஒருபுடை ஒப்புக்கூறியமையின் கடல் ஒப்பலொப்பாய் நின்றது. ஏ-அசை.

விடம் அந்தகாரவடிவாய்ச்சீறியணுக அதைக் கண்டத்திருவியதை [2]"ஏற்றுக்

1. தேவாரம் திருவதிகைவீரட்டானம், கூற்றாயினவாறு.
2. கந்தபுராணம் ததீசியுத்தரப் படலம்-௩௨௮-௩௩௮.

கோடியி னெழுமுகிற் கோடியி னிருண்டு-கூற்றுக் கோடியின் மறங்கொடு திசை தொறுங் குலவுங்-காற்றுக் கோடியின் விரைவினல் வடவையங் கடுந்தீ-நூற்றுக் கோடியிற் பரந்ததவ்விடமெலா னொய்தின். முடிவிலா வுனக்கே யன்ரிரு முன்னுறு பாகமெல்லாம்-விடமதே யெனினு மாக வேண்டுது மிதனை வல்லே-யடியரே முய்யு மாற்ரு லருந்தினை யருண்மோ வென்னக் – கடிகமழ்கமழ் வெய்ந்தோன் கலங்கலீ ரினிநீ ரென்ருன். என்றனன் விரைவிற் றன்கை யேந்திய விடமுட் கொள்ளச்-சென்றது மிடற்றி லன்ன திறத்தினை யாருநோக்கி-யின்றெம துயிர்நீ காத்தற் கிங்கிது சான்ருயங்க-ணின்றிட வருடி யென்றே நிமலனைப் போற்ற லுற்ருர்" எனவருவனவற்ருனுணர்க. (உஉ)

உனற்க ரும்புகழ் மேவிய
சுந்தர னும்பன் மீதிவரா
நினைப்பருங்கயி லாயம
டைந்தமை நின்று காண்குறவே
யெனக்கு வந்துறு மோமக
வென்றழு கின்ற நாளலைபா
றனித்த ருந்துபு மாலை
யுமிழ்ந்திடு தம்பி ரானலனே.

(இ - ள்.) உனக்கு அரும்புகழ் மேவிய சுந்தரன் உம்பல்மீது இவரா-சிந்தித்தற்கரிய சீர்த்திபடைத்த சுந்தரமூர்த்திநாயனர் வெள்ளையானை மேலெழுந்தருளி, நினைப்பு அரும் கயிலாயம் அடைந்தமை நின்று காண்குற - எண்ணுதற்கரிய திருக்கைலையினெய்தியதை எதிர்நின்று தரிசித்தற்கு, மகவு என்று அழுகின்ற நாள்-குழந்தையெனக்கூறுமாறு விளங்கி அழுத அப்பருவத்திலேயே, பால் அலை தனித்து அருந்துபு மாலை உமிழ்ந்திடு-பாற்கடலைத் தனித்துப்பருகி அதின்மிதந்தணுகிய திருமாலை ஆங்குமிழ்ந்த, தம்பிரான் நலன் எனக்குவந்து உறுமோ-உபமன்னிய முனிவர்பாலுற்ற உயர்ந்த சிவானுக்கிரகம் எளியேனுக்குவந்தெய்துமோ! எ-று.

திருக்கைலையிற் பெருமான் தந்திருவுருவப்பொலிவை ஆடியினேக்க, அதிற் பிரதிவிம்பத்துத் தோன்றினவராய்ப், பாற்கடலினுதித்த நஞ்சத்தைக் கொணர்ந்து பரமர்கரத்தீந்தமையின், ஆலாலசுந்தரரெனப் பெயர்பெற்ற அவ்வவதாரத்தும், இவ்வவதாரத்தும் அளவிறந்த அற்புதப் புகழுடையரென்பார், 'உனற்கரும்புகழ் மேவிய சுந்தரன்' என்றும், அவனிமுற்றும் அழியுங்காலத்தும் மேருவாதிய போலழிதலின்றி அண்டத்தினடி முடிகாறும் நிலைபேறுடையதாய், விமலர்வீற்றிருக்கப் பெற்று, எவர்க்கும் விழையும் இஷ்டசித்திகளையீந்து விளங்கலின், சிவநேசர்க்கன்றி மற்றையர்க்குமனத்தினும் சிந்தித்தற்கரிதென்பார், 'நினைப்பரும்' என்றும், திருமாலாதியர் சேவித்துவரத், துணைவர் முற்செல்ல, வெள்ளையானையிலிவர்ந்து செல்லும் வித்தகக் காட்சியாகலின், இது ஏனைக்காட்சிபோல்வதன்றென்பார், 'கயிலாயமடைந்தமைகாண்குற' என்றும், உபமன்னியமுனிவர் சிறுவர்போற்ருேன்றினும், சிறுவரன்று, தேவசித்தரென்பார், 'மகவென்று' என்றும், இவர் தந்தாயுடனுதித்தவசிட்டமுனிவராச்சிரமத்தே காமதேனுவின்பாலை நுகர்ந்து சுவைகண்டாராய், அன்னைபாலணுகிப் பால்வேண்டியழுதலும், அவர் வறுமையிற்கவன்று, மாவைக்கரைத்தளித்து உரைத்தவாறு, அம்பிகாபதியை வழிபட்டுப் பெற்ற பாற்கடலைப் பருகுங்கால், அதினடைந்த அச்சுத மீர்த்தியைத் துரும்புபோன்றுமிழும் ஆற்றல், அழும்பருவத்திலேயே அமைந்தவரென்பார், 'அழுகின்றநாள லைபாறனித்தருந்துபுமாலையுமிழ்ந்திடு' என்றும், பாற்கடலையேயன்றிஇறவாப்பதத்தை இறைவியாலும், பாசுபதஞானவிரதயோகங்களையும், ஆகமங்களைவகுத்து மொழிந்தருளும் ஆசிரியத்தலைமையையும், இறைவராலுமெய்திக், கண்ணபிரானுக்கும் திருவடி தீக்ஷை புரிந்து, திருக்கைலையினடியிற், பல்லாயிரமுனிவர்களும் சுத்தயோகிகளும் சூழவீற்றிருக்கும் தலைமைபெற்றவரென்பார், 'தம்பிரான்' என்றும், இத்துணைச் சிவானுக்கிரகம் அவர்க்கிருந்தமையின், ஆயிரஞாயிறுபோன்றொளிதிகழ இவ்வாளுடைய நம்பிகளெழுந்தருளுங்கால் ஐயுற்ற முனிவராதியர்க்கு, [1]"தம்பிரானைத் தன்னுள்ளந்தழீஇயவ-னம்பியாரூரனுந் தொழுந்தன்மையான்" எனச்செவியறிவுறுத்து, எதிர்சென்று தரிசிக்கப்பெற்ருர்;

1. பெரியபுராணம் திருமலைச்சிறப்பு-கரு.

அங்ஙனமே, ஆவலுற்றயானும் தரிசித்தற்கு அவர்பெற்ற சிவானுக்கிரகம் வந்தணுகுங் கொலென்பார், 'நலனெனக்கு வந்துறுமோ' என்றும் கூறினர்.

காண்குற நலன் உறுமோவென இயையும். உறின், எக்காலத்தேனும் அரிது தரிசிக்கப்பெறலாமென்ப திசையெச்சம். ஏ-அசைகள். ஓ - எதிர்மறை. என்று எச்சத்திரிபு. அலை சினையாகு பெயர். தனித்தருந்துபு என்பது அருந்துதற் கருமைதோன்றநின்றது. தம்பிரான் அலனெனக் கண்ணழித்துரைப்பாருமுளர்; அது நலவலிவாதவூரென முன்னர்த்தொடங்கும் அந்தாதித்தொடக்கு இயைபின்மைமேலும் போதப் பொருட்பொலிவின்மையும் தெளிக.

தேவசித்தராதல் முதலியவற்றை "உலகில் வாழுஞ் சிறுவரைப்போற் சிறுவனேமற் றிவனேங்கி-நிலவு வானி லுறை சித்தனிலவு மந்த வானீஞ்சி-யலகிறவத்து வியாக்கிரபா தனுக்கு மகவாயடைந்தனனற்-கலைவெண் டிங்கண் முடித்தசடைக் கண்மூன் றுடையோ னருளினல்" எனவும், "பணிந்த வவனை யுழைக்கூவி யுச்சிமோந்து பரமேட்டி-பிணங்கு விழிமாதினைநோக்கி யுன்றன்பிள்ளை யிவனென்ன-வணங்கு மருங்குன் மற்றவளு மலர்க்கை யவன்றன் றலைமேல்வைத்-துணங்கி யிறவாப் பதந்தன்னை யடைதியென்ன வுதவினளால்" எனவும், "அரன்றன் பாசு பதஞானம் விரதம் யோகமழிவின்றித்-திருந்தி விரிந்த சங்கிதையாகமங்கள் செய்யுஞ் செயல்கொடுத்து-விரிந்த வானத் துறையமரர் முனிவர் விழைந்து போற்றிசைப்பப்-பொருந்தியடைந்தான் வடகயிலைப்பொன்னஞ் சாரலெனப் புகன்றான்" எனவும் வருவனவற்றானும், பாற்கடல்பருகித் திருவடிதீக்ஷை செய்தமையை [2]"அத்தர் தந்த வருட்பாற்கடலுண்டு-சித்த மார்ந்து தெவிட்டி வளர்ந்தவன்" எனவும் "யாத வன்றுவரைக்கிறை யாகிய-மாத வன்முடி மேலடி வைத்தவன்" எனவும் வருவனவற்றானும் அறிக. (உ௬)

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ
மனநின் றுருக்கு மதுர வாசக
கலங்குறு புலனெறி விலங்குறு வீர
திங்கள் வார்சடைத் தெய்வ நாயக
ஞொருகலையேனு முணரா னஃதான்று
கைகளோ முறிபடுங் கைகள் காணிற்
கண்களோ வொன்று காலையிற் காணு
மாலையி லொன்று வயங்கித் தோன்றும்
பழிப்பி னொன்று விழிப்பி னெரியு
மாயினுந் தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யு ளெழுதின னதனாற்
புகழ்ச்சி விருப்பன் போலு.
மிகழ்ச்சி யறியா வென்பணி வானே.

(இ-ள்.) நலம் மலி வாதவூர் நல்இசை புலவ-வளநிரம்பிய திருவாதவூரிலவதரித்த செவ்விய சீர்த்திபெற்ற புலமையுடையவரே!—மனம் நின்று உருக்கும் மதுரம் வாசக-(உன்னுந்தோறும்) உளத்தினிலவி அதையுருக்கும் இனிய திருவாசகத்தை இசைத்தருளியவரே! கலங்குறு புலன்நெறி விலங்குறு வீர-நிலைதவறுதற்கேதுவாகும் ஐம்புலநெறிகளினீங்கிய ஆண்மையையுடையவரே!—திங்கள் வார்சடை தெய்வ நாயகன்-சிறுமதிமிலைந்த நெடுஞ்சடையையுடைய தேவாதிபர்,—ஒரு கலையேனும் உணரான்-வேத முதலிய கலைகளுள் ஒன்றும் உணரார்;-அஃதான்று கைகளோ முறிபடும் கைகள்-அதுவன்றித், திருக்கரங்களோவெனில், முறிபடுந்திறத்தவாம்;—கண்களோ காணின்-திருக்கண்களோவெனில், தேர்ந்துணரின்,—ஒன்று காலையில் காணும்-ஒன்று காலையிற்றோன்றும்;-மாலையில் ஒன்று வயங்கி தோன்றும்-மற்றொன்று மாலையில் விளங்கும்;—பழிப்பின் ஒன்று விழிப்பின் எரியும்-பழிப்பினையுடைய பிறிதொன்று விழித்தவழிஅப்பார்வையிற்பட்டவை நீறாகும்; — ஆயினும் தன்னை நீ புகழ்ந்து உரைத்த-இங்ஙனமிருப்பினும், தம்மைத் தேவரீர் புகழ்ந்திசைத்த,—பழுது இல் செய்யுள்-பழுதற்ற திருப்பாடல்களை-இகழ்ச்சி அறியா என்பு அணிவானே எழுதினன் அதனால்-இகழ்வு சிறிதும் பெறாத என்பை யணிபவராகிய அவ்விறைவரே எழுதினராகலின்,-புகழ்ச்சி விருப்பன் போலும்-அவர் புகழ்ச்சிக்கண் அதிகாதலர்போல்வர். எ-று.

(தொடரும்)

1. வாயுசங்கிதை உபமன்னியுவின்பேறுரைத்தவத்தியாயம்-உ-கக-௪௩.
2. ஷை திருமலைச்சிறப்பு-௪௫-௪௭.